# இருக்கிறம்

மாதம் இருமுறை

ISSN 1800-3699

காத்திருப்பு 5 - இருக்கை 4 ஒரு வெளிப்பாடுமில்லை 01-15 ஏப்ரல் 2010



50/-


இலவச
இணைப்பு உள்ளே


5ம் தரம் புலமைப்பரிசில்
மாதிரி வினாத்தாள்

கரை சேருமா
பாகிஸ்தான்!!

தலைநகரில்
மிரட்டும் பிச்சைக்காரர்கள் !

வினைத்திறன் மிக்க சேவை நிர்வாகம் மற்றும் பிரஜைகளின் ஆலோசனை பெறல் என்பவற்றினூடாக பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என்பவற்றுடன் இணைந்து செயற்படும் ஒரு உயரிய அமைப்பே "இலங்கை ஆசிய நிலையம்" உள்ளூராட்சி சபைகளின் வெளிப்படையான தன்மையை மேம்படுத்தி, சிறந்த பொருளாதார வளர்ச்சியை பொதுமக்கள் அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதே ஆசிய நிலையத்தின் முக்கிய நோக்கமாகும்.




நியாயமான, சுதந்திரமான நீடித்து நிலைத்திருக்கும் உலகம். இதற்குத்தான் அபிவிருத்திக் கூட்டுறவுக்கான மனிதநேய நிறுவனம் HIVOS பங்களிக்க விரும்புகிறது. சகல பிரஜைகளும் அதாவது ஆண்களும், பெண்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும், வளங்களையும் சம அளவில் அடையக்கூடியதான ஒரு உலகிற்காக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள உள்ளூர் அமைப்புகளுடன் இணைந்து HIVOS பாடுபடுகிறது.

மனிதநேயப் பெறுமானங்களினால் வழிநடத்தப்படும் HIVOS, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்பாகும். இவ்வமைப்பு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவிலுள்ள வறிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைக்கிறது. இம் மக்களது சூழ்நிலைகளின் நீண்டகால அபிவிருத்திக்காகவும், குறிப்பாக பெண்களை வலுப்படுத்தவும் இது பாடுபடுகிறது.


ஒரு பொல்லாப்புமில்லை

# இருக்கிறம்

மாதம் இருமுறை

இதழ் 52

காத்திருப்பு 05 - இருக்கை 04

ஈகோ மீடியா பிறைவேட் லிமிட்டட் வெளியிடுகிறது

#3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 11 3150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukiram@gmail.com

ஸ்தாபக ஆசிரியர் :
இளையதம்பி தயானந்தா

நிர்வாக ஆசிரியர் :
சாந்தி சச்சிதானந்தம்

இணை ஆசிரியர் :
அருளானந்தம் சஞ்ஜீத்

ஆசிரியர் குழு :
பஸ்லான் மொஹமட்

ஓவியர் :
சஞ்ஜீத்

வடிவமைப்பு :
சோ.விபுலன்
செ. ஜெயதேவன்
சி.திவாகரன்

புகைப்படம் :
பா.கரன்
சோ.விபுலன்

கணனி தட்டச்சு :
எஸ். சதீஸ்


கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.

கொழும்பு ... நூ...












## சிறகுகள்

வணக்கம் என் தமிழ்ப் பறவைகளே!

கிளையொன்றில் நிம்மதியாக அமர்ந்திருக்கும் என் உறவுப் பறவைகளே, உங்களோடு சில வார்த்தைகள். உங்கள் பாடு இப்போது சுகமாய் இருப்பதாய், நீங்களே கூவி உரைப்பதாய்க் காற்றுச் சொல்கிறது. வசந்தம் கை கூடி விட்ட மகிழ்ச்சியில் நீங்கள் மகிழ்வோடு இருப்பதாக அங்கும் இங்கும் அலையும் சில 'விசா'ப் பறவைகள் சொல்லிச் செல்கின்றன.

உங்களோடு கூடிப் பறந்த ஏனைக் குருவிகள் சார்பாய் மடல் எழுதும் கட்டாயம் ஒன்று எனக்கிருக்கிறது. காலம் காலமாய் நாம் சிறகு விரித்த நீள்பயண நினைவு இதயத்தில் எழுகிறது. வானமே எல்லையாய் நாம் பறந்த காலங்களை இச் சின்ன மனது இரை மீட்டுகிறது. பெருங்காற்றும், மழையும், சுடு வெப்பப் பருவங்களுமான பேரலைச்சல்கள் நடுவே நாங்கள் பயணப்பட்டிருக்கிறோம். வான எல்லைகளை நோக்கிய எம் பயணத்தில் குஞ்சும் குருமனுமாக எத்தனையோ சின்னஞ் சிறுசுகள் கருகி விழுந்திருக்கின்றன. அவற்றை இருப்புக் கருதி நீங்கள் மறந்தாலும் தொலைந்து தவிக்கும் என்னால் மறக்க முடியவில்லை.

தொலைந்து போவதைவிட இருந்து வாழ்தலே மேல் என்று நீங்கள் நினைப்பதில் சத்தியமாய்த் தவறில்லை. ஆனால் வசந்த காலக் கிளைகளே வாஸ்தவம் என்றிருப்பது பெருந்தவறு.

இது 'தேர்தல்' வசந்தம். திரும்பும் இடமெல்லாம் காயும் கனியும் கண்ணில் தெரிகிற காலம். 'வசதி'த் தென்றல் உடல் தழுவும் நேரம். கண்ணில் பட்டதெல்லாம் பசுமையாய் விரியும் காலப் பொழுது இது. ஆனாலும் இதுவே நிரந்தரமானதல்ல. உதிர்வுக் காலம் தூரத்தில் இல்லை. முட்டை தின்ன வராத பொந்துப் பாம்புகள் வெளிவரும் காலம் மிக அருகிலேயே காத்திருக்கிறது.

இனிய உறவுப் பறவைகளே, கீழ்க் கிளையில் இருந்து மேல் கிளைக்குத் தாவுவதே கடமை என்று கருதிக் கிடக்காதீர். அதற்காக எம் மூத்த பறவைகள் போல சாம்பலிலும் உயிர்ப்போம் என்று உங்களைத் தீக்குளிக்க அழைக்கவில்லை. அதேவேளை கிடைத்த கிளைகளே இருப்பு என்று தீர்மானிக்காதீர்கள் என்றே அழைக்கிறேன்.

கிளைகளை நம்பி அமர்வதில்லை பறவைகள். அவை தம் சிறகுகளை நம்பியே அமர்கின்றன என்பதை மனதில் இருத்துங்கள்.

சிறகு விரித்தபின் சிரிக்க நினைக்கும்.

ஆசிரியர்
01-04-2010



இருக்கிறம்

Free Issue
Irukkiram




'புதுப்புது திசைகளால
இருக்கேலாம இருக்கு...'

# பதிப்பகத்தார்

இம்முறை வடக்கு கிழக்கில் முன்னெப்போதும் கண்டிராத வகையில் ஏராளமான கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தேர்தல் போட்டியில் இறங்கியிருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 சுயேட்சைக் குழுக்களும் 18 கட்சிகளும் போட்டியிடுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் 40 சுயேட்சைக் குழுக்கள் களத்தில் இறங்கியுள்ளன. தமக்கு எதிரான கட்சிகளின் வாக்குகளைப் பிரிப்பதற்கு ஒரு தந்திரமாக சுயேட்சைக் குழுக்களை உருவாக்கும் முயற்சியில் சில பிரதான கட்சிகள் ஈடுபட்டது இதற்கு ஒரு காரணம். அதைவிடவும் கட்சி முகவர்களை அடித்துத் துரத்தி விட்டு வாக்குகளை எண்ணும் நிலையங்களில் மோசடி செய்வதுதான் இப்போது ஃபாஷனாகப் போனதாலே இந்நிலையங்களில் நிற்கக்கூடிய கட்சி முகவர்களை அதிகரித்து மோசடிகளைக் குறைக்கும் நோக்கத்துடனும் சுயேட்சைக் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. ஏனெனில் ஒவ்வொரு கட்சியும், குழுவும் தங்கள் சார்பில் 5 முகவர்களை ஒவ்வொரு நிலையங்களிலும் நியமிக்கலாம். இப்படிப் பார்த்தால் இம்முறை நூற்றுக்கணக்கான முகவர்கள் வாக்குச் சாவடிகளுக்குள்ளும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்குள்ளும் இருக்கப் போகிறார்கள். இவர்களையெல்லாம் அடித்துத் துரத்துவதற்கு ஒரு படையே தேவையல்லவா. அதுவும் நல்லதுதான். எப்படி நசுக்கப் பார்த்தாலும் தலையை ஓட்டியே தீரும் நம் மக்களின் சமயோசித உபாயங்களை மெச்சத்தான் வேண்டும்.

ஆனால் இக்காரணங்களையெல்லாம் தாண்டி தமிழ் மக்களின் அரசியலில் இந்த அளவிலான சுயேட்சைக் குழுக்களின் வரவு வேறு நிலவரங்களையும் எடுத்துச் சொல்வதாகின்றது. விடுதலைப் புலிகளின் மறைவுக்குப் பிறகு அவர்களின் அரசியல் தலைமைத்துவத்தில் ஏற்பட்ட இடைவெளியினை நிரப்புவதற்கு பலர் முண்டியடிக்கின்றனர் என்பதே உண்மை. இதுவரை காலமும் இருந்து வந்த அரசியல் தலைவர்கள் ஒன்றில் விடுதலைப் புலிகளினதோ அல்லது அரசாங்கத்தினதோ ஏவலாட்களாக இருப்பதையே எமது வன்முறை சார்ந்த அரசியல் நிர்ப்பந்தித்திருந்தது. இப்பொழுதோ புலிகளைக் காரணங்காட்டி ஏதோவொரு பக்கச் சார்பான நிலைப்பாடுகளை எடுக்காமல் ஒரு சுயாதீனமான அரசியல் பாதையை வகுக்க வேண்டிய கட்டாயத் தேவை சகல கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. அடுத்ததாக அந்தக் காலத்தில் தொடர்ந்து தலைமை நிலையில் இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்கூட புலிகள் யுகம் முடிவடைந்த பிறகும் தங்களுடைய தலைமையைத் தக்கவைத்துக் கொள்ளக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அவர்களுடைய நடவடிக்கைகளும் இந்தத் தேர்தல் போட்டிகளுக்கு கணிசமான முறையில் வழிவகுத்து விட்டன.



## காத்திருக்கும் ஏப்ரல் '8'







இந்தக் குறைபாடுகளை ஒவ்வொன்றாகக் கூறுவதானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு உட்படுத்தும் அரசியலைக் (inclusive politics) கையாளாததை முதலில் குறிப்பிடலாம். எங்கள் சமூகத்தின் இருப்பிலும் அதன் போக்கிலும் செல்வாக்கு செலுத்துபவையாக இருக்கும் சக்திகள் தாம் எமது அரசியல் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும். அவர்கள் எல்லோரையும் உள்ளிழுத்து சகலருக்கும் பொதுவான தலைமைத்துவத்தினை வழங்கியிருக்க வேண்டும். துரதிஷ்டமாக அது செய்யப்படவில்லை.

ஆரம்பத்திலேயே சகல தமிழ் அரசியல் கட்சிகளுடனும் தமிழ் சிவில் சமூகத்தினருடனும் வெளிப்படையான முறையில் வருங்காலக் கொள்கைகள் தொடர்பாக கலந்தாலோசிக்கப்படவில்லை. எந்தப் பொது நிலைப்பாட்டில் அனேகக் கட்சிகளையும் ஒன்றிணைக்க முடியும் என்பது ஆராயப்படவில்லை. அந்த விவாதத்தை பத்திரிகைகளிலும் வேறு தொடர்பூடகங்களிலும் பகிரங்கப்படுத்தி மக்களையும் அதற்குள் இணைக்கவில்லை. மக்களையும் சிவில் சமூகத்தினரையும் அரசியல் கட்சிகளையும் இவ்வாறு வெவ்வேறு உபாயங்கள் மூலம் ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்களேயானால் தங்களது தலைமையைத் தக்க வைக்கும் முதல் படியில் நின்றிருப்பார்கள். தமிழ் சமூகத்தில் தரமான புதிய தலைமைத்துவங்களை அடையாளம் காண உதவி செய்திருப்பார்கள். புதிய கருத்துக்கள் மற்றும் அரசியல் நகர்வுகள் தொடர்பான உத்திகள் வெளிவருவதற்கு உதவி செய்திருப்பார்கள். ஆனால் அவர்களுடைய நடவடிக்கைகள் எல்லாமே தமது கட்சியின் செல்வாக்கைப் பயன்படுத்தி தமக்கு வேண்டிய நபர்களை வைத்துப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறுவதே குறியானது போல் தோற்றமளித்தன. ஏனெனில் பரந்த அளவில் ஒவ்வொரு குழுக்களையும் உள்ளிழுத்துக் கொண்டால் இனி அவர்களுக்கும் ஏதோவொரு சீட்டைக் கொடுக்க






வேண்டிய நிலைமை ஏற்படுமல்லவா? அந்த நிலையைத் தவிர்த்துக் கொண்டு பாராளுமன்றத் தேர்தல்களுக்கான வேட்பாளர் தெரிவுகளையும் அவர்கள் காதும் காதும் வைத்தாற்போல் செய்து கொண்டார்கள். பழைய, சாரமில்லாத சேவையுமில்லாத உறுப்பினரையே திரும்ப வேட்பாளர்களாகப் போட்டு பலரின் கண்டனங்களையும் வாங்கிக் கட்டிக் கொண்டார்கள்.

இந்த குறுகிய நோக்கு ஒரு கட்சியும் சாராத பல சுயேட்சைக் கட்சிகள் கச்சை கட்டிக் கொண்டு இறங்க வழி வகுத்தது. கூட்டமைப்பின் தலைமைக்கான மாற்றுத் தலைமையை வழங்குவதாக அவை கூறிக்கொண்டாலும் உண்மையில் அதன் வாக்குகளை உடைப்பதற்கே இவை கோதாவில் குதித்தன என்பதே உண்மை. இந்தக் கோபத் தீயிற்கு மேலும் எண்ணெய் ஊற்றுவதுபோல இருந்தது கூட்டமைப்பின் கொள்கைத் திட்டம். தமிழ்த் தேசியம் சுய நிர்ணய உரிமை போன்ற விடயங்களை அது அடக்கி வாசித்தது. இதனால் விடுதலைப் புலிகள் விட்டுப்போன அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றிச் செல்வதற்கெனவும் சில குழுக்கள் போட்டியில் இறங்கின.

சென்ற வருடத்து நிகழ்வுகள் பல பாடங்களை எங்கள் மக்களுக்குப் புகட்டியிருக்கின்றன. இந்திய அரசாங்கத்தை நம்பி நின்றது, பொய்த்துப் போனது ஒரு பாடம். தமிழ் மக்களுக்கு 22 பிரதிநிதிகள் இருந்தும் என்ன அவர்கள் பேச்சு எந்த முக்கியமான மேடையிலும் கொழும்பிலோ அல்லது டில்லியிலோ அல்லது பிரஸ்ஸல்ஸிலோ செல்லுபடியாகவில்லை என்பது இன்னொரு பாடம். ஆனால் அதே நடைமுறைகளைத் திரும்பவும் செய்யத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னுடைய திட்டமாக முன்வைத்திருக்கின்றது. போதாக்குறைக்கு சென்ற முறை தெரிவான கூட்டமைப்புப் பிரதிநிதிகள் எவரும் பல பிரச்சினையான கால கட்டங்களில் மக்களுக்கு ஆதரவாக அவர்களுடன் நிற்கவில்லை என்பதும் பெருங்குறையாக உள்ளது. தமிழ் வாக்காளர்கள் உண்மையில் குழம்பி போய்த்தான் நிற்கின்றார்கள். தமிழ் பிரதிநிதிகள் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்கின்ற வேட்கை ஒருபுறம் இருந்தாலும் தாம் பாரம்பரியமாக ஆதரித்து வந்த கூட்டமைப்பினை விட்டு ஒரு மாற்றுக் கட்சியை ஆதரிக்க வேண்டும் என்கின்ற. உத்வேகமும் கூடிக் கொண்டு வருவதைப் பார்க்கின்றோம்.

இந்த ஆர்வத்தை பிற கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் அறுவடை செய்து கொண்டு போவார்களா இல்லையா என்பதை ஏப்ரல் 8ந் திகதிதான் சொல்ல வேண்டும்.



## தோட்டியின் பதிவு

# தலைநகரில் மிரட்டும் பிச்சைக்காரர்கள்

அன்றாடம் எமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக நாம் அதிகமாகப் பயன்படுத்தும் போக்குவரத்துச் சாதனம் என்றால் அது பஸ் வண்டியாகத்தான் இருக்க முடியும். பலரும் பலவித தேவைகளுக்காக இந்த பஸ் வண்டிகளை பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் அன்றாடம் பிச்சையெடுப்பவர்கள்கூட தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த பஸ் வண்டிகளைப் பயன்படுத்துவது வேதனையான ஒரு விடயமே. பஸ்ஸில் பயணம் செய்பவர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் ஒரு தொல்லையான பிரச்சினைதான் இந்தப் பிச்சைக்காரர்கள். பிச்சைக்காரர்கள் என்ற பெயரில் இன்று பல்வேறு பேர்வழிகள் பஸ்ஸினுள் பணம் சேர்த்து சுகம் கண்டுவிட்டனர்.

இவர்களால் பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர். அன்றாடம் நான் பயணம் செய்யும் 103 மற்றும் 154 இலக்க பஸ் வண்டிகளில் இந்த தொல்லைக்கு பஞ்சமே கிடையாது. காலையில் அலுவலகம் செல்ல காத்திருப்போர் பலர். காலையிலேயே ஓடிவந்து அழுது புலம்பி எம்மை எரிச்சலூட்டுவது ஒருபுறமிருக்க அழுக்கு உடைகளுடன் சாராய நெடி வீச அருகில் வந்து நின்றாலே மணம் வயிற்றைக் குமட்டத் தொடங்கிவிடும். ஒரு நல்ல காரியத்துக்கு செல்லும்போது இவர்களது புலம்பலையா கேட்டுச் செல்வது?

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

கொழும்பு பஸ் பிரயாணத்தில் பிச்சைக்காரரின் தொல்லை தாங்க முடியாது. கைக்குழந்தைகள் அல்லது அவர்களின் போட்டோக்கள், எக்ஸ்-ரே படங்கள், வைத்திய அறிக்கை அல்லது உடலிலே எங்கேனும் ஓர் வெள்ளைத் துணிக்கட்டு. இவைகள்தான்' இவர்களின் மூலதனம். காட்டிக்காட்டி கூவி விற்று பிச்சை எடுப்பார்கள். என்ன செய்ய..? பயணிகளுக்கு இடைஞ்சல், எரிச்சல். ஆனால் அவர்களுக்கோ எரியும் ஒரு சாண் வயிற்றுக்கான போராட்டம். ஆனால் இது எல்லோருக்கும் பொருந்துவதாக என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. சராசரியாக இவர்கள் ஒரு பஸ்ஸில் ஏறி இறங்கினாலே கையில் 200 ரூபாவுக்கு குறையாமல் பெறுவதாக ஒரு பிச்சைக்காரர் என்னிடம் பெருமைப்பட்டுக்கொண்டார்.



அன்றொருநாள் பஸ்ஸில் ஏறிய பிச்சைக்காரன் ஒருவன் சாரதிக்கு அருகில் வந்து சனங்களை நோக்கி தலை குனிந்து வணங்கினான். பின்னர் தன் கையிலிருந்த பொருளொன்றைத் தாளமாக்கி பாட்டுப் பாடினான். சிங்களப் பாட்டுத்தான். வரிகள் நன்றாகப் புரியவில்லை. ஆனால் இசைக்கேது மொழி...? அவனின் குரலசைவும் அந்தத்தாளமும் ரசிக்கக்கூடியதாக இருந்தது. என் பக்கத்தில் நின்ற 50 வயது மதிக்கத்தக்க ஒருத்தர் அவன் பாட்டுக்குத் தானும் வாயசைத்து தாளம் போட்டார். உண்மையில் பிச்சைக்காரர்கள் சிறந்த கலைஞர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இவர்களை கலையுலகம் சிறப்பாக பயன்படுத்தியிருந்தால் சிறந்த கலைஞர்களாக மிளிர்ந்திருப்பார்கள் என மனதில் நினைத்துக்கொண்டேன்.

இவர்களில் இன்னொரு ரகமும் இருக்கின்றனர். தங்கள் உடலில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டதாக கூறிக்கொண்டு தங்கள் ஆடைகளை விலக்கி உடல் உறுப்புக்களை திறந்து காட்டுகின்றனர். காலைத் தூக்கி முகத்துக்கு முன் காட்டுகின்றனர். ஆண், பெண் இருபாலாரும் சேர்ந்து தான் பஸ்ஸினுள் பயணிக்கிறோம். இவர்களில் இந்த செயல் எம்மை மிகவும் தர்மசங்கடத்திற்கே உள்ளாக்குகின்றது.

அண்மையில் நான் அலுவலகம் செல்வதற்காக 154 இலக்க பஸ்ஸினுள் ஏறி பஸ் புறப்படும்வரை காத்திருந்தேன். பஸ்ஸினுள் கூட்டம் நிறைந்துவிட்டது. திடீரென ஒரு பிச்சைக்காரர் ஏறினார். பஸ் நடத்துனரோ சிங்களத்தில் "தெங் அத்துள யன்ன பே. ஒயா பஹின்ன. (இந்த நேரத்தில் பஸ்ஸுக்குள் ஏற முடியாது. கீழே இறங்கு) என்றார் சற்று கடுமையாக. இருந்தும் அவர் கேட்காமல் உள்ளே புகுந்து விட்டார். அவர் அணிந்திருந்தது வெள்ளாவியில் போட்டாலும் வேகாத கந்தைத் துணி. மூக்கை மூடிக் கொள்ளும் அளவுக்கு துர்நாற்றம். எல்லோர் மீதும் உரசி இடிபட்டுக் கொண்டு உள்ளே புகுந்தார். நின்று கொண்டிருந்த ஒவ்வொருவர் முகத்திலும் நிழலாடிய தர்மசங்கடம்தான் எனக்கும். என்ன செய்ய? இவர்களை பஸ்ஸினுள் ஏறவிடாது தடுப்பது பஸ் நடத்துனர், ஓட்டுனர் கைகளில்தான் இருக்கின்றது. ஆனால் பஸ் நடத்துனருக்கும் பிச்சைக்காரர்கள் குறிப்பிட்ட சில தொகையை கொமிசனாகக் கொடுப்பதாக பின்னர்தான் அறிந்தேன்.

இன்று எல்லோருமே நன்கு அனுபவப்பட்ட ஒரு பிரச்சினைதான் பஸ்ஸினுள் துண்டுச்சீட்டு விநியோகம். அனேகமாக பெண்கள்தான் இம்முறையைக் கையாளுகின்றனர். ஆரம்பத்தில் யாராவது ஒரு வைத்தியரின் போலிச்சான்றிதழ் மற்றும் கையொப்பம் என எம்மை ஏமாற்றிய பேர்வழிகள் இன்று சுலபமாக மக்களை ஏமாற்றலாம் என தெரிந்துகொண்டார்கள்




போலும். வெறுமனே டைப் செய்து போட்டோ பிரதிகள் எடுக்கப்பட்ட சிறு சிறு சிட்டைகளை கேட்டும் கேட்காமலும் எமது மடியில் போட்டு விட்டு போவார்கள். வேண்டாத விருந்தாளியாக தங்களது மடியில் வந்து கிடக்கும் அவற்றை என்ன செய்வதென்று தெரியாமல் பலர் விழிபிதுங்குவதை நான் பலமுறை கண்ணுற்றுள்ளேன். அவர்கள் தரும் துண்டுச் சீட்டுக்கு நாங்கள் பணம் கொடுக்காது விட்டால் எங்களை ஒருமுறை முறைத்துப் பார்த்து விட்டுச் செல்வர். இவர்களுக்கு கைகளும் கால்களும் நன்றாகத்தானே இயங்குகின்றன? இவர்களுக்கு பேச வராதாம். காது கேட்காதாம். ஒரு கால் இன்றி, கை இன்றி சுயதொழில் செய்து பிழைக்கும் எத்தனையோ நபர்களை நாம் ஊடகங்களுடாக பார்த்துவருகிறோம். இவர்களுக்கு காசு கொடுப்பதானது சோம்பேறித்தனத்துக்கு உரம் போடும் செயலாகிவிடும்.



அண்மையில் 155 இலக்க பஸ்ஸில் நடந்த ஒரு சம்பவத்தை குறித்த பஸ் நடத்துனரும் ஓட்டுனரும் என்னுடன் பகிர்ந்துகொண்டபோது இப்படியும் நடக்கிறதா என்று என்னை வியப்படைய வைத்தது. கை உடைந்த மனிதன் ஒருவன் கல்கிஸ்ஸ கோர்ட்டுக்கு முன் ஏறுவாராம். குறித்த வண்டியின் நடத்துனர் அம்மனிதனை ஏற அனுமதிப்பதில்லையாம். ஒருநாள் அம்மனிதன் கீழே குனிந்துகொண்டு "நீ ஒவ்வொரு முறையும் எனக்கு இடையூறாக இருக்கின்றாய். ஒரு நாளைக்கு உன்னை குத்தாமல் விடமாட்டேன். இனி இந்த வேலை வைத்துக்கொள்ளாதே" என்றானாம். ஆத்திரம் மேலோங்க அவனைத் திட்ட வாயெடுத்த நடத்துனர் அவனுடைய இடுப்பில் செருகியிருந்த கத்தியைக் கண்டு வாயடைத்துப் போனாராம். பாருங்கள் எந்தளவுக்கு துணிந்து இதை தொழிலாக செய்து வருகின்றனர் என்று. இனி இவர்களிடம் சற்று ஜாக்கிரதையாகத்தான் இருக்கவேண்டும். அதைவிட இப்படியானவர்கள் பாதாள உலகத்தினருடனோ அல்லது புலனாய்வுப் பிரிவினருடனோ தொடர்புகளை பேணிவருவது வேறுகதை.

சிலர் இருவராக வருவர். அண்மையில் பொரளை பஸ்

தரிப்பிடத்தில் நடந்த சம்பவம் ஒன்று அனைவரினதும் பார்வையை திசை திருப்பியது. ஒரு பெண்ணின் கையைப் பிடித்து ஒரு ஆண் கூட்டிச் சென்றார். 103 இலக்க பஸ் வண்டியில் ஏறி காசு சேர்த்துக்கொண்டு கீழே இறங்கியதும் அந்த மனிதன் அப்பெண்ணிடம் காசைக் கேட்டு சண்டைப்பிடித்து மிரட்டினான். பஸ்ஸில் அவன் அப்பெண்ணை தன் தாயார் என கூறினான். பின்புதான் அது ஒரு வியாபாரம் என்று விளங்கியது.

கொழும்பில் தமிழர்கள் அதிகளவில் பயணிக்கும் 155 இலக்க பஸ்களில் (ஹெட்டியாவத்தை-சொய்சாபுர) தமிழர்களும் பிச்சையெடுக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். கொட்டாஞ்சேனை அல்லது ஆமர் வீதியில் வைத்து வயதான ஒருவர் பஸ்ஸில் ஏறுவார். "நான் திருகோணமலையைச் சேர்ந்தவன். எனக்கு 'தமிழ்மட்டும்தான் தெரியும். யுத்தம் காரணமாக என் சொத்துக்கள் எல்லாம் இழந்து இன்று உங்களிடம் கையேந்தி நிற்கின்றேன். பாடசாலை செல்லும் என் பிள்ளைகளுக்கு புத்தகம், கொப்பி வாங்க காசு வேண்டும். இந்த பஸ்ஸில்தான் தமிழ் மக்கள் அதிகம் இருப்பீர்கள். அதுதான் இந்த பஸ்ஸில் ஏறுகிறேன்" எனக்கூறி கண்ணீர் வடிப்பார். பரிதாபமாகத்தான் இருக்கும்.

உண்மையான பிச்சைக்காரன் யார்? போலிப் பிச்சைக்காரன் யார்? என்று தீர்மானிக்க வேண்டியது எங்களின் கையில்தான் இருக்கின்றது. ஆனாலும் அது கொஞ்சம் கஷ்டமான விடயம்தான். அவர்களிடத்தில் அவதானமாக இருக்கவேண்டியது அதைவிட முக்கியம். பிச்சைக்காரர்களை சார்க் மாநாடு நடந்த காலப்பகுதியில் அப்புறப்படுத்திய அரசாங்கம், இப்பொழுது ஏன் இவர்களைக் கண்டுகொள்ள மறுக்கிறது? இவர்களால் மக்கள் அனுபவிக்கும் அசௌகரியங்களை அரசாங்க அதிகாரிகள் கண்டுகொள்வார்களா? இவர்களுக்கான நிவாரணங்களை வழங்கியும், சுய உழைப்புக்கான முன்னேற்றமான வழிகளை பெற்றுக் கொடுப்பதும் இவர்களின் கடமையல்லவா? வெறுமனே தேர்தல் காலங்களில் மட்டும் வாக்குகளுக்காக அதையும் இதையும் செய்துவிட்டு படமெடுத்து பெரிய பெரிய கட்-அவுட்களில் சந்திக்குச் சந்தி தொங்கவிட்டால் மட்டும் போதுமா? புரிந்துகொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொண்டால் சரிதான்.

சாகித்யோ








# ஜெர்மனியின் கனவைத் தகர்த்த அவுஸ்திரேலியா



**12** நாடுகள் பங்குபற்றிய உலகக் கிண்ண ஹொக்கி தொடரில் சிறப்பாக விளையாடிய அவுஸ்திரேலியா, கடந்த இரு முறை சாம்பியன் பட்டம் வென்ற ஜெர்மனியைத் தோற்கடித்து (1986 ஆம் ஆண்டுக்குப் பின்) இரண்டாவது தடவையாக சாம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டது. "ஹாட்ரிக்" வெற்றியாக இம்முறை சாம்பியன் பட்டத்தை வெல்லக் கூடிய அணிகளின் வரிசையில் ஜெர்மனி முன்னிலையில் இருந்தாலும், இதற்கு அவுஸ்திரேலியா முற்றுப்புள்ளி வைத்து, தான் சாம்பியனானது.

கடந்த பெப்ரவரி 28 முதல் மார்ச் 13 வரை 12ஆவது உலகக் கிண்ண ஹொக்கி தொடர் இந்தியாவின் டில்லியில் நடைபெற்றது. ஜெர்மனி, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, ஆர்ஜென்ரினா, கனடா, கொரியா, நியூசிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, ஸ்பெயின் ஆகிய 12 நாடுகள் போட்டியிட்டன. ஒரு காலகட்டத்தில் சர்வதேச ஹொக்கி அரங்கில் கொடிகட்டிப் பறந்த (8 ஒலிம்பிக் தங்கம் வென்று அசத்திய) இந்திய அணி, கடந்த 2008 பீஜிங் ஒலிம்பிக் போட்டிக்குக் கூட தகுதியைப் பெறமுடியவில்லை. 1982 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுமார் 28 ஆண்டுகளின் பின், உலகக் கிண்ண ஹொக்கி தொடர் மீண்டும்



இந்தியாவில் நடைபெற்றதால் சொந்த மண்ணில் இந்திய அணிக்கு சாதகமான தன்மைகள் காணப்பட்டன. ஆனாலும் வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்தத் தவறி சொந்த மண்ணில் சாதிக்கத் தவறியது இந்தியா. பலமான அணிகளான பாகிஸ்தான், இந்திய அணிகள், லீக் போட்டியில் பிரகாசிக்கத் தவறின. இதனால் இந்த அணிகளின் அரையிறுதிக் கனவுகள் தகர்ந்தன. சொந்த மண்ணில் இந்தியா வீழ்ந்ததால் ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்தனர்.

இந்தியா, பாகிஸ்தான், கனடா, கொரியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, ஆர்ஜென்ரினா, ஸ்பெயின் அணிகள் லீக் சுற்றுடன் வெளியேற ஜெர்மனி, நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. அரையிறுதியில் அவுஸ்திரேலியா, ஜெர்மனி அணிகள் வெற்றி பெற்று 4 ஆவது முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்தன.

2002, 2006 இல் உலகக் கிண்ணத்தை வென்ற ஜெர்மனி, இம்முறை தொடர்ந்து மூன்றாவது முறையாக சாம்பியன் பட்டம் வெல்ல காத்திருந்தது. ஆனால் அந்தக் காத்திருப்பை முறியடித்து ஜெர்மனியை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது அவுஸ்திரேலியா. இதன் மூலம் ஜெர்மனியின் "ஹாட்ரிக்" வெற்றிக் கனவு தகர்ந்தது. அவுஸ்திரேலியா 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது. நெதர்லாந்து, இங்கிலாந்தை 4-3 என்ற கணக்கில் வீழ்த்தி மூன்றாமிடத்தைப் பெற, இங்கிலாந்துக்கு நான்காமிடம் கிடைத்தது. இதுவரை நடந்துள்ள உலகக் கிண்ண ஹொக்கி தொடரில், பாகிஸ்தான் அணி அதிகமாக நான்கு முறை (1971, 1978, 1982, 1994) உலகக் கிண்ணத்தை வென்று சாதித்துள்ளது. நெதர்லாந்து மூன்று முறையும் (1973, 1990, 1998) ஜெர்மனி இரண்டு முறையும் (2002, 2006) அவுஸ்திரேலியா இரண்டு முறையும் (1986, 2010), இந்தியா (1975) ஒரு முறையும் உலகக் கிண்ணத்தை சுவீகரித்துள்ளன.





உலகக் கிண்ணத்தை வென்ற நாடுகள்:

| ஆண்டு | சாம்பியன் |
|---|---|
| 1971 | பாகிஸ்தான் |
| 1973 | நெதர்லாந்து |
| 1975 | இந்தியா |
| 1978 | பாகிஸ்தான் |
| 1982 | பாகிஸ்தான் |
| 1986 | அவுஸ்திரேலியா |
| 1990 | நெதர்லாந்து |
| 1994 | பாகிஸ்தான் |
| 1998 | நெதர்லாந்து |
| 2002 | ஜெர்மனி |
| 2006 | ஜெர்மனி |
| 2010 | அவுஸ்திரேலியா |

★கடந்த 1982 இல் நடந்த போட்டியில் பாகிஸ்தான் அணி, 12-3 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது. மொத்தமாக 15 கோல்கள் அடிக்கப்பட்ட அந்தப் போட்டி, உலக வரலாற்றில் அதிக கோல் அடிக்கப்பட்ட போட்டி என்ற பெருமையினைப் பெற்றது.

★இம் முறை உலகக் கிண்ண ஹொக்கி தொடரின் லீக் போட்டியில் அவுஸ்திரேலிய அணி, தென்னாபிரிக்காவை 12-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இதன்மூலம் உலகக் கிண்ண அரங்கில், அதிக கோல் வித்தியாசத்தில் சிறந்த வெற்றியை பதிவு செய்த அணி என்ற சாதனையை படைத்தது மட்டுமன்றி சாம்பியனாகவும் முடிசூடியது அவுஸ்திரேலியா.



ஆகாஷ்



டிக் டிக் கதை



# தங்கத் தொலைபேசி

ஒரு அமெரிக்கன் உலகில் உள்ள பிரசித்திபெற்ற தேவாலயங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து ஒரு புத்தகம் வெளியிட நினைத்தார். அவர் உடனே புறப்பட்டு சீனாவுக்குச் சென்றார். அங்குள்ள தேவாலயம் ஒன்றிற்குச் சென்று ஆலயத்தை பார்வை இட்டார். அங்கு சில புகைப்படங்களை எடுத்து பின்னர் உள்ளே சென்றார். அங்கு தங்கத்தினால் ஆன ஒரு தொலைபேசி ஒன்றை கண்டார். அதன் கீழ் 'ஒரு தொலைபேசி அழைப்புக்கு 10 ஆயிரம் டொலர் என்றிருந்தது. இதை பார்த்த அமெரிக்கன் அதிர்ச்சியடைந்து ஏன் என போதகரிடம் வினவினார். அதற்கு போதகர் 'கடவுளிடம் நேரடியாக இதில் அழைப்பை மேற்கொள்வதால்தான் இதில் இவ்வளவு தொகை குறிப்பிடப்பட்டுள்ளது' என்றார்.

அமெரிக்கன் இதை மனதில் எண்ணிக்கொண்டு யப்பானுக்கு பயணமானார். அங்குள்ள ஒரு தேவாலயத்திற்குச் சென்றார். அங்கும் இதேபோல ஒரு தங்கத்தினால் ஆன ஒரு தொலைபேசியைப் பார்த்து அதிர்ந்துபோன அவர் ஆலய போதகருடன் வினவினார். அங்கும் அதே பதில்தான். அதே தொகைதான் குறிப்பிடப்பட்டிருந்தது. 'சரி நன்றி' என கூறிவிட்டு அந்த அமெரிக்கர் பாகிஸ்தான், ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு தனது பயணத்தை மேற்கொண்டார். அங்கும் அவருக்கு அதே பதில்தான். அதே தொகைதான் எழுதப்பட்டிருந்தது. இதையடுத்து பொறுமை இழந்த அந்த அமெரிக்கர் இலங்கை செல்ல தீர்மானித்தார். அங்கு சென்ற முதல் நாளே ஆர்வம் மேலோங்க அங்குள்ள ஆலயம் ஒன்றிற்குச் சென்றார். இங்கும் அதே தங்க தொலைபேசி. ஆனால் அழைப்பை மேற்கொள்ளும் தொகை மட்டும் 'ஒரு தொலைபேசி அழைப்புக்கு ஒரு ரூபாய்' என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. அதிர்ச்சியில் மூழ்கிய அவர் அதற்கான காரணத்தை அந்த ஆலய போதகரிடம் வினவினார்.

அதற்கு அந்த போதகர் 'மகனே நீ இருப்பது இலங்கையில். இது local call charge' என்றார்.


# காற்றில் கரையும் வாக்குறுதிகள்!!

கடந்த 30 வருடமாக இடம்பெற்று வந்த யுத்தத்தையடுத்து நமது நாட்டின் வளமான பொருளாதாரத்தை துரிதப் படுத்தும் நோக்கத்தில் பல்வேறு வகையான அபிவிருத்தித் திட்டங் களை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. ஆனாலும் இத்தகைய அபிவிருத்தித் திட்டங்கள் பெரும் பான்மை மக்கள் செறிந்து வாழு கின்ற, தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற பிரதேசங் களிலே மீண்டும் மீண்டும் செயற்படுத் தப்பட்டு வருகின்றன. இவ்வாறு வசதி கூடிய பிரதேசங்களிற்கு அபி விருத்தித் திட்டங்கள் செல்வதால் மக்களின் வரிப்பணம் வீணான முறை யில் பயன்படுத்தப்படுவதுடன் சமூக, பொருளாதார அபிவிருத்தியானது சமநிலையற்ற தன்மையை மீண்டும் அதிகரிக்கச் செய்யும்.

அண்மையில் இளைஞர் வலுவூட் டல் மற்றும் சமூக, பொருளாதார, அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக் கீட்டில் தெகிவளை வனரத்ன பாதை யில் அமைந்துள்ள குறைவருமானம் பெறுபவர்களின் வீடமைப்புத் திட்டத் தில் நிர்மாணிக்கப்பட்ட சமூகநலன் மன்றமும் புண்ணியஸ்தலமும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் கொழும்பு மாவட்ட பிரதான அமைப் பாளர் ரவிச்சந்திரனால் திறந்து வைக்கப்பட்டது.



சுமார் 1.5 மில்லியன் (1,500,000) ரூபா நிதியில் அமைக்கப்பட்ட இக் கட்டிடம் முழுக்க முழுக்க பௌத்த மதத்தவர்களின் தியான ஒன்றுகூடல் மண்டபமாகும். மகிந்த சிந்தனையின் கீழ் இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக, பொருளாதார அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். ஒரு பௌத்த கலாச்சார மண்டபம் ஒன்றின் நிர் மாணிப்பில் எல்லா மதத்தவர்களின் பங்களிப்பும் அமைந்திருப்பது பெருமைப்படக்கூடிய விடயம்தான். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்களுடைய தேவைகளை நோக்காகக் கொண்டு பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை முன் னெடுத்து வருவது யாவரும் அறிந்த விடயம். என்றாலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்களுக்கு செய்யவேண்டிய சேவை களும் தேவைகளும் எவ்வளவோ





இருக்கின்றது. அவற்றைப் பற்றியும் கொஞ்சம் கவனத்திலெடுத்து மலையக மக்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை அமைக்கவெண்டுமென்பதே மக்களுடைய அவாவாக இருக்கின்றது.

அண்மையில் இ.தொ.கா வினுடைய கொழும்பு மாவட்ட அமைப்பாளரான ரவிச்சந்திரனால் ஒழுங்கு செய்யப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவரிடம் வினவியிருந்தோம். "அவர்கள் கேட்பது தண்ணீர் பிரச்சினை, கரண்ட் பிரச்சினை மற்றும் மழை பெய்தால் குடி தண்ணீர் வராது. அதற்கு வழி கேட்கிறார்கள். அவர்கள் கேட்பது அவர்களின் அடிப்படை தேவைகளைத்தான். நாங்கள் அங்கு சென்றிருந்த போது தாய், பிள்ளை என்று எல்லோரும் வந்து சொல்கிறார்கள் பாடசாலைக்குக்கூட போகாமல் தண்ணீர் நிறைக்க வேண்டிய தேவை இருக்கிறது என்று. ஏன்? இப்போது ஒரு நல்ல சந்தர்ப்பம். மக்களுக்கு சேவை செய்வதற்கு எங்கு போனாலும் இதே பிரச்சினைதான். நானும் நினைத்துக் கொண்டிருந்தேன் நிறைய ஏதோ சொல்ல போகிறார்கள் என்று. ஆனால் அவர்கள் கேட்பது சாதாரண விடயம்" என்றார்.

இவ்வாறான அடிப்படை பிரச்சினைகள் இன்று தமிழ் மக்களிடையே அதிகம் காணப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் இப்படியான தியான மண்டபம் தேவைதானா? இதற்கு பதிலாக தமிழ் மக்களின் அடிப்படை தேவை ஒன்றையாவது செய்து கொடுத்திருக்கலாம். அன்று





பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தது ஒன்று. நடந்தது ஒன்று. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிலாளர்களுக்காக, அவர்களுடைய நலன்களுக்காக, அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு அமைப்பு. இத்தகைய ஒரு அமைப்பு தொழிலாளர்களின் பிரச்சினையை பார்க்கத் தவறியதேன்! அதிலும் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் மக்களின் அடிப்படை பிரச்சினையை தெரிந் தவர் இம் மண்டபத்தை திறந்து வைத் திருப்பது தமிழ் மக்களுக்கு எரிந்த தீப்புண்ணில் மீண்டும் காயத்தை ஏற்படுத்தும் செயல் ஆகும்.

இன்று எத்தனையோ சிங்கள அமைச்சர்கள் இவ்வாறான சமய சம்பந்தமான விடயங்களை செய்து கொடுக்க இருக்கிறார்கள். அத்தோடு இவ்வாறான விடயங்கள் இப்போது அவசர தேவையே இல்லை. இவ்வாறு செயற்படும்போது எப்போது தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினை தீர்க்கப்படும்? வெறுமனே வாக்குறுதி மட்டும்தானா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**(யூட்)**

**படங்கள்: கபில்**



**செவ்வாய் கிரகத்தில்** மனிதன் வாழ முடியுமா என்ற ஆய்வில் அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். செவ்வாய் கிரகத்தில் மனிதன் குடியேறி அங்கு வாழ முடியும். இந்த ஆண்டு இறுதிக்குள் அது நடைபெற வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் ஹூஸ்டனில் உள்ள நாசா ஜான்சன் விண்வெளி மையத்தின் விண்வெளி உயிரியல் துறையின் தலைமை விஞ்ஞானி டேவிட் மெக்கேயின் தலைமையிலான குழுவினர் இதற்கான ஆய்வை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் சக்தி வாய்ந்த புதிய மைக்ரோஸ்கோப்புகள் மற்றும் உபகரணங்கள் மூலம் எரிநட்சத்திர கற்களை பரிசோதனை செய்தனர். மேலும் அங்குள்ள பாறைகளையும் சோதித்து பார்த்தனர். இதன் மூலம் செவ்வாய் கிரகத்தில் வாயுக்கள் இருப்பது தெரிய வந்துள்ளது. எரிநட்சத்திர கற்களை சோதித்து பார்த்ததில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அங்கு ஐஸ்கட்டிகளால் ஆன குளிர்ந்த பாலை வனம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பூமியில் விழுவதற்கு முன்பு 3 எரிநட்சத்திர கற்களும் 10 லட்சம் ஆண்டுகள் சூரியனை சுற்றியபடியே இருந்துள்ளது. இதற்கிடையே செவ்வாய் கிரகத்தில் இருந்து எடுக்கப்பட்ட பாறையில் நுண்ணுயிர்கள் இருந்தது. எனவே அங்கு உயிர்கள் வாழ முடியும் என்று நாசா தெரிவித்துள்ளது.

# தோல்வியடைவது எப்படி?

இந்தத் தலைப்பே சரியில்லை என்று எண்ணத் தோன்றுகின்றதா? ஆம்! தோல்வியைப் பற்றி எண்ணவே கூடாது. பேசவே கூடாது. வாய்தவறியேனும் தோல்வி என்ற வார்த்தையை உச்சரிக்கவே கூடாது என்று ஒருவர் சிந்திப்பதில் தவறில்லை. ஆனால் தோல்வியை நாம் சந்திக்கத் தயாராகாவிட்டால் தோல்வி நம்மைத் தோற்கடித்து விடும்!

தோல்விக்குப் பயப்படுவது வேறு. தோல்வியைச் சந்திக்கத் தயாராவது வேறு! முதலாவது நிலை பயந்த நிலை. தன்னம்பிக்கை தளர்ந்த நிலை. இப்படிப்பட்டவர்கள் எந்த ஒரு விடயத்தையும் செய்ய முற்படமாட்டார்கள். செய்யத் தொடங்கும் முன்னரேயே என்னால் சரியாகச் செய்ய முடியாவிட்டால் எல்லோரும் என்னைக் கேலி செய்வார்களே! இதை நான் எப்படித் தாங்கிக் கொள்வேன் என்ற எண்ணம் இவர்களை விழுங்கியே விடும். இப்படியான எண்ணங்களை நாம் எதிர்மறை எண்ணங்கள் என்று கூறுவோம்.



வெற்றியடைவது எப்படி? என்று அறிவதற்கு அனைவருமே விரும்புவர். வெற்றி என்பது ஒரு மனோபாவம். வெற்றி என்பது ஒரு மனநிலை. எவராலும் வெற்றியடைய முடியும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

கிரிக்கெட் ஆட்டம் ஒன்றின் இறுதிக் கட்டம். ஒரே ஒரு பந்து வீச்சில் நான்கு ஓட்டங்கள் பெறவேண்டும். பார்வையாளர்கள் விளையாட்டு வீரர்கள் அனைவருமே ஒரேவித உணர்வுக்குள் இருக்கும் நிலை. துடுப்பாட்ட வீரர் மிக வேகமாக பந்தை அடித்ததில் பந்தானது எல்லையை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது. தடுப்பு வீரர் ஒருவர் மிகவேகமாக அந்தப் பந்தைத் தடுக்க ஓடிக்கொண்டிருக்கிறார். ஆனால் துரதிஷ்டவசமாக கால்கள் தடுக்குப்பட்டதால் அந்த வீரர் விழுந்துவிடும் நிலைக்குள் சென்று படிப்படியாக சமநிலை தளர்ந்து விழுந்துவிட்டார். பார்வையாளர்கள் தலைமேல் கைகளை வைத்து எல்லாமே முடிந்து விட்டது என்று வியப்படையும்போது ஒருவருமே எதிர்பார்க்காத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. விழுந்த அந்தத் தடுப்பு வீரர் விழுந்த வேகத்திலேயே எழுந்து ஓடி பந்து எல்லையைத் தாண்டாமல் தடுத்தார். அவர் விழுந்தபோது எல்லாமே முடிந்தது என்ற மனோபாவம் பார்வையாளர்களைச் சூழ்ந்த போதும் அந்தத் தடுப்பு வீரர் எழுந்து அனைவரினதும் எண்ணங்களையும் முறியடித்து வெற்றிவாகை சூடினார். இது எப்படி சாத்தியமானது?

தடுப்பு வீரருடைய அந்த வீரச் செயலால் அவருடைய அணி வெற்றி பெற்றது. விழுந்தவர் எப்படி எழுந்தார் என்று பேட்டியாளர் கேட்ட போதும் அவர் ஒரு சிரிப்புடன் நழுவிவிட்டார். ஆனால் பின்பு



ஒரு சமயத்தில் அதே கேள்விக்கு அவர் விடையளிக்கும் போது சுவாரசியமான ஒரு தகவல் வெளிவந்தது. அவருடைய பயிற்சியாளர் கொடுத்த பயிற்சி ஒன்று அவரது மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. விழுவது நிச்சயமாகிவிட்டால் எப்படி விழுவது என்பதைத் தீர்மானித்து விட வேண்டும். உடனடியாக எழுவதற்கேற்ற வகையிலே நாமா



கவே விழுந்து திட்டமிட்ட வகையிலே உடனடியாக எழுந்துவிட வேண்டும். இந்தப் பாடத்தை அவர் விளையாட்டு மைதானத்திலே செயற்படுத்தியதனால் விழுந்தபோதும் அவர் உடனடியாக எழுந்துவிட்டார்.

எமது வாழ்விலே நாம் விழக் கூடிய சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. தோல்விகள் ஏற்படும். அந்த வேளையில் நாம் எப்படி நடந்து கொள்ளப் போகிறோம் என்பதை முன்கூட்டியே திட்டமிட்டால் ஏமாற்றங்களைத் தவிர்த்து விடலாம். வெற்றி கிடைத்தால் எப்படிக் கொண்டாடலாம் என்று திட்டமிடும் ஒருவன் தோல்வி ஏற்படும் போது என்ன செய்ய வேண்டும் என்பதையும் தீர்மானித்து விட்டால் ஏமாற்றத்துக்கு இடமில்லை.

ஒரு பெண்ணோ ஆணோ தனது காதலை மற்றவருக்குத் தெரியப்படுத்தி அதற்கு சாதகமான பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கும்போது எதிர்மறையான பதில் கிடைத்தால் அவருடைய நிலை என்ன? கவலை வரும். வேதனை ஏற்படும். அது இயல்பு. அவ்வாறான உணர்வு ஏற்படாவிட்டால்தான் நாம் சிந்திக்க வேண்டும். மறையான பதிலும் கிடைக்கலாம். அப்படிக் கிடைத்தால் என்ன செய்ய வேண்டும் என்று ஒருவர் அதற்காகத் திட்டமிட ஆரம்பிக்கிறார்.

தோல்வியும் ஒரு மனோபாவம் தான். தோல்வியைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்பவன் இன்னும் சிறப்பான வெற்றியை அடைந்திருக்கலாமே என்று கவலைப்படுபவனைவிட சிறப்பான நிலையில் இருக்கிறான். யப்பானிய விளையாட்டு வீரர்களிடம் ஒரு பண்பும் பழக்கமும் இருக்கிறது. ஒருவர்,




தான் வெற்றி பெற்றால் 'நான் அதிஷ்டசாலி' என்று கூறுவார். தோல்வியடைந்தால், வெற்றியடைந்தவரைப் பார்த்து 'நீங்கள் சிறப்பாக விளையாடினீர்கள்' என்று கூறுவார். எவ்வளவு நல்ல பண்பு? அதாவது விளையாட்டில் வெற்றியும் தோல்வியும் சகஜம் என்பதையும் மற்றவரின் திறமையை மெச்சும் போதும் உள்ளம் உவகையடைகிறது.

வாழ்க்கையை எடுத்துக் கொண்டாலும் வெற்றி எது தோல்வி எது என்று யார் தீர்மானிப்பது? வெற்றி மகிழ்ச்சியைத் தருகிறது என்றால் தோல்வி அறிவைத் தருகிறது. ஐன்ஸ்ரீன் என்ற விஞ்ஞானி எந்த ஒரு முயற்சியையும் தோல்வி என்று கருதுவதில்லை. ஒரு விடயத்தை எப்படியெல்லாம் செய்யக் கூடாது என்று கண்டு பிடித்தேன் என்றுதான் கூறுவார். தோற்கத் தெரிந்த மனிதர்! அந்த அறிவு அவருக்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கும் உதவி செய்யும். இந்த அறிவு பகிர்ந்து கொள்ளப்படும்போது பலருடைய நேரம் வீணடிக்கப்படுவது தவிர்க்கப்படுகின்றது.

வைத்தியர் ஒருவர் நோயாளிக்குச் சிகிச்சை செய்ய ஆரம்பிக்கும் போது சில பொதுவான மருந்துகளைக் கொடுப்பார். அது வேலை செய்யாவிட்டால் சில சிறப்பான மருந்துகளைக் கொடுப்பார். அதுவும் வேலை செய்யாவிட்டால் நோயாளியை சிறப்புத் தேர்ச்சி பெற்ற மருத்துவரிடம் அனுப்புவார். அப்படி அனுப்பும்போது தான் ஏற்கெனவே அளித்த சிகிச்சை பற்றியும் மருந்துகள் பற்றியும் ஒரு சிறு அறிக்கையையும் சமர்ப்பிப்பார். ஏன்? இந்த மருந்துகள் நோயைக் குணமாக்கவில்லை என்பதை அறியத்தருவதால் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மருத்துவரின் நேரத்தையும் நோயாளியின் செலவையும் மிச்சப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

தோல்வி என்பது மிகவும் பெறுமதி வாய்ந்த ஒரு அறிவு. தோற்கத் தெரிந்தவனுக்கு வெற்றி நிச்சயம்!!!



—அன்பழகன்—

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.



# முத்தமிடுவதால் HIV தொற்றுமா?

ஒருநாள் மரியாதைக்குரிய மனிதர் ஒருவர் மருத்துவ ஆலோசனைக்காக என்னிடம் வந்திருந்தார். அவருக்கு மண உறவுக்கு அப்பால் ஒரு பெண் தொடர்பு இருந்தது. அவளின் கணவன் ஊரோடு இல்லாதது இவருக்கு வாசியாகிவிட்டது. இடையிடையே தாகம் தணித்துக் கொள்வார். ஆயினும் மிகவும் எச்சரிக்கையாகவே இருந்தார். ஆணுறை உபயோகிக்கத் தவறுவதேயில்லை. அவரிடம் நண்பர் ஒருவர் முத்தமிடும் போதும் தொற்றுமென சந்தேகத்தைக் கிளப்பிவிட்டார்.

'நெறிக்கட்டிக் காய்ச்சல் மட்டுமன்றி எயிட்ஸ் நோயும் முத்தமிடுவதால் தொற்றும்' என இணையப் பட்டத்தில் வாசகம் எழுதியதற்காகவே என்னிடம் சந்தேகம் தீர்க்கப் பலர் தொடர்பு கொண்டார்கள்.

உண்மையில் முத்தமிடுவதால் எயிட்ஸ் நோயை ஏற்படுத்தும் கிருமி தொற்றுமா?

அதற்கு விடை கூறுவதற்கு முதல் HIV எவ்வாறெல்லாம் தொற்றும் என்பதைப் பார்க்கலாம். முக்கியமாக மூன்று விடயங்கள் பாதகமாக இருக்க வேண்டும். HIV தொற்றுள்ளவரின் கிருமி செறிந்திருக்கும் உடற்திரவங்களான இந்திரியம், பெண்ணுறுப்பிலிருந்து சுரக்கும் திரவம், இரத்தம் போன்றவற்றுடன் மற்றவர் தொடர்புற வேண்டும்.

அவை நேரடியாக தொடர்புற்றவரின் இரத்தத்தில் கலக்க வேண்டும். வெட்டுக்காயம், புண், தோல் அரிப்பு, உரசற் காயங்கள் போன்றவை சில உதாரணங்களாகும்.

வேறு ஊடகங்களின் ஊடாக இன்றி, நேரடியாக அதுவும் மிக விரைவாக நோயாளியிலிருந்து மற்றவருக்கு கிருமி கடத்தப்பட வேண்டும். மனித உடலுக்கு வெளியே HIV கிருமியால் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே உயிர் வாழ முடியும் என்பதாலேயே மிக விரைவாகக் கடத்தப்பட வேண்டும்.

H1N1 புதிய இன்புளுவன்சா காய்ச்சலைப் பரப்பும் வைரஸ் கிருமி இதற்கு மாறாக மேசை, கதிரை, கதவுக் கைபிடி போன்றவற்றில்கூட நீண்ட நேரம் உயிர் பிழைத்திருந்து நோயைப் பரப்பும் வல்லமை வாய்ந்தது. எனவே வேகமாகத் தொற்றும். ஆனால் HIV ல் கிருமி அவ்வாறல்ல. மனித உடலுக்கு வெளியே, தான் நீண்ட நேரம் வாழாதிருந்து மனிதனைக் காப்பாற்ற முயல்கிறது. ஆனால் மனிதன் முறை தவறிய காம இச்சையால் நோயைத்தேட முன்னிற்கிறான்.

HIV கிருமி தொற்றும் முக்கிய வழிமுறைகளாவன

1. நோயுற்றவருடன் பாதுகாப்பற்ற முறையில் பாலுறவு வைத்தல்.

2. நோயுற்றவருக்குப் போட்ட ஊசியை மற்றவர்கள் உபயோகிப்பது (Needles and syringes) இது முக்கியமாக போதை ஊசி ஏற்றுபவர்களிடையே பரவுவதற்குக் காரணமாகிறது.


3. தாயிலிருந்து குழந்தைக்கு பிறக்கும் நேரத்திலும் பின் பாலூட்டுவதாலும்.

4. இரத்த மாற்றீடு முன்பு ஆபத்தானதாக இருந்த போதும் இப்பொழுது எல்லா இரத்தமும் முழுமையாக சோதிக்கப்பட்ட பின்னரே கொடுக்கப்படுவதால் பெரும்பாலும் பாதுகாப்பானதே.

ஏனைய உடற் திரவங்களான எச்சில், வியர்வை, சிறுநீர், கண்ணீர் போன்றவற்றில் மிகக் குறைந்தளவு HIV கிருமியே இருக்கிறது. இதனால் இவற்றின் ஊடாக தொற்றுவதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவாகும். இதனால்தான் பலரும் என்னிடம் சந்தேகம் எழுப்பினார்கள்.

எச்சிலால் தொற்றாது என்பதை ஏற்றுக் கொள்வோம். ஆனால் எச்சிலில் இரத்தம் கலந்திருந்தால் என்ன நடக்கும்?

எனவே முத்தமிடுவதால் தொற்றாது என நிச்சயமாகக் கூற முடியாது. இப்படி ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நோயுள்ளவர் தனது நோயானது பங்காளிக்குத் தொற்றக் கூடாது என்பதற்காக அல்லது தனது வாய் நாற்றத்தை மறைப்பதற்காக உறவுக்கு முன் குளித்து



Anatomy of the AIDS Virus

தன்னைச் சுத்தம் செய்து கொள்கிறார். அத்துடன் வாயையும் பிரஸ் பண்ணிக் கொள்கிறார்.

ஆனால் அவருக்கு முரசு கரைதல் நோயிருக்கிறது. அதனால் பிரஸ் பண்ணும்போது சிறிது இரத்தம் கசிகிறது. உடனடியாகவே உறவுக்குச் செல்கிறார்.

அவரது பங்காளிக்கும் முரசு கரைகிறது. அல்லது வாய்ப் புண் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். நோயுற்றவரின் இரத்தத்தில் உள்ள HIV கிருமி மற்றவரது புண் ஊடாகத் தொற்றி விடும். உண்மையில் அவ்வாறு நடந்ததற்கான ஆதாரம் ஒன்று மருத்துவ கோவைகளில் பதியப்பட்டுள்ளது.

மற்றொரு சாத்தியத்தையும் கவனியுங்கள். நோயுற்றவர் உறவின் போது உணர்ச்சி வேகத்தில் மற்றவரது உதட்டைக் கடித்து விடுகிறார். நுண்ணிய சிறுகாயம்தான் ஆனால் அதன் ஊடாக கிருமி பரவிவிடலாம் அல்லவா? இவ்வாறு உறவின் போதல்ல ஆனால் கோபத்தில் கையில் கடித்ததால் HIV தொற்றியதற்கும் ஆதாரம் உண்டு.

மற்றொருவர் வந்தார். அவர் அடிக்கடி மேயப் போவார். ஆனால் அவரும் ஆணுறை அணியத் தவறுவதேயில்லை. ஆனால் அவருக்கு மற்றொரு பழக்கம் இருந்தது. அதுதான் வாய்ப்புணர்ச்சி. மிக ஆபத்தானது. நல்ல காலம்! இரத்தப் பரிசோதனையில் ஏற்கனவே தொற்றியிருக்கவில்லை. விளக்கி அனுப்பியதால் பிறகு அவதானமாக இருந்திருப்பார் என நம்பலாம்.

பாலுறவால் அன்றி வேறு காரணங்களால் கிருமி தொற்றியிருந்தாலும் அது இரத்தப் பரிசோதனையில் வெளிக்காட்ட 2 முதல் 8 வாரங்கள் வரை தாமதமாகலாம். சிலருக்கு 3 மாதங்களுக்கு மேலும் செல்வதுண்டு. அவ்வளவு காலமும் நிச்சயமான முடிவு தெரியாது. பதற்றத்திலும் பயத்திலும் மூழ்கியிருப்பதிலேயே பலருக்கு பாதி உயிர் போய்விடுவதுண்டு. இருந்தபோதும் பலரும் பயப்படுவதுபோல தொட்டுப் பேசுவதாலோ அருகில் இருப்பதாலோ உடைகள், சோப், கப், கோப்பை ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்வதாலோ HIV தொற்றுவதில்லை. காற்றினாலும் நீரினாலும் தொற்றுவதில்லை. நுளம்பு போன்ற பூச்சிக் கடிகளாலும் தொற்றாது.

இவ்வாறெல்லாம் இலகுவில் இந்த நோய் தொற்றாமலிருக்க இயற்கை எங்களுக்கு வாய்ப்பளித்துள்ளது. எமக்குக் கிட்டிய வரம் போன்றது. ஆனால் அடங்காத இச்சையால் முறை தவறி நடந்து தேடித் தேடி நோயைத் தொற்ற வைக்க முயல்கிறோம்.

முத்தமிடுவதால் தொற்றுமா? தொற்றாதா? என்ற ஆரம்பக் கேள்விக்கு வருவோம்.

"உலகில் ஒரே ஒரு தடவைதான் இவ்வாறு தொற்றியதற்கான ஆதாரம் இருக்கிறது. எனவே நம்பத்தகுந்தது அல்ல என்றோ அல்லது அது போதிய ஆதாரம் அல்ல" என்று நீங்கள் கருதினால் உங்கள் தேர்வை நீங்களே தீர்மானித்துக் கொள்ளலாம். சந்தோசமாக ஆசைப்பட்டவருக்கு விரும்பியவருக்கு எல்லாம் வாயால் ஆழ் முத்தம் கொடுங்கள். கொடுத்துக் கொண்டேயிருங்கள். அதிஷ்டம் உங்கள் பக்கமிருந்தால் தப்பிவிடுவீர்கள். இல்லையேல் ஒரு சில வருடங்களில் பாலுறவால் தொற்றும் நோய்களுக்கான (STD) கிளினிக்கில் உங்களைக் காண வேண்டியிருக்கும்.






## காணாமல் போன இயந்திரம்



திருடர்களை கண்டுபிடிக்கும் இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு பரிசோதனைக்காக அனைத்து நாடுகளுக்கும் அனுப்பப்பட்டதாம்.

அனுப்பப்பட்ட ஒரு வாரத்தில் அமெரிக்காவில் 50 திருடர்கள் பிடிபட்டனர். இத்தாலியில் 100 திருடர்கள் பிடிபட்டனர். ஜெர்மனியில் 75 திருடர்கள் பிடிபட்டனர். ரஷ்யாவில் 145 திருடர்கள் பிடிபட்டனர். ஜப்பானில் 200 திருடர்கள் பிடிபட்டனர். இலங்கையில் ஒரு திருடனைக்கூட அந்த இயந்திரத்தால் பிடிக்கமுடியவில்லை. ஏன் என்றால் அந்த இயந்திரம் வந்த மறுநாளிலிலேயே அந்த இயந்திரத்தைக் காணவில்லை.

# 01-04-2010 முதல் 15-04-2010 வரை

# ராசிபலன்

## மேடம்



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு. வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்காது.

## இடபம்



**கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர். அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய்நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

## மிதுனம்



**மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு. வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் தொல்லை உண்டாகலாம். மன அமைதி இருக்கும்.

## கடகம்



**புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர்,அயலவர் உதவுவர். உதவியை எதிர் பார்ப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.



## சிம்மம்



**மகம், பூரம், உத்தரம் 1**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

## கன்னி



**உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2**

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு காலதாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## துலாம்



**சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர். அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு. வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறை*முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## விருச்சிகம்



**விசாகம் 4, அனுஷம், கேட்டை**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர். அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு. வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## தனு



**மூலம், பூராடம், உத்தராடம் 1**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ளக் கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## மகரம்



**உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நல மில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர் கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.

## கும்பம்



**அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாண வர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## மீனம்




**பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாச மாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திரு மணவாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

**சோதிடர் பொ. சந்திரலிங்கம்**
**இணுவில், யாழ்ப்பாணம்.**







**டிக் டிக் கதை**



# யாருக்கு வைத்தியம்?

வைத்தியர் ஒருவரிடம் சிகிச்சை பெறச் சென்ற ஒருவன் 'நான் ஒரு மாத விடுமுறையில் வந்திருக்கிறேன். ஏனென்றால் எனக்கு முழுமையாக சிகிச்சை பெற வேண்டும்' என்றான்.

அதற்கு அந்த வைத்தியரோ நான் நினைக்கிறேன். நீங்கள் எதிர்ப் பக்கம் இருக்கின்ற வைத்தியரை போய் பார்த்தால் நல்லது என்று. தயவு செய்து அந்த பெயர்ப் பலகையை வாசியுங்கள்' என்றார். அதற்கு அந்த நபரோ 'இல்லை வைத்தியரே. நான் உங்களிடம்தான் வந்தேன்' என்றான். 'நான் கால்நடை மிருக வைத்தியர். என்னால் மனிதர்களுக்கு வைத்தியம் செய்ய முடியாது' என்று அந்த வைத்தியர் சொன்னார்.

'எனக்கு தெரியும் வைத்தியரே. நான் ஏன் வந்திருக்கிறேன் என்று. தயவு செய்து யோசித்துப் பாருங்கள்' என்றான். வைத்தியரோ 'என்னால் முடியாது. ஏனென்றால் நீ என்னைப் போல யோசிக்கிறாய். என்னைப் போல பேசுகிறாய். நீ ஒரு மனிதனே தவிர ஒரு விலங்கு அல்ல' என்றார்.

'எனக்கு தெரியும் நான் ஒரு மனிதன் என்று. தயவு செய்து எனது பிரச்சினையைக் கேளுங்கள்' என்று ஆதங்கத்தோடு கூறிய அவன் தனது பிரச்சினையைக் கூறத் தொடங்கினான்.

'நான் இரவில் நித்திரை கொள்ளும்போது நாய்கள் எச்சரிக்கையாக இருப்பதைப்போல் தூங்கியும் துங்காதது போல இருக்கிறேன். நான் காலையில் குதிரை நித்திரை விட்டு எழுவது போல துயில் எழுகிறேன். நான் கழுதையைப் போல வேலை செய்கிறேன். பதினொரு மாதமாக நான் ஒரு விடுமுறையும் இல்லாது சுற்றி ஓடிக்கொண்டிருக்கின்றேன். எனது முதலாளியைக் கண்டால். தெரிந்தவர்களைக் கண்டால் நாய் எப்படித் தாவுமோ அது போல நானும் நடந்து கொள்கிறேன். எனது குழந்தைகளுடன் குரங்கைப்போல விளையாடுகிறேன். எனது மனைவிக்கு முன் நான் முயல் போல நடந்து கொள்கிறேன்' என்றான் கவலையோடு.

வைத்தியரும் 'நீ நரகத்திலா வேலை செய்கிறாய்?' என்று கேட்டார்.

அவனும் 'ஆம்' என்றான்.

'நீ சொல்வதைக் கேட்க சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது. நீ முதலிலேயே நரகத்தில்தான் வேலை செய்கிறேன் என்று சொல்லியிருந்தால் இவ்வளவு நேரம் நேரத்தை செலவிட அவசியம் இருந்திருக்காது. நீ என்னிடம் சிகிச்சை பெற வேண்டியவன்தான். நான் உனக்கு சிகிச்சையளிக்கிறேன்' என்றார் பெருமூச்சோடு.

# அருகிவரும்
# மலையக பாரம்பரிய கலைகள்

கூலித் தொழிலின் நிமித்தம் கொத்தடிமைகளாக இன்றைக்கு சுமார் 180 வருடங்களுக்கு மூன் இலங்கை மண்ணை மிதித்த இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்கள் தமக்கென எவ்வித சொத்துக்களையும் கொண்டு வராத அதே நேரத்தில் விலை மதிக்க முடியாத தமது பாரம்பரிய கலையம்சங்களை தம்மோடு கொண்டுவந்து செவிவழியாக வளர்த்து வந்தனரென்பது வெளிப்படையான உண்மை. காமன்கூத்து, கோலாட்டம், கும்மி, பொன்னர்சங்கர் கூத்து. அருச்சுனன் தபசு, மயிலாட்டம், மரக்கால் கூத்து, போன்ற பல்வேறு கலையம்சங்களையும் தப்பு, உறுமி, மேளம், போன்ற இசைக்கலைகளையும் இவர்கள் பேணிவந்தனர்.



மலையகத்தில் சிலபகுதிகளில் விரல்விட்டு எண்ணக்கூடிய வகையில் இக்கலைகள் தற்போது பயிலப்பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும் வரும் அதேவேளை மிகப்பெறும் சொத்தாகப் போற்றப்படக்கூடிய இக்கலைகள் மறைந்து போகின்ற நிலை மிகவும் கவலை தரக்கூடியதே.

இவ்வாறான சூழ்நிலையில் பாரம்பரிய கலைகளை உயிர் மூச்சாகக் கருதி கலைப் பணியில் ஈடுபடுவது மாத்திரமன்றி ஆர்வமுள்ள சிலருக்கேனும் இவற்றை கற்பித்து அடுத்த தலைமுறைக்கு இக்கலைகளை எடுத்துச்செல்லும் கலாபூசணம் முத்துசாமி பச்சைமுத்து எனும் கலைஞனை அண்மையில் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. இவர் மலையகம் போற்றக் கூடிய ஓர் மகத்தான மனிதர் என்பதில் சந்தேகமே இல்லை. 'மங்கிப்போய்க் கொண்டிருக்கும் மலையகப் பாரம்பரியக் கலைகளை தன் உயிருள்ள வரை காப்பதோடு என் குடம்பத்தையே இக்கலைகளை காப்பதற்காக அர்ப்பணித்துள்ளேன் என்றும் இக்கலைக்காக தம்மால் முடிந்த பங்களிப்பை செய்துள்ளதாக மனநிறைவுடன் கூறினார் கலைஞர் பச்சை முத்து.



முத்துசாமி பச்சைமுத்து

'பத்துவயது முதல் பாரம்பரியக் கலைகளான கும்மி, கோலாட்டம், கரகாட்டம், தப்பிசை, உறுமி,





மேளம், உடுக்கை, தமிர் போன்ற கலைகளில் ஈடுபட்டு வருகிறேன். எனது பத்து பிள்ளைகளையும் இக்கலையில் ஈடுபடுத்தி பல்வேறு மேடைகளிலும், திருவிழாக் காலங்களிலும் அரங்கேற்றி வருகிறேன். இவ்வாறு நான் கலைகளில் ஆர்வம் காட்டுவதற்கு காரணம் எனது சகோதரன் வடிவேல் ஆவார். இவர் சிறுவயதில் இருந்தே ஊர் ஊராகச் சென்று கரகாட்டம் ஆடி வந்தார். இதன் காரணமாகவே நானும் இதில் ஈர்க்கப்பட்டேன். எனது மகனான பூமிநாதன் ரம்பட், நாதஸ்வரம், மேளம், தபேலா, உறுமி போன்ற இசைக்கருவிகளை மிகவும் சிறப்பாக வாசிப்பார். இவ்வாறு எமது குடும்பமே சேர்ந்து ஒரு கலைக் குழுவை ஏற்படுத்தி இருக்கிறோம்.

திருவிழாக்களுக்கும், விழாக்களுக்கும், நிகழ்வுகளுக்கும் எம்மை நாடி வருபவர்களுக்கும் மறுப்பு தெரிவிக்காமல் சென்று கலை நிகழ்ச்சியை அரங்கேற்றி வருகிறோம்'.

மரியாதையோடும் பண்பாட்டோடும் பாரம்பரியக் கலைகளை பயின்று வரும் இக்குடும்பத்தினருக்கு மிகப்பெரும் கௌரவம் ஒன்று அண்மையில் கண்டி இந்து மாமன்றத்தில் வழங்கப்பட்டது. இந்தியாவிலிருந்து வந்த பேராசியர் கரு. அழகுணசேகரன் மற்றும் கண்டி உதவி இந்தியத் தூதுவர் மற்றும் கற்றோர்கள் மத்தியில் இவ்வாறு குடும்பம் பாராட்டப்பட்டது என்பது மிகவும் மகிழ்ச்சியான விடயமே.

'பாரம்பரியக் கலைகளை அரங்கேற்றுவதில் கிடைக்கும் வருமானத்தில் சீவியம் நடத்தி வரும் நான் என்னைத் தேடிவரும் தமிழ், சிங்கள பிள்ளைகளுக்கும் என்னுடைய வீட்டிலேயே கரகம், காவடி போன்ற பல்வேறு கலைகளையும் கற்றுக் கொடுக்கிறேன். என்னிடம் கற்ற சிங்கள, தமிழ் பிள்ளைகள் கண்டியில் இடம்பெறும் பெரஹராவிலும் திருவிழாக்களிலும் கோலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம் போன்றவற்றை ஆடும்போது நான் மிகுந்த சந்தோஷத்தை அடைவேன்'.


மேற்படி கலைகளை கற்பித்து வரும் இவருக்கு தேவையான இடவசதி இல்லையென கூறுகிறார்.




இது குறித்து ஜனாதிபதியிடமும் ஜனவசம செயலாளரிடமும் தொழிற் சங்கங்களிடமும் கலஹா குறுப், வாசிமலை தோட்டத்திலுள்ள மண்டபத்தை வழங்க வேண்டும் எனக் கூறியும் எந்த ஒரு பதிலும் கிடைக்கவில்லை என இவர் நெஞ்சம் குமுறுகிறார். இக்கலையை மேலும் வளர்க்க இம் மண்டபத்தை பெற்றுக் கொடுக்க மலையக முக்கியஸ்தர்கள் முன் வருதல் வேண்டும் என்றும் எம்மிடம் முறையிட்டார்.

மலையக மக்கள் உயிரிலும் மேலாகப் போற்றிக் காக்கும் இக்கலைகளை பேணிப்பாதுகாப்பதன் பொருட்டு கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம், கலைஞர் பச்சைமுத்துவின் துணைக் கொண்டு புசல்லாவை ஸ்சரஸ்வதி மத்திய கல்லூரி, ஸ்இந்து தேசிய கல்லூரி மாணவர்களுக்கு இக்கலைகளை பயிற்றுவித்து பல மேடைகளில் மேடையேற்றி வருவது பாராட்டத்தக்கது.





இப்பொழுது ஹட்டன், புசல்லாவை போன்ற பகுதிகளில் மலையக இந்திய வம்சாவளி தமிழர்களில் வரலாற்றை எடுத்துக் காட்டும் காப்பகம் அமைக்கப்பட்டுள்ளது. இவை மலையக ஆய்வுகளில் ஈடுபடுவோர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் தீனியாக அமைகிறது. என்றாலும் மக்கள் வாழ்க்கையோடு இணைந்ததாகக் காணப்படும் மலையக பாரம்பரியக் கலைகள் மலையக மக்களோடு பின்னிப்பிணைந்து நிற்பதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசியல் வாதிகள், தொழிற்சங்கவாதிகள் மேலும் ஆக்கபூர்வமான சிந்தனைகளை உருவாக்கி அதற்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவை என்பதோடு அரசாங்கமும் மலையக மக்களின் கலை, கலாச்சார பண்பாட்டம்சங்களை வளர்த்து காக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது பாரம்பரியக் கலை ஆர்வலர்களின் பணிவான வேண்டுகோளாகும்.

—மருதமுத்து நவநீதன்—



மயில்வாகனம்
சர்வானந்தா



# கலைந்த பக்கங்கள்...

## டொக்டர் சீர்காழி கோவிந்தராஜன்

"ஊரைச் சொல் பெயரைச் சொல்கிறேன்" என்பார்கள். இசை உலகில் அரியக்குட்டி, செம்மங்குடி, திருவாவடுதுறை என்று சொன்னால் அந்த ஊரைச் சேர்ந்த இசை மேதைகளின் பெயர்கள் நினைவு வரும். அவ்வாறே சீர்காழி என்றால் இசைமணி எஸ். கோவிந்தராஜனின் உருவமே நம் கண்முண் தோன்றும்.

சீர்காழி என்ற பெயரை இருபதாம் நூற்றாண்டில் உலகறியச் செய்தவர். பெயரைச் சொல்லாமல் சீர்காழி என ஊரை மட்டுமே பொது மக்கள், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி அனைத்துமே எழுதவும், சொல்லவும் செய்து, பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்த்தவர். சீர்காழியில் 1933ம் ஆண்டு ஜனவரி 19ந் திகதி சிவசிதம்பரம் செட்டியாருக்கும் அவயாம்பாள் அம்மாளுக்கும் கோவிந்தராஜன் மகனாகப் பிறந்தார். சிறுவயதிலேயே இவருக்கு இசையிலும் நடிப்பிலும் ஆர்வம் இருந்தது. இதனால் தேவிநாடக சபாவில் சேர்ந்து பாடல்களைப் பாடியும், நாடகங்களில் நடித்தும் வந்தார்.

கர்நாடக இசைக்கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் பயின்றபின் 1951இல் சங்கித வித்துவான் பட்டம் பெற்றார். அச்சமயத்தில் சங்கீத வித்வத்சபை, ரசிகரஞ்சனிசபா நடத்திய போட்டிகளில் பல பரிசில்களைப் பெற்றார். 1953 இல் நாடகம் ஒன்றில் நடித்தபோது அந்த நாடகத்தைப் பார்க்க வந்த சினிமா டைரக்டர் ஏ.டி. கிருஷ்ணசாமி, தான் தயாரித்த 'பொன்வயல்' படத்திற்கு பின்னணி பாட வாய்ப்புக் கொடுத்தார். 'சிரிப்புத்தான் வருகுதைய்யா' இதுவே இவர் பாடிய ஓர் திரைப் படப்பாடல். பொன்வயல் பாடல் புகழ்பெற்றதைத் தொடர்ந்து அவருக்கு படங்களில் பின்னணி பாட வாய்ப்புகள் குவிந்தன. கலைஞர் கருணாநிதி தயாரித்த 'அம்மையார்' படத்தில் 'அம்மையப்பா அருள் புரிவாய்' என்ற பாடலை T.R பாப்பாவின் இசையில் பாடினார். இதுவும் பிரபலமாகவே T.R பாப்பா இசையமைக்கும் படங்களில் கோவிந்தராஜனுக்கு வாய்ப்புக்கள் கிடைத்தன. மிகச் சுத்தமான தமிழ் உச்சரிப்பு, வெண்கலநாதம் போன்ற குரல், பலவித உணர்ச்சிகளையும் குரலில் காட்டக்கூடிய திறமை இத்தகைய தனிச்சிறப்புகள் இவருக்கு வாய்ப்பினை அதிகரித்தது. எங்க வீட்டு மகாலட்சுமி படத்தில் பட்டணம்தான் போகலாமடி, தைபிறந்தால் வழிபிறக்கும் படத்தில் அமுதும் தேனும் எதற்கு?

வண்ணக்கிளி படத்தில் 'மாட்டுக்கார வேலா' மாலையிட்ட மங்கையில் 'வில் எங்கே கணை எங்கே' என பல பாடல்களைப் பாடினார்.

சிவாஜிகணேசன், எம்.ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் புகழ் உச்சியில் இருந்தபோது பட பாடல்களுக்கு இவர் குரல் கொடுத்தார்

ராஜராஜன், சக்கரவர்த்தி, திருமகள், நாடோடி மன்னன், தாய் மகளுக்கு கட்டியதாலி, சபாஷ் மாப்பிள்ளே, நல்லவன் வாழ்வான், கொடுத்து வைத்தவள், கலை அரசி போன்ற படங்களில் எம். ஜி. ஆருக்காக பின்னணிப் பாடல்கள் பாடியிருக்கிறார். இதே போல பாகப்பிரிவினை, பணம்பந்தியிலே, படிக்காத மேதை, காத்திருந்த கண்கள், பொலிஸ்காரன் மகள், நம்மவீட்டு லட்சுமி போன்ற படங்களில் பாடிய பாடல்களும் மிகவும் பிரபலமானவை. 1965 இல் வெளிவந்த 'காதலிக்க நேரமில்லை' படத்தில் இடம்பெற்ற காதலிக்க நேரமில்லை பாடல் தமிழர் வாழுமிடமெங்கும் ஒலித்தது.

பின்னணிப் பாடலில் வெற்றி பெற்ற இவர் திரைப்படத்திலும் நடிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். A. A. நாகராஜன் தயாரித்த கந்தன் கருணை படத்தில் முதன் முதலாக நக்கீரர் வேடத்தில் 1967இல் நடித்தார். அதன் பின்னர்

1969 இல் 'வா ராஜா வா'

1970 இல் 'திருமலை தென்குமரி' படத்தில் பாகவதராக நடித்தார்.


1972 இல் 'அகத்தியர்' படத்தில் அகத்தியராகத் தோன்றினார்.

1972 இல் 'தெய்வம்' படத்தில் பக்திப் பாடகராக வந்தார்

1973 இல் 'ராஜராஜ சோழன்' படத்தில் நம்பியாண்டார் நம்பி

1975 'திருவருள்' படத்தில் கர்நாடக இசைப் பாடகர்

1976 இல் 'தசாவதாரத்தில்' - நாரதர்






1981 இல் 'தெய்வத்திருமணங்கள்' - அகத்திய முனிவர்

1982 'தாய் மூகாம்பிகை' -பக்திப் பாடகர்

1986 இல் 'நம்பினார் கெடுவதில்லை'

1986 'மீனாட்சி திருவிளையாடல்' போன்ற படங்களில் வந்து ரசிகர்களுக்கு பக்திப் பரவசமூட்டினார்.



இவர் 1956ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 26ம் திகதி சுலோச்சனா அம்மையாரை திருமணம் செய்தார். இவருக்கு ஆஸ்திக்கு ஒரு ஆணும் ஆசைக்கு ஒரு பெண்ணுமாக இருவர் மட்டுமே. ஒருவர் பிரபல டொக்டர் சீர்காழி சிவசிதம்பரம், மற்றவர் டொக்டர் ஞானவல்லி.

இசைத்துறைக்கு இவர் ஆற்றிய பணிக்கு குறிப்பாக சென்னை பல்கலைக்கழகத்தில் அவர் நடத்திய இசை ஆய்வைக் கருதியும் அவருக்கு பல்கலைக்கழகத்தின் 125ம் ஆண்டு விழாவில் டொக்டர் பட்டம் வழங்க பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்தது. 1983 இல் நடந்த விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவர் முன்னிலையில் மாநில ஆளுநரும் பல்கலைக்கழக வேந்தருமான திரு. குரானாவிடமிருந்து 'டொக்டர் பட்டம் பெற்றார்.

இசைக்காகவே இறுதி மூச்சு வரை உழைத்த இசைமணி கோவிந்தராஜன் 1988ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி மறைந்தார்●

## தொலைபேசி அழைப்பு

அழகான இளைஞன் ஒருவன் தனது இரு காதுகளும் வெந்த நிலையில் வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக சென்றிருந்தான். வைத்தியர் என்ன நடந்தது? என்று கேட்டார்.

'நான் தொலைக்காட்சியில் மட்ச் பார்த்துக் கொண்டிருக்கும் போது எனது மனைவி தனது உடைகளை அயன் பண்ணிக்கொண்டிருந்தாள். அவள் சூடான அந்த அயனை தொலைபேசிக்கு முன் வைத்து விட்டுச்செல்ல அந்த வேளை எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. நான் அந்த அயனை ரிசீவர் என நினைத்து காதில் எடுத்து வைத்துவிட்டேன் என்றான்.

''அது சரி உனது மற்றைய காதுக்கு என்ன நடந்தது?'' என்று கேட்டார் வைத்தியர் 'கொஞ்ச நேரத்தில் மீண்டும் அதே தொலைபேசி அழைப்பு வந்தது' என்றான் பெருமூச்சோடு. இது எப்படியிருக்கு?

பல்கலைக்கழகங்களின் ஆதிக்கம் கொழும்பைப் பொறுத்தவரையில் தலைநகருக்கு அப்பால்தான் மையமிட்டிருக்கிறது. பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவர்கள்கூட வேலை வாய்ப்பு மற்றும் வெளிநாட்டுப் படிப்பு என்பவற்றைத்தான் தேடுகிறார்கள். பொதுவாக தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் அதிக மாணவர்கள் இணைந்துகொள்கிறார்கள். பல்கலைக் கழகங்களுக்கு வெளியே அவர்கள் இணைந்துகொள்ளும் மற்றோர் இடத்தில் நானும் ஒருமுறை இணைந்துகொள்ளும் வாய்ப்பிருந்தது. அது ஒரு ஓய்வு நாள். வெள்ளவத்தை கடற்கரையோரப் பகுதியில் நான் காற்று வாங்கச் சென்று கவிதைகள் பற்றி, அதாவது பொம்பிளைப் பிள்ளையள்?! பற்றி (ரொம்ப ஓவரோ?) கதைக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.



# கடலோரக் கலாட்டா

சந்திப்பும் படங்களும்

ஐந்து மாணவர்கள் என்னைப் போலவே அங்கு காற்று வாங்கிக் கொண்டிருந்தார்கள். ஒருவர் பேராதனை பல்கலைக்கழகம். மற்றைய நால்வரும் 'BCAS' ல் கல்வி கற்கிறவர்கள். வழமையான பரஸ்பர அறிமுக உரையாடலின் பின்னர், அந்த மாலைப் பொழுதில் என்ன கதைக்கலாம் என யோசித்தோம். எல்லோரும் இளைஞர்களாய் இருந்ததால் பெண்கள் பற்றிக் கதைப்பதென்று தீர்மானமாயிற்று. பொடியள் சேர்ந்தால் பெட்டையளைப் பற்றிக் கதைக்கிறதுக்கும் பெட்டையள் சேர்ந்தால் பொடியளைப் பற்றிக் கதைக்கிறதுக்கும் ஒரு கூட்டுத் தீர்மானம் அவசியம் தானோ? என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது.

தீர்மானம் எடுக்கப்பட்ட கையோடு அவரவர் கருத்துக்கள் பரிமாறப்படத் தொடங்கின. "சரி! ஒவ்வொருவரும் பொம்பிளையளிட்ட நல்ல பெயர் எடுக்க என்ன செய்வியள்? அது காதலி மட்டும் இல்லை, கூடப் படிக்கிற சினேகிதி, பக்கத்து வீட்டு அக்கா, முன்கடை அன்ரி இப்பிடி பொதுவாகப் பெண்களைப் பற்றிச் சொல்லுங்கோ" என்று முதலில் நான்தான் தொடக்கி வைத்தேன்.

"நாங்கள் ஏன் மச்சான் அவங்களைப் பற்றிக் கதைச்சுப் பெட்டையளைப் பெரிசாக்கோணும்?" என்று பேசத் தொடங்க முன்னரே முட்டுக்கட்டையாக ஆரம்பித்தான் மகோதரன். "இஞ்சை வா! கதைக்க வெளிக்கிட்டதே அவங்களைப் பற்றித்தான். அதுக்குள்ள ஒப் ஆக்கிறாய். நீ கொஞ்சம் வெயிட் பண்ணு, உனக்கு அவளவையைப் பற்றி கதைக்கத் தெரியேல்லை. அப்பிடியே மூலை




யில இருந்து இந்த ஐஸ் பழத்தை சூப்பு" என்று சொன்னபடி சிவசங்கர் தன் கையிலிருந்த ஐஸ்பழத்தை கொடுத்தான். எல்லாரும் ஒரு 'ஓ..' போட்டார்கள். மகோ முகத்தில் அசடு வழிந்தது.

"எப்பவும் பொம்பிளைப் பிள்ளையளிட்ட எங்களை யோக்கியனாக் காட்டோணும்" என்றான் சிவச்செல்வன். "அதென்ன யோக்கியனாய்க் காட்டுறது எண்டு விளக்கமாச் சொல்லலாமே" என்று நான் குடைந்தேன். "எங்களோட நெருக்கமா இருக்கிற பொம்பிளையளிட்ட அவன் குடிக்கிறவன், இவன் சிகரட் பத்துறவன், உவன் ரெண்டு பேரை லவ் பண்ணிப் போட்டு இப்ப விட்டுட்டுத் திரியிறான் எண்டு எங்களைச் சுத்தியிருக்கிற மற்றப் பொடியளைப் பற்றி கொஞ்சம் அள்ளி வைக்கோணும். அப்பிடி சொன்னாத்தான், இவன் ரொம்ப நல்லவன் எண்டொரு பீலிங் அவைக்கு வரும். பிறகு கொஞ்சம் ஈசியா அவையோட பழகலாம்" என்று படு விளக்கமாச் சொன்னான். "போடா! நீயும் உன்ர ஐடியாவும். பெட்டையள் இப்ப முந்தின மாதிரி இல்லை சரியான உசார் சாமான்கள், உன்ர ஐடியா இப்ப செல்லாது வேணுமெண்டா சும்மா நாங்கள் கேக்கலாம்" என்றான் மகோ.

"மச்சான் நீ ஒருத்தியோட போனாயெண்டா அயலட்டையில போறதுகளைக் கண்டு கொள்ளக் கூடாது, ஒண்டும் தெரியாத அப்பிராணி மாதிரித்தான் பேசாமப் போகோணும். ஏய்! சதீசின்ர தங்கச்சி போறாள் எண்டு அவள் சொன்னா எங்க! எங்க? எண்டு தேடோணும், மற்றப் பொம்பிளைப் பிள்ளையளையே பிடிக்காத மாதிரித்தான் திரியோணும், அப்ப தான் தன்ர பிரெண்ட்சை அறிமுகப்படுத்துவினம், ஏன் பொம்பிளைப் பிள்ளை மாதிரி கூச்சப்படுறாய்? வடிவாக் கதையன் எண்டு அது சொல்லும். பிறகென்ன.. கலக்கல் தானே" என்றான் பிரகாஷ்.

"எப்பவும் கிழடுகள் மாதிரி தத்துவம் பேசக்கூடாது. பொம்பிளைப்பிள்ளைதானே எண்டு போட்டு, கண்டபடி அட்வைஸ் பண்ணக் கூடாது. கொஞ்சம் பிரண்லியா மூவ் பண்ணோணும். இப்ப அவளவைக்கு அப்பா, அம்மா, சகோதரங்கள், மற்றச் சினேகிதிகள் எல்லாரையும் விட்டுட்டு ஒரு ஆண் துணை தேவைப்படுது. அது காதலனாய் தான் இருக்கோணுமெண்டில்லை. ஆனா அது காதலனாய் இருந்தால் நல்லம் எண்டுதான் நினைப்பினம். அவை தங்கட மனப் பாரத்தையோ அல்லது எண்ணங்களையோ சொல்லிச் சந்தோஷப்படுறதுக்கு ஒரு துணை. அது எதிர்ப்பாலாரா இருந்தாத்தான் இரண்டு தரப்புக்கும் விருப்பம். அப்பிடியான உறவுகள் தங்கட வீட்டு விசயத்தையோ அல்லது வேலை செய்யிற இடக் கதையையோ சொல்லேக்கை பொறுமையா கேக்கோணும்" என்றான் கஜந்தன்.

"ஒமண்ணை இவனுக்கு பொம்பிளையளைப்பற்றி கொஞ்சம் கூடத் தெரியும். ஏனெண்டா ஸ்கூல்ல அடிக்கடி பொம்பளை வேஷம் போட்டிருக்கிறான்" எண்டு பழைய கதையைச் சொல்லி சிவசங்கர் கஜந்தனுக்கு எரிச்சலூட்டினான்.

"நீ சரியான வடிவப்பா, சொல்லக் கூடாது எண்டுதான் நினைச்சனான். சத்தியா நீ சைக்கிளில வந்தா சுப்பரா இருக்கும், ஏன் நீ ஜீன்சை அடிக்கடி பாவிக்கிறேல்லை? ஜீன்சில வந்தாயெண்டா கலக்கலா இருக்கும் எண்டு சொல்லி, அவையே சும்மா போப்பா! எண்டு பாதி விருப்பத்தில சொல்லுற அளவுக்கு அவையை பப்பாவில எத்தோணும். கொஞ்ச நாளுக்குள்ள நீங்க சொன்னதை ட்ரை பண்ணப் பாத்தினமெண்டா உங்களுக்கு சக்சஸ்தான். ரீவி நாடகங்களைப் பற்றிக் கதைக்கோணும், தெரியாட்டியும் தெரிஞ்ச சில நாடகங்களைப் பற்றிக் கதைக்கிறது இப்ப கட்டாயம்" என்றான் சிவசங்கர். "இதுக்காக நாங்கள் வேலை வெட்டியில்லாமல் அந்த குப்பை நாடகங்களையெல்லோ பார்க்கோணும்" பிரகாஷ் சொன்னான்.

"நாங்கள் எப்பவாவது எந்தப் பொம்பிளைக்காவது உதவி செஞ்சிருந்தா அதை அந்த இடத்திலேயே மறந்துபோடோணும். பிறகு அதை நாங்கள் நினைச்சுக் கொண்டு, பிறகு அவை உதவுவினம், ஹெல்ப் பண்ணுவினம், இல்லாட்டி எங்களை நினைச்சுக் கொண்டிருப்பினம் எண்டெல்லாம் நினைச்சுக் கொண்டிருக்கக் கூடாது. நான் அனுபவிச்சுச் சொல்லுறன்" என்று மகோ சொன்னான்.

"எல்லாரும் எல்லாம் சொல்லுறீங்கள். காதலைப்பற்றி ஒண்டுமே சொல்லேல்லையே..!" சும்மா இருந்தவங்களைக் கிண்டிவிட்டன். "அண்ணா! சிம்பிளா சொல்லுறன். பொம்பிளைங்க காதலைத்தான் நம்பி விடாதே..." என்றான் சிவசங்கர். இவனுக்கு சிலநேரம் காதல் தோல்வியா இருக்குமோ என நினைச்சுக் கொண்டு "என்ன இவன் சொல்லுறதை ஒத்துக் கொள்ளலாமோ..?" என்று கேட்டேன். "நூற்றுக்கு நூறு வீதம் சரியண்ணை, சினிமாவில காட்டுற தொண்டும் பொய்யில்லை. பொம்பிளையலால வீட்டோடை சண்டை பிடிக்க முடியுறதில்லை. என்னதான் உருகி உருகி லவ் பண்ணினாலும், எப்பிடித்தான் அதுகளுக்கு கழட்டி விட்டிட்டு போக மனம் வருதோ" என்று இரண்டு மூன்று பேர் கடுமையாய்க்கவலைப் பட்டினம்.

அஞ்சுபேரும் நண்பர்கள் என்றபடியால் ஒரே கண்ணோட்டத்தில பெண்களைப் பார்க்கிறார்களோ தெரியேல்லை. ஆனாலும் வெறும் பேச்சுக்காக அவர்கள் அவ்வாறு சொல்லியிருக்கச் சாத்தியமில்லை. "சரி நான் வரட்டோ..?" என்றேன். "அண்ணே! நாங்கள் சும்மா அலட்டினம், ஒண்டையும் எழுதிப் போடாதையுங்கோ" என்றனர். "சீச்சி நான் எழுதவே மாட்டேன்" என்று சொல்லியபடி விடைபெற்றேன்.






மிஸ்டர் குசும்பானந்தா
சுவாமி நீங்கள் நடிச்ச பக்தி வீடியோ ரிலீஸ் ஆகியிருக்குது.
ச்..சே.. முதலில இந்த திருட்டு வீ.சீ.டியை ஒழிக்கிற வழியைப் பாக்கோனும்.
சுவாமியிண்ட தற்பெருமையால போலீஸ் இப்ப எங்கள வலை வீசித் தேடுது!
ஏன் என்ன நடந்தது?
இலங்கையிலேயே ஐம்பதுக்கு ஐம்பது மகளிர் இட ஒதுக்கீடு இருக்கிறது நம்மட ஆச்சிரமத்தில தானெண்டு பேப்பருக்கு பேட்டி குடுத்திருக்கார்...!
கதவைத் திற... எண்டு தத்துவங்களெல்லாம் உதிர்த்துட்டு இப்படிக் கதவை மூடி ஒளிஞ்சு கொண்டிருக்கிறீங்களே சுவாமி...
காற்று வரட்டும் எண்டுதான் சொன்னன். ஆனா போலீஸ் எல்லோ வருகுது...?
சுவாமி உங்கட சிஷ்யனை ஏன் துரத்திட்டீங்க?
பெண் பக்தர்களை வசியப்படுத்துவதில் என்னையே மிஞ்சிட்டான். அதான்.
குருவே நீங்கள் சொன்னபடி ஐம்புலன்களையும் அடக்கிப் பழகி விட்டேன். ஆனால் என் மனைவியை மட்டும் அடக்க முடியவில்லை.
சிஷ்யா... அது முடியாமல்தானே நானே சாமியார் ஆனேன்.



# கிழக்கு மாகாண

## தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான

# உறவுகளும் விரிசல்களும்

**ஒரு இனம் தனது தாயகத்தை சொந்தம் கொண்டாடும்போது தாமே முதலில் குடிவந்த பூர்வீகக் குடிகள் என்று கோருவதைப் பார்க்கின்றோம். யார் முதலில் வந்தது என்பதுதான் இந்தப் போட்டியின் முக்கிய விடயமாக இருக்கிறது. கிழக்கிலங்கையிலும்கூட முஸ்லிம் சமூகத்தினரை ஏதோ நேற்று வந்தவர்கள் என்று கருதும் போக்கு உண்டு. எல்லா சமூகத்திலும் எல்லா காலத்திலும் மக்கள் ஒருவருக்குள் ஒருவர் கலந்து மணம் முடித்து வாழ்ந்திருக்கிறார்கள். ஒரு போதும் சுத்தமான கலப்பில்லாத இனம் என்று ஒரு இனமும் இருந்ததில்லை. இருக்கவே முடியாது. இதற்குள் 'நீ அந்த இனம், நான் இந்த இனம்' என்று எங்களுக்குள் வீண் போட்டியும் பாகுபாடுகளும் இதை உணர்த்துவது போலிருக்கும். மட்டக்களப்பில் தமிழ், முஸ்லிம் உறவுகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்ட கட்டுரையே இது.**





14(a) கல்லடிப் பாலம்-1923 ஆம் ஆண்டில் வேலைகள் நிறைவுறும் நிலையில்


கிழக்கின் ஆதிக் குடிகளாக இயக்கரையும் நாகரையும் கருத முடியும். இவர்களோடு மட்டக்களப்பு வாவியை அண்டிய கரையோரப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்ட திமிலர் எனப்படுவோர் கி.மு 3 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே வாழ்ந்ததாகவும் சில சான்றுகள் உள்ளன.

இவர்களுக்குப் பின் இங்கு குடியேறியதாகக் கொள்ளப்படும் குஹ மரபினருக்கும் அச்சூழலில் வாழ்ந்து கொண்டிருந்த திமிலருக்கும் ஏற்பட்ட சூழ்நிலை ஆதிக்கப்போட்டியே பின்னர் திமிலரை மட்டக்களப்பிலிருந்து துரத்தப்பட காரணமாக அமைந்திருக்கலாம் எனவும் ஒரு கருத்துண்டு.


இந்தத் திமிலர், குஹர் சண்டையின் போது அராபிய வியாபாரிகள் குஹ சமூகத்தவர்களுக்கு உதவிசெய்து திமிலர்களை சத்துருக்கொண்டான் எனும் இடத்தில் வைத்து யுத்தத்திலே தோற்கடித்து அவர்களை கிழக்கை விட்டே துரத்தி விட்டு குஹ சமூகத்தவர்களை நிலையான குடிபதியாக கிழக்கிலே இருக்க வைத்து திரும்பவும் திமிலர்கள் வந்து தாக்காது பார்த்துக் கொள்வதற்காக ஏறாவூரில் ஒரு பாதுகாப்பு அரணையும் மருதூரில் ஒரு அரணையும் அமைத்து அந்த இரு இடங்களிலும் அரேபிய வியாபாரிகள் குடியிருப்புக்களை அமைத்து அங்கு நிரந்தரமாக இருந்து கொண்டு பாதுகாப்பு வழங்கினர்.

அரேபிய வியாபாரிகளின் இந்தக் கைங்கரியத்தை மனத்திலே கொண்ட குஹ சமூகத்தவர்கள் இதற்கு பிரதி உபகாரமாக, நன்றிக் கடனாக எதுவும் செய்ய வேண்டும் என்று நினைத்து அவர்கள் மத்தியிலிருந்த ஏழு குடிகளிலும் ஏழு அழகான கன்னிப் பெண்களைத் தெரிவு செய்து அவர்களின் யுத்தத்திலே உதவிசெய்த அந்த 7 அரேபிய கப்பல் தலைவர்களுக்கும் திருமணம் செய்து கொடுத்தனர்.

இந்தக் கலப்புத் திருமணத்தில் ஏற்பட்ட 'குடிவழி மரபு' இன்றும் கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் அழியாது உள்ளது. மேலும் எதிர்மனசிங்கன் எனும் அரசன்



15. மட்டக்களப்புத் துறைமுகமும் கலங்கரைவிளக்கமும்



மட்டக்களப்பை ஆட்சி செய்த போது (பழைய மட்டக்களப்பு இன்றைய தென்கிழக்கே என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

நற்பிட்டிமுனைக்கு மேற்கே கிட்டங்கி வீடுகள் அமைத்து பின்வருவோர் வியாபாரம் செய்தனர். காட்டான் (கட்டாரிலிருந்து வந்தவர்கள்), சுல்த்தான் (பாரசீகத்திலிருந்து வந்தவர்கள்), சிக்கந்தர் (கிரேக்கத்திலிருந்து வந்தவர்கள்) என்பவர்களோடு வேரோடி வியாபாரம் செய்யும் துலுக்கர் (பரம்பரை பரம்பரையாக அங்கிருந்து வியாபாரம் செய்த துருக்கியர்) என வரலாற்று தகவல் கூறுகின்றது. (ஆதாரம் மட்டக்களப்பு மான்பியம் எப். எக்ஸ். சி. நடராஜா)

"கிட்டங்கி" இன்றும் கிட்டங்கி என்றே அழைக்கப்படுகின்றது. இது நட்பிட்டி முனைக்கு பக்கத்தில் உள்ள ஓர் ஊர்.

இந்தக் கிட்டங்கிக்கு அருகே உள்ள ஊர் தான் சவளக்கடை என்பதாகும். "ஜவுளிக்கடை" என்பதன் திரிந்த ஒரு வடிவமே சவளக்கடை என்பதாகும். 'ஜ' வட எழுத்து என்பதால் "ச" என்ற தமிழெழுத்தினை பாவித்த போது ஜவுளிக்கடை சவுளிக்கடையானது. பிற்காலத்தில் இது சவளக்கடை என திரிந்துள்ளது. இதிலிருந்து அரபிகளின் ஆட்சி கி.மு இங்கு இருந்ததாக அறிய முடிகிறது.



திராவிடர்களும் அன்றைய





அரபிகளின் வழித்தோன்றல்களான இன்றைய முஸ்லிம்களும் கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே கிழக்கில் ஒற்றுமையாக வாழ்ந்துள்ளார்கள் என்பதனை இது எடுத்துக் காட்டுகிறது. தமிழர், முஸ்லிம் உறவு கிழக்கில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை நினைக்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது.

இந்த ஒற்றுமையின் ஞாபகச் சின்னங்களாக கலை, கலாச்சார, இலக்கிய தடயங்கள் இன்றும் இரு சமூகங்களிடையேயும் ஒன்றுபட்டு இருப்பதை அவதானிக்கலாம். உதாரணமாக திருமண சம்பிரதாயங்களில் திராவிடர்களிடமிருந்து முஸ்லிம்கள் பெற்றுக் கொண்டவைதான் தாலி, கூறை, சீதனம் போன்றவை. அரேபியர்களிடமிருந்து திராவிடர்கள் பெற்றுக் கொண்டவையாக மருதாணி, குரவை, ஆரத்தி என்பவற்றைக் குறிப்பிடலாம்.

சிங்கள அரசர் காலத்திலிருந்து அந்நியர்கள் ஆட்சியான போர்த்துக்கீசர், டச்சுக்காரர் ஆட்சிவரை இரு சமூகங்களிடையேயும் எதுவித விரிசலும் காணப்படவில்லை. ஒற்றுமையாகவே வாழ்ந்துள்ளனர். பிரிட்டிஷ்காரரின் ஆட்சியின்போது சட்ட நிரூபண சபை, சட்ட நிருவாக சபை அமைக்கப்பட்ட போது முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்துவம் வேண்டும் என வந்தபோது சேர் பொன்னம்பலம் அருணாச்சலம், சேர் பொன்னம்பலம் ராமநாதன் ஆகிய இருவரும் முஸ்லிம்கள் தனிச் சமூகமல்ல அவர்களும் தமிழர்களின் ஒரு பிரிவினரே எனக் கூறிய கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கது.

'முஸ்லிம்கள் பெரிய வியாபாரிகள் அல்லர் அவர்கள் அங்காடி வியாபாரிகள்' எனக் கூறிய கருத்து இனப்பிரச்சினையைத் தூண்டி, அது அகில இலங்கையில் உள்ள அனைத்து முஸ்லிம்களையும் கொதித்தெழச் செய்த போதும், கிழக்கிலே வாழ்ந்த இரு சமூகத்தவர்களையும் இது பிரித்து விடவில்லை. இதனை வேறொரு வகையாக கூறுவதாயின் அரசியல்வாதிகள் இரு சமூகத்தையும் பிரிப்பதற்கு வழி சமைத்தனர் எனலாம். இதன் தொடர்தான் ஆயுதக் குழுக்களின் போராட்டத்தின்போது முஸ்லிம்கள் மீது தங்களது ஆயுதப்பலத்தைக்





# சட்டம் பேசுகிறது




செவே. விவேகானந்தன்
சட்டத்தரணி

## அவசரகால பிரகடனமும் கலைக்கப்பட்ட பாராளுமன்றம் கூட்டப்படுதலும்

2010ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ந் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அரசியலமைப்புக்கமைய ஜனாதிபதி ஒரு பிரகடனம் வெளியிட்டார். அப்பிரகடனத்தின்படி 2010 ஏப்ரல் 9ந் திகதி புதிய பாராளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெறும். 22ந் திகதி ஏப்ரல் மாதமே புதிய பாராளுமன்றம் கூடுகின்ற திகதியாகும்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆங்கிலத்தில் எம்.பி. என்று அழைப்போம். அவர்கள் தமது பதவிகளை இழந்து விடுவர். அவர்களால் எம்.பியாக தொடர்ந்துமிருக்க முடியாது. அவர்களது சம்பளம், கொடுப்பனவுகள் யாவற்றையும் இழந்து விடுவர். அவர்களுக்கென்று கொடுக்கப்பட்ட அரசாங்க வீட்டிலிருந்தும் விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். சுருங்கக்கூறின் அவர்களுக்கு 'முன்னாள் எம்.பி.' என்ற பட்டம் மட்டுமே மிஞ்சும். அமைச்சரவை அப்படியல்ல. அமைச்சரவை அந்தஸ்த்து கொண்ட அமைச்சர்கள் தொடர்ந்தும் அமைச்சர்களாக கடமை புரிவர். புதிய பாராளுமன்றம் தெரிவு செய்தபின்பு, புதிய அமைச்சரவை அந்தஸ்த்து கொண்ட அமைச்சர்கள் தொடர்ந்தும் அமைச்சர்களாக கடமை புரிவர். புதிய பாராளுமன்றம் தெரிவுசெய்த பின்பு புதிய





கார்ட்டி ஆயிரக்கணக்கான உயிர்களை பலிகொள்ள வைத்தது. இதன் உச்ச கட்டம்தான் முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டமையாகும்.

இன்று கிழக்கு மக்கள் பழைய உறவை எண்ணிப்பார்த்து அந்த உறவுகளை அசை போட்ட வண்ணம் உள்ளனர். இந்த உறவை மீண்டும் பலப்படுத்திக்கொள்ள முஸ்லிம் காங்கிரஸூம் இன்றைய கிழக்கு மாகாணசபைத் தேர்தலும் நல்லதொரு சந்தர்ப்பம் என கட்டியணைத்து கதை பேசிக் கொண்டார்கள்.

"இன்றைய சந்தேகங்கள் இரு சமூகத்தவர்களிடமிருந்தும் அகல வேண்டும். இந்த மண்ணில் வாழுகின்ற தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றாக கைகோர்த்து வாழ வேண்டும் என்பதற்காக நேற்றும், இன்றும், நாளையும் எனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றேன். இந்த இலட்சியத்தின் வெற்றியை உங்களின் முகங்களிலிருந்து என்னால் உணர முடிகிறது. இத்தகைய ஒற்றுமை மூலம் தமிழ்ச் சகோதரர்கள் அம்பாறை மாவட்டத்தில் தங்களின் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்வதோடு தங்களின் இன்னுமொரு சகோதர சிறுபான்மைச் சமூகமான முஸ்லிம பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்க முடியும். இந்த செய்தியை மாத்திரம் தான் நான் தமிழ் மக்களுக்கு விடுக்க

விரும்புகிறேன்" என்ற தலைவரின் அன்றைய பேச்சு இன்று உற்றுணர்ந்து பார்க்க வேண்டிய சரியான காலகட்டமாக கொள்ள முடியுமல்லவா?

எனவே எமது இரு சமூகமும் எதிர்கால அரசியல், பொருளாதார, கலை, இலக்கிய, கலாச்சார, மத, நில, பாதுகாப்புக்கான ஒரே ஒரு வழி, நம் இரு சமூகமும் ஒன்றுபட்டு வாழ்தலேயாகும்.

**உசாத்துணை**


01. மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் -வெல்லவூர் கோபால்

02. தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் பூர்வீக வரலாறு -மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத்


03. மட்டக்களப்பு மான்மியம் - எஸ். எப். எக்ஸ். சீ. நடராஜா


04. அம்பாறை மாவட்ட தமிழர்களின் சுபீட்சம் முஸ்லிம்களின் கரங்களை பலப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது.

கௌரவ அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப்.



மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத்



# மௌனம்


வேதங்களும் சாஸ்த்திரங்களும்
கூறும் பெண்களின் பெருமையை
இன்று வாய் பேச முடியா
ஜீவிகளாக
சிறைக் கம்பிகளில்
இல்லை முகாம் கம்பிகளுக்குள்
தூரத்தில் நின்றே கூறினாய்....
உன் நல விசாரிப்பினை.
அதுகூட விளங்கவில்லை
பெருமை கூறும் சாஸ்த்திர
வேதங்களுக்கும்
"மௌனமே"

ஜெ.ஜெகதீஸ்
புத்தளம்



அமைச்சரவை, ஜனாதிபதியால் நியமிக்கும் வரையும் பழைய அமைச்சரவை இயங்கும். இது அரசியலமைப்பின் சட்ட திட்டமாகும்.

தேர்தலின் பின் புதிய பாராளுமன்றம் ஏப்ரல் மாதம் 22ந் திகதி கூடுவதாயின் அதற்கு முன்பு, மார்ச் 9ந் திகதி பழைய பாராளுமன்றம் ஏன் கூடவேண்டும்? என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு சட்டத்தில் இடம் உண்டா என்ற அடுத்த கேள்வி எழுகின்றது. ஜனாதிபதி அவசர கால பிரகடனத்தை பிரகடனம் செய்துள்ளார். அதற்காக பழைய பாராளுமன்றம் ஜனாதிபதியினால் கூட்டப்படுகின்றது.



இலங்கை பல வருடங்களாக தொடர்ச்சியாகவும், விட்டுவிட்டும் அவசரகால நிலைமையின் கீழ் ஆட்சி செய்யப்பட்டு வருகின்றது. அவசர காலப் பிரகடனம் என்றால் எல்லோருக்கும் தெரியும். ஆனால், இந்த அவசரகால பிரகடனம் எவ்வாறு சட்டமாகியது என்று பலருக்குத் தெரியாது

இலங்கையை ஆங்கிலேயர் ஏறக்குறைய 150 வருடங்கள் அடக்கி ஒடுக்கி ஆண்டவர்கள் அவர்களது ஆட்சியில் கவர்னருக்கு பல ஏகபோக அதிகாரங்கள் இருந்தன. அவ்வாறான அதிகாரங்களை ஆங்கிலேயரின் நல உரிமைகளை பாதுகாப்பதற்காக கவர்னரால் பிரயோகிக்க முடியும். அது கவர்னரின் ஏகபோக உரிமையாகும். 1931ம் ஆண்டளவில் டொனமூர் அரசியலமைப்பு கொண்டுவரப்பட் டது. அதன் கீழ் சட்ட நிரூபணசபை மூலம் ஆங்கில ஆட்சி தொடர்ந்தது அவ்வேளையில்தான், 1947ம் ஆண்டு ஜூன் மாதம் 16ந் திகதி "பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டம்" (PUBLIC SECURITY ORDINANCE) இயற்றப்பட்டது. இத்தோடு, கண்மூடித்தனமாக பிரகடனம் செய்யும் கவர்னரின் அதிகாரம் மட்டுப்படுத்தப் பட்டது.

பெயரோ, பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டம். பொது மக்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்று அர்த்தம் கொடுக்கப்படுகின்றது. கேட்பதற்கோ இனிமையாக இருக் கின்றது. இந்தக் கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்கள்க்கமையத்தான் அவசர கால பிரகடனம் செய்யப்படுகின்றது. இந்த அவசரகால பிரகடனத்தின் கீழ் தான் பொதுமக்களின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன. நசுக்கப்படுகின்றன. பலர் சிறைச்சாலையில் பல வருடங்களாக வாடுகின்றனர். ஆட்கள் காணாமல் போகின்றார்கள். வெள்ளைவானில் ஆட்கள் கடத்தப் படுகின்றார்கள். புலி என்றும் பயங்கரவாதி என்றும் களை களையாக கப்பம் பெறுகின்றார்கள். பரிதாபமான பொதுமக்கள் நடுநடுங்கி வாய்மூடி

மௌனித்திருக்கின்றார்கள்.

1947ம் ஆண்டு தொடக்கம் பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ்தான் எமது இடதுசாரி அரசியல்வாதிகளான என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா, பீட்டர் கெனமன், பிலிப்குணவர்த்தனா போன்றோர் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் இச்சட்டத்தினால் ஏற்படும் கொடுமைகளை, துன்பங்களை பேச்சாலும் எழுத்தாலும் வர்ணிக்காத நாட்களே இல்லை. தமது இடதுசாரி கொள்கை கொண்ட அரசாங்கம் மலரும்பொழுது பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தை நீக்குவதாகவும் அவசரகால பிரகடனமின்றியே ஆட்சி செய்யப் போவதாகவும் சபதம் செய்தனர். ஆனால் நடந்தது என்ன?


1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ந் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்தது. ஆங்கிலேயரால் சோல்பரி அரசியலமைப்பு வரையப்பட்டது. அவ்வரசியலமைப்பின் கீழ் அரசாங்கம் அமைக்கப்பட்டது. ஆங்கிலேயரே தங்களால் கொடுக்கப்பட்ட அரசியலமைப்புக்குள் "பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை" ஒரு அங்கமாக புகுத்தவில்லை. தனித்து சட்டமாகவே இருந்தது. "பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டம்" அரசியலமைப்பின் அந்தஸ்த்தைப் பெறவில்லை. அதனால், பாதிக்கப்பட்டோர் நீதிமன்றம் சென்று அவசர கால

(REGULATIONS) வழக்குப் போடுவது இலகுவாக இருந்தது.

1970ம் ஆண்டு சுதந்திரக் கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து அரசாங்கம் அமைத்தன. முதலாவது குடியரசு அரசியலமைப்பு டொக்டர் கொல்வின் ஆர்.டி சில்வாவால் உருவாக்கப்பட்டது. எவர் பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்திற்கெதிராக முழக்கமிட்டாரோ, அவரே பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை முதலாவது குடியரசு அரசியலமைப்பின் ஒரு பகுதியாக மாற்றிவிட்டார். அந்தோ இடதுசாரி அரசியல்வாதிகளின் விந்தைகள்! இச் செயலால், பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தில் விடுபட்டவை அரசியலமைப்பின் மேலாண்மையினால் நிறைவு செய்யப்பட்டது. பொது மக்களுக்கு பாராதூரமான தாக்கத்தை உண்டாக்கியது.

அதன்பின், ஜே. ஆர்.ஜெயவர்த்தனா 1978ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பை உருவாக்கினார். அவரும் டொக்டர் கொல்வின் ஆர். டி.சில்வாவைப் பின்பற்றி பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் ஒரு அங்கமாக்கினார். ஒரு இறுக்கமான நிலைக்கு கொண்டுவந்தார். அதன் விளைவே பொதுமக்கள் அவசரகால ஒழுங்கு விதிகளால் பல ஆண்டுகாலமாக பாதிக்கப்பட்டு அல்லல்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.


தற்பொழுது அவசரகால பிரகடனம், பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரமும் அரசியலமைப்பின் 70 (5), 155 உறுப்புரைகளின் பிரகாரமும் ஜனாதிபதியால் பிரகடனம் செய்யப்படுகின்றது. அவ்வொழுங்கு விதிகளை பாராளுமன்றம் 14 நாட்களுக்குள் ஏற்க வேண்டும். அவ்வாறு பாராளுமன்றம் 14 நாட்களுக்குள் ஏற்காதுவிடின் அவை 14 நாட்களின்பின் சட்டவலுவற்றவையாகிவிடும். 14 நாட்களுக்குள் எடுக்கப்பட்டவை யாவும் சட்ட வலுவுடையவையாகும் என அரசியலமைப்பு கூறுகின்றது.


கொல்வின் ஆர்.டி சில்வா


ஆர்.ஜெயவர்த்தனா

அவசரகால பிரகடனத்தின் மூலம் ஒழுங்கு விதிகள் வெளியிட்டதனால் கலைக்கப்பட்ட பாராளுமன்றம் மீண்டும் உயிர்பெறச் செய்யப்படுகின்றது. மீண்டும் கூட்டப்படுகின்றது. புதிய பாராளுமன்றம் தெரிவு செய்யப்படாததால் பழைய பாராளுமன்றமே இவ்வொழுங்கு விதிகளை ஏற்று பாராளுமன்றில் தீர்மானம் கொண்டுவர வேண்டும்.

கலைக்கப்பட்ட பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்பட்டால், அவ்வாறு கூடும்படி அழைக்கப்பட்ட பழைய பாராளுமன்றம் அறிவிக்கப்பட்ட பிரகடனத்தின் கால எல்லை அற்றுப் போகும்வரை அல்லது பொதுத் தேர்தல் முடியும் வரையும், இவற்றுள் எது முன்னர் நடைபெறுகின்றதோ, அதுவரையில் அமர்ந்திருக்க வேண்டும். அவசரகால பிரகடனத்தின் கால எல்லை ஒரு மாதத்திற்கு நீடிக்கும் மார்ச் மாதம் 9ந் திகதி பழைய பாராளுமன்றம் கூடி ஏற்றுக்கொள்ளப்படும் ஒழுங்குவிதிகளின் கால எல்லை



ஏப்ரல் 9ந் திகதி முடிவடையும். அன்று தான் தேர்தல் முடிவுகளும் வெளி யிடப்படும். அதனால் மார்ச் 9ந் திகதி கூட்டப்படும் பழைய பாராளுமன்றம் ஏப்ரல் மாதம் 9ந் திகதி வரையும் அமர்ந்திருக்கும். இந்த ஒரு மாத காலத் திற்கும் சகல பழைய எம்.பிக்களும் மீண்டும் எம்.பிக்கள் அந்தஸ்த்தை பெறுவார்கள். அதிகாரங்களை பெறு வார்கள். மீண்டும் உயிர் பெற் றெழுவர். சம்பள கொடுப்பனவுகள், அதிகாரங்கள் யாவையும் பெற்று அமைச்சர்களைப்போல ஏப்ரல் 9ந் திகதி வரையும் பாராளுமன்ற உறுப் பினர்களாக இருப்பார்கள். தேர்தலில் பங்குபற்றும் பழைய எம்.பிக்கள் எம்.பிக்கான சகல அதிகாரங்களையும் கொண்ட எம்.பிக்களாக தேர்தலில் பங்குபற்றலாம்.

2010 ஏப்ரல் மாதம் 22ந் திகதி புதிய பாராளுமன்றம் கூடுவதற்கான திகதி ஜனாதிபதியால் ஏற்கனவே தீர்மானிக் கப்பட்டுள்ளது. அத்தீர்மானம் பிரக டனத்தின் மூலம் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளது.

நல்ல நேரம் பார்த்து, நாள் பார்த்து, கோள் பார்த்து 22ந் திகதி நிர்ணயிக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன. ஜனாதிபதி தேர்தலும் அவ்வாறே கணிக்கப்பட்டதாக பரப் புரை செய்யப்பட்டது. அதனால்தான் என்னவோ, பாவம், ஜெனரல் பொன் சேகா சிறையில் அடைபட்டார். 22ந் திகதிக்குப்பின் என்ன நடக்குமோ தெரியாது. எது எவ்வாறாக இருந் தாலும் மீண்டும் அவசரகால பிரகட னம் செய்யவேண்டுமென்றால் ஏப்ரல் 10ந் திகதி அல்லது 11ந் திகதி செய்ய வேண்டும். அவசரகால பிரகடனம் செய்யப்பட்ட பத்து நாட்களுள் பாராளுமன்றம் கூடி அவசரகால ஒழுங்குவிதிகளை ஏற்க வேண்டும். அவ்வாறாயின் 22ந் திகதிக்கு முன் பாராளுமன்றம் கூட்டப்படவேண் டும்.

பழைய பாராளுமன்றத்தைக் கூட்ட இயலாது. புதிய பாராளு மன்றத்திற்கு தேர்தல் முடிந்தபின் மீண் டும் கூட்டப்பட்ட பழைய பாராளு மன்றம் மரணித்துவிட்டது. இப்பொ ழுது புதிய பாராளுமன்றத்தை மட்டும்தான் கூட்டமுடியும். 22ந் திகதிக்கு முன் கூட்ட முடியுமா என்பது தான் கேள்வி. கூட்டப்பட முடியு மென்று அரசியலமைப்பின் 70(5) (இ) உறுப்புரை விபரிக்கின்றது. முதலா வது கூட்டத்திற்கென நிர்ணயிக்கப் பட்ட திகதியை பின்னரான பிரகடன மொன்றினால் மாற்ற முடியும். மாற்றப்படுமா? தேர்தலின் பின்தான் தெரிய வரும். நாம் ஒன்றை நினைக்க தெய்வம் ஒன்றை நினைப்பதும் உண்டு.

'சட்டம் பேசுகின்றது' எனும் இப் பகுதிக்கு வாசகர்கள் சட்டம் தொடர்பான கேள்விகளையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்பலாம். பிரபல சட்டத்தரணி கள் பதிலளிக்க காத்திருக்கிறார் கள்.







# உங்கள் ஐபொட் பழுதா
## நீங்களே சரி செய்யலாம்

நீங்கள் பாவிக்கும் ஐபொட் சில நேரங்களில் சார்ச் ஆகவில்லை, பாடல் ஒடிக்கொண்டிருக்கும்போது சில நேரங்களில் தானாகவே ஒப் (OFF) ஆகிவிடுகிறது என பல பிரச் சனைகளைச் சந்தித்திருப்பீர்கள். உங்க ளுக்கு உதவுவதற்காகவே முத்தான மூன்று இணையத்தளங்கள் உள்ளன.

உங்கள் ஐபொட்டின் சின்ன பிரச் சினைகள் முதல் பெரிய பிரச்சினைகள் வரை அத்தனையையும் நீங்களே சரிசெய்யத்தான் இந்த இணையத்தளம் இருக்கிறது.

முதல் இணையதளம்: http://www. ifixit.com/Guide

எந்த விளம்பரமும் இல்லை சேவை ஒன்றை மையமாகக்கொண்டு செயல்பட்டு வருகிறது. நமக்கு ஐபொட் பற்றி ஒன்றும் தெரியாவிட் டால்கூட அவர்களே படத்துடன் எப்படி திறப்பதிலிருந்து அதைசரி செய்வது வரை அத்தனையையும் சொல்லிக் கொடுக்கின்றனர். ஒரு வேளை நமக்கு அவர்கள் சொல்லுவது புரியவில்லை என்றால் அவர்களிடம் கேள்வி கேட்கலாம். எப்படி கேள்வி கேட்பது என்று தெரியவில்லையா? அதே இணையத்தளத்தில் "Answers" என்ற பக்கம் ஒன்று உள்ளது இதற்கு முன்னால் கேட்ட கேள்விகள் அனைத் தும் இங்கு வரிசைப்படுத்தி கொடுக்கப் பட்டிருக்கும் தளத்தின் வலதுபக்கத் தின் மேல் இருக்கும் "ASK Question" என்பதை சொடுக்கி உங்கள் கேள்வி களை பதிவு செய்யலாம்.

இரண்டாவது இணையதளம்: www.ipodrepair.com/ipodrepairguides.h tm இதில் எப்படி திருத்தம் செய்வது என்று வீடியோவுடன் சொல்கிறார்கள்

மூன்றாவது இணையதளம்: http:// ipodhowtovideo.com

இந்த தளத்தில் ஐபொட் என்றால் என்ன என்று அடிப்படையிலிருந்தே சொல்கின்றனர். ஐபொட்-ஐ ஒவ் வொரு ஜென்ரேசன் வாரியாக பிரித்து நமக்கு சொல்லி கொடுக்கின்றனர். ஐபொட் பழுதை சரி செய்வது பற்றி ஆர்வம் உள்ள நம் நண்பர்களுக் கும் இந்த தளம் உதவியாக இருக்கும். மொத்தமாக இந்த மூன்று தளங்களும் உங்களுக்கு பயன் உள்ளதாக இருக் கும்.




# Microsoft Windows xp யில்

## My Computer இல் USB டிரைவை காணவில்லையா?


My Computer இல் USB Drive அல்லது External Drive Memory Card காண்பிக்கவில்லை எனில் உங்கள் இயங்குதளம் உங்கள் ட்ரைவ் லெட்டரை ஏற்கனவே உபயோகத்தில் உள்ள ட்ரைவ் லெட்டரை கொண்டு மாற்றியிருந்தால் இப்படி நிகழ வாய்ப்பு இருக்கிறது.

மறுபடியும் தேவையான ட்ரைவ் லெட்டரைக் கொண்டு Re-name செய்வதன் மூலமாக இதனை சரி செய்யலாம்.


My Computer இல் வலது கிளிக் செய்து Manage என்பதை கிளிக் செய்யுங்கள்.




Computer Management திரையில் Disk Management என்பதை தெரிவு செய்யுங்கள்.




இப்பொழுது திரையில் உங்கள் கணினியில் உள்ள அனைத்து ட்ரைவ்களையும் அதனுடைய Healthy status ஐயும் காணலாம்.




இதில் உள்ள SONY என்ற USB Drive இன் ட்ரைவ் லெட்டரை மாற்ற அந்த லிஸ்டில் உள்ள அந்த குறிப்பிட்ட ட்ரைவில் வலது கிளிக் செய்து "Context Menu வில் Change Drive Letters and paths" என்பதை கிளிக் செய்யுங்கள்.












இனி திறக்கும் டயலொக் பொக்ஸில் Change பட்டனை கிளிக் செய்யுங்கள்.




இனி ட்ரொப் டவுன் லிஸ்டில் இருந்து தேவையான ட்ரைவ் லெட்டரை தெரிவு செய்யுங்கள்.




பிறகு வரும் கன்ப்ரமேஷன் திரையில் Yes கிளிக் செய்யுங்கள்.

அவ்வளவுதான். USB ட்ரைவ் உங்கள் கண்முன்னால்.




## எத்தனை சிகரட்

ஒரு கணித ஆசிரியர் வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். மாணவர்களைப் பார்த்து 'நான் வேடிக்கையான கணக்கு ஒன்று சொல்கிறேன். விடையைக் கண்டு பிடியுங்கள். பார்க்கலாம்' என்றார்.

மாணவர்கள் கேட்பதற்கு ஆர்வமாக இருந்தனர். "பாலன் என்பவன் முரடன். அவனிடம் எல்லா வகையான கெட்ட பழக்கங்களும் இருந்தன. புகை பிடித்துப் போடப்பட்ட துண்டு சிகரெட்டுக்களை இணைத்து அதன் மீது உள்ள புகையிலைத் தூளை ஒன்றுசேர்த்து ஒரு சிகரட் ஆக்கிப் புகை பிடிப்பான். ஒரு நாள் அவனுக்கு இருபத்தொன்பது துண்டு சிகரெட்டுகள் கிடைத்தன. நான்கு துண்டுகளை ஒரு முழு சிகரெட்டாக்களாம். அப்படியானால் அவற்றை அவன் எத்தனை சிகரெட்டுகளாக்கிப் புகைத்திருப்பான்?" என்று கேட்டார். ஒரே ஒரு மாணவன் மட்டுமே சரியான விடையைச் சொன்னான். அது என்ன?

விடை:- ஒன்பது சிகரெட்டுகளாக்கிப் புகைத்திருப்பான். ஏனென்றால் 28 சிகரெட்டுத் துண்டுகளை 7 முழு சிகரெட்டுக்கள் ஆக்கினான். ஒரு துண்டு எஞ்சியிருந்தது. 7 சிகரெட்டுக்களையும் புகைத்த பின்னர் எஞ்சிய ஏழு துண்டுகளையும் ஒரு துண்டையும் சேர்த்து இரண்டு சிகரெட்டுக்களாக்கிப் புகைத்தான்.

# இடம்



நன்றி: காசி ஆனந்தன் கதைகள்

கழுதையும் பட்டாம்பூச்சியும் உலாப்போயின.
மைதானத்தில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.
'இந்த இடத்தில் நான் இசைக்கச்சேரி வைப்பேன் - இங்கே எனக்கு வரவேற்பிருக்கும்'... என்றது கழுதை.
அது பாடத் தொடங்கியது.
என்ன கொடுமை... கழுதைக் கச்சேரி - கல்வீச்சு சலாட்டா என்று ஆகியது.
அடிபட்ட கழுதையும் பட்டாம்பூச்சியும் ஊரின் எல்லையில் சாய்ந்து கிடந்த ஒரு குச்சி வேலியின் அருகில் வந்து சேர்ந்தன.
கழுதைக்கு ஒரே கொண்டாட்டம்.
ஓணான்கள் வரிசையாக அங்கே வெளியில் உட்கார்ந்து தலையை ஆட்டிக் கொண்டிருந்தன. கழுதை மகிழ்ச்சியோடு பாடத் தொடங்கியது.
என்ன ஆச்சரியம் !
தலையை ஆட்டி எல்லோரும் கச்சேரியை ரசித்துக் கொண்டிருந்தார்கள்.
வியப்போடு அசைவற்று நின்ற பட்டாம்பூச்சியைப் பார்த்து ஒரு வண்டு 'ஒன்றும் வியப்படையாதே... இங்கே அப்படித்தான்' என்று கூறியது.
சுருக்கமாக அது சொன்னது
'ஓணான்களின் ஊரில்
கழுதைகளும் வித்துவான்களே'.

(முக்கிய குறிப்பு: வாக்குறுதிகளை அள்ளி வீசும் அபேட்சகர்களை மனதில் கொண்டு இது வெளியிடப்படவில்லை)



# தோற்கடிக்கப்பட்ட மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசன்!!

நாங்கள் ஆதியிலேயே
தோற்றுப்போயிருந்தோம்.
தன் அதிகாரம் மிகுந்த செயல்களுக்காக
நிராகரித்த சிறு மக்களை
அரசன்
தோற்கடித்து அரியணையில்
ஏறியிருக்கிறான்.
மோசடிகளிலிருந்து அவன் பரிபூரண
உருவத்தைப் பெற்றிருக்கிறான்.
நிரந்தரமாக முகங்கள் கருகிவிட்டன.
யார் வென்றார்கள்
யார் வீழ்ந்தார்கள் என்பதை
குழந்தைகள் அறிவிக்கத் தொடங்குகிறார்கள்.
எல்லா அரசர்களின் முன்பாகவும்
எல்லா வெற்றிகளின் முன்பாகவும்
முடிவுகளுக்கு முன்பாகவே நாம்
தோற்றுப்போயிருக்கிறோம்.
எங்கள் வானம் வீழ்ந்து படுகிறது.

மோசடிகளால் செய்யப்பட்ட கதிரையில்
அரசன் அமர்ந்திருக்க
அஞ்சும் காலங்களிலிருந்து
மிக அஞ்சி ஒடுங்கி தீர்ந்துபோகும்
நெருக்கடியான காலத்திற்குள்
கலைக்கப்படுகிறோம்.
இதுவும் சபிக்கப்பட்ட மாலையாக
பதிந்திருக்கிறது.
வாக்குறுதிகளால் அழித்து முடிக்கப்பட்ட
ஒப்பந்தங்களால் கையாண்டு ஏமாற்றப்பட்ட
அதிகாரத்தின் போட்டியில்
வாழ்வு கிழித்தெறியப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றுக்காகவும் அவனிடம்
மண்டியிடப்போகிறோம்.
குரல்களை தின்றவன் எங்களுக்காக
பாடுகிறான்.
சொற்களை செவிமடுக்க மறுத்தவன்
நாளை சொற்களை அள்ளி வீசப்போகிறான்.
திரும்பவும் புன்னகைக்கப்போகிறான்.
நமது மொழியிலேயே நம்மைச்
சபிக்கப்போகிறான்.
முளைக்க வேண்டிய பயிர்கள்
பறிபோய்விட்டன.
விளையும் காலம் அவனால்
தின்னப்பட்டிருக்கிறது.


சனங்கள் ஆதியிலிருந்து தோற்று
வருகிறார்கள்.
வீழ்ந்த சந்ததியிலிருந்து
எதைத் தன்னும் நேர்மையுடன் செய்ய
சின்ன இடைவெளியுமில்லை.
நமது தெருவுக்கும் முற்றத்திற்கும்
அவனிடம் கெஞ்ச வேண்டியிருக்கிறது.
நாம் வாழ அவனுக்கு பிரதிபலனளிக்க
வேண்டியிருக்கிறது.
முதலில் நாங்கள் எங்களுக்குள்
பெரிய தோல்வியைச் சந்தித்திருந்தோம்.
அதன் பிறகு தொடர்ந்து அவர்களிடம்
தோற்றுக்கொண்டிருக்கிறோம்.
திசைகளும் கணங்களும் சொற்களும்
மனங்களும்
வெளிகளும் துணைகளும்
வேறுவேறாக பலியிடப்படுகின்றன.

அவனால் தீர்மானிக்கப்படுகிறது காலம்.
அரசனின் மேய்ச்சல் வெளியில்
திசைகளற்றதும் பட்டிகளற்றதுமான
ஆடுகளாக அலைந்துகொண்டிருக்கிறோம்.
சொற்களைத் தடுத்து வாயைக் கட்டி
விட்டிருக்கிறான்.
இன்று யாரோ வென்றிருக்கிறார்கள்
யாரோ தோற்றிருக்கிறார்கள்.
காலத்தை நிரந்தரமாய் இழந்து குழந்தைகள்
தொடர்ந்து ஏமாற்றப்படுகிறார்கள்.
தோல்வி நம்மிடம் ஆதியிலிருந்தே வருகிறது.

**தீபச்செல்வன்**

ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன் தரும் புதிய திகில் தொடர்

# 'காற்றாய் வருவேன்'




### வாழ்ந்த காலங்கள் கொஞ்சமோ?

கடிதத்தைப் படித்து முடித்த சீதா சிறிது நேரம் பிரம்மை பிடித்தவளைப் போல் அப்படியே நின்றிருந்தாள். அவள் இதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. இவ்வளவு பெரிய பங்களாவிற்குள் உயிருள்ள எவருமே இல்லை என்பதை அவள் புரிந்து கொண்டாள். ஐயோ! என்ன இது? இப்படியான ஓர் இடத்தில் வந்து சிக்கிக் கொண்டோமே.

இப்படி ஒரு பயங்கரமான உதவியைத் தன்னிடமிருந்து மல்லிகா எதிர்பார்ப்பாள் என்பதை சீதா கனவில்கூட நினைத்துப் பார்க்கவில்லை. இப்படி எல்லாம் நடக்கும் என்று தெரிந்திருந்தால் இங்கே வராமலேயே இருந்திருக்கலாம் என்றுகூட அவளுக்குத் தோன்றியது.








இங்கே வருகிறேன் என்பதை கமலிடம் கூட சொல்லாமல் வந்தது எவ்வளவு பெரிய தவறு என்பது இப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. இங்கு நடப்பவை எல்லாம் அவளுக்குப் பெரும் புதிராகவே இருந்தது. இப்போது என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த அவளுக்கு திடீரென்று டிரைவரின் ஞாபகம் வந்தது. அவனிடம் விசாரித்தால் ஏதாவது தகவல்கள் கிடைக்கும் என்ற எண்ணத்தில் வாசல் கதவை நோக்கி விரைந்து ஓடி வந்தாள்.

ஆனால் அவள் கதவின் அருகில் வந்ததும் இதுவரையில் திறந்திருந்த கதவு தானாகவே மூடிக் கொண்டது. வியப்பில் வீழ்ந்த சீதா அந்த கதவைத் திறப்பதற்கு முயற்சி செய்தாள். முடியவில்லை.



மீண்டும் ஒரு முறை இழுத்துப் பார்த்தாள்

ம்ஹூம்...!

அவளின் முயற்சி பயனளிக்கவில்லை. அதுமட்டுமல்ல பல மாதங்களாக அந்தக்கதவு திறக்கப்படாமலேயே இருந்ததைப் போன்ற ஒரு தோற்றம் அங்கே காணப்பட்டது. ஆச்சரியம்! "என்னடா இது? சற்று நேரத்திற்கு முன்பு தானே அந்தக் கதவைத் திறந்து அதன் வழியாகத்தானே நான் உள்ளே வந்தேன்?"

சீதாவுக்குப் புரியவில்லை. "அப்படியனால் இந்த பங்களா? அவள் தோழி மல்லிகா? அவள் எழுதிய இந்தக் கடிதம்?"

திக்குத் தெரியாத ஒரு காட்டில் வழிதவறி வந்துவிட்ட ஓர் உணர்வு இப்போது அவளுக்கு ஏற்பட்டது. சிறிது நேரம் அப்படியே நின்ற சீதா மீண்டும் திரும்பி வந்து அங்கே கிடந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். சிறிது நேரத்திற்குள் நடந்து முடிந்த சம்பவங்கள் எல்லாம் ஒரு கனவு போல அவளுக்குத் தோன்றியது.

"எவருமே இல்லாமல் பாழடைந்து போயிருக்கும் இந்த பங்களாவுக்குள் எப்படி இருப்பது?"

இதை நினைக்கும்போது அவளுக்கு அழுகை வருவதுபோல இருந்தது. இனி ஒன்றுமே செய்ய முடியாது என்று அவளுக்குத் தோன்றியது. இறுதியில் தனது மனதை திடப்படுத்திக் கொண்ட சீதா என்ன



நடந்தாலும் சரி. அந்தப் பங்களாவிலேயே இருந்து தன் தோழிக்கு உதவி செய்வது என்று முடிவு செய்தாள். கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி விரைவில் செவன் ஸ்டார் கிளப்பிற்குச் சென்று அந்த மனேஜரை இந்த பங்களாவுக்கு அழைத்து வருவதற்கு அவள் முடிவு செய்து கொண்டாள். அதேநேரம் எதிரிலிருந்த அறைக் கதவு ஒன்று க்ரீச் என்ற பயங்கர சப்தத்துடன் மெல்லத் திறந்து கொண்டது. திடுக்கிட்டுப் போன சீதா படாரென்று எழுந்து நின்றாள். அடிமேல் அடி வைத்து மெல்ல மெல்ல நடந்து வந்து நின்று தலையைக் கொஞ்சம் உள்ளே போட்டு எட்டிப் பார்த்தாள். அவள் இதயம் இயந்திர வேகத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. உள்ளே மெழுகுவர்த்தி ஒன்று எரிந்து மங்கிய ஒளியைத் தந்து கொண்டிருந்தது. அந்த மங்கிய ஒளியில் அறையினுள் இருப்பவைகள் எல்லாம் சீதாவின் விழிகளில் பதிந்தன. ஒரு பெரிய கட்டில். அதில் ஒரு மெத்தையும் இரண்டு தலையணைகளும் இருந்தன. கட்டிலுக்கு எதிரில் ஒரு சிறிய மேசை. மேசையின் மீது ஏதோ மூடிவைக்கப் பட்டிருந்தது.



மெல்ல மெல்ல நடந்து உள்ளே வந்த சீதா மூடிவைக்கப் பட்டிருந்த அந்த தட்டைத் தூக்கினாள். உள்ளே இரண்டு ரொட்டிகளும் கொஞ்சம் பட்டரும் அதற்குள் ஒரு துண்டு கடிதமும் இருந்தது. நடுங்கும் கரத்துடன் அதை எடுத்துப் படித்தாள்.

அன்புத் தோழி சீதாவுக்கு

இங்கே இருக்கும் ரொட்டிகளை சாப்பிட்டுவிட்டு இந்த அறைக்குள்ளேயே படுத்துக் கொள்ளவும். எக்காரணம் கொண்டும் இரவில் அறையை விட்டு வெளியே வராதே. மீண்டும் சொல்கிறேன். வெளியில் என்ன சத்தம் கேட்டாலும் அறையை விட்டு வெளியே வராதே. அன்புத் தோழி
மல்லிகா

ரொட்டியைப் பார்த்ததும் சீதாவுக்குப் பசி வந்ததைப் போலிருந்தது. கடிதத்துண்டை சுருட்டி வீசிவிட்டு ரொட்டியின் மீது கையை வைத்துப் பார்த்தாள். அந்தக் கடும் குளிரிலும் ரொட்டி சூடாகவே இருந்தது. அப்படியானால் இப்போது தான் அதை யாரோ அங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறார்

கள். யார் வைத்தது? அதை எல்லாம் இப்போது ஆராய்ந்துகொண்டு இருக்க முடியாது. காரணம் பசி அவள் வயிற்றைக் கிள்ளியது. இப்போது அவள் உடலில் குளிர் கொஞ்சம் பரவியதைப்போல் இருந்தது. கட்டிலின் மீது குளிருக்கு அணியத் தேவையான சுவட்டர்கள் அழகாக அடுக்கி இருந்தன. அதில் ஒன்றையெடுத்து அணிந்து கொண்ட சீதா ரொட்டியை எடுத்து பட்டரைப் பூசி உள்ளே தள்ளினாள். இப்போது அவளுக்கு கொஞ்சம் களைப்பாக இருந்தது. மெல்ல நடந்து சென்று கதவைச் சாத்திவிட்டு வந்து கட்டிலில் அமர்ந்து கொண்டாள். கையில் கட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். மணி நள்ளிரவு 1.10 அதே நேரம் வெளியில் யாரோ ஒரு பெண் அலறும் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து யாரோ ஓடும் சத்தம். அந்த ஓசையைக் கேட்டதும் சீதாவின் மேனியில் ஒரு நடுக்கம். கதவைத்திறந்து பார்க்கலாமா என்று கூட அவளுக்குத் தோன்றியது. ஆனால் தோழியின் எச்சரிக்கை அவளுக்கு ஞாபகம் வந்தது. அப்படியே கட்டிலில் சாய்ந்து கொண்டாள். அச்சம் தரும் அந்தச் சுற்றுப் புறத்தில் வெகு நேரம் வரையில் அவளுக்குத் தூக்கமே வரவில்லை. தூக்கம் அவள் கண்களை தழுவியபோது பொழுது நன்றாக விடிந்து விட்டிருந்தது. ஏதோ பயங்கரக் கனவொன்றைக் கண்டு திடுக்கிட்டு எழுந்தாள் சீதா.

எழுந்தவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். கதவு சாத்தப்பட்டே இருந்தது. கொஞ்சம் எழுந்து கொண்ட சீதா கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்.


மணி 5.10

அதிகாலை அல்ல. அந்தி மாலை.

"அம்மாடியோவ்! எவ்வளவு நேரம் தூங்கி விட்டோம்?"

எண்ணிப் பார்த்த போது அவளுக்கு வியப்பாக இருந்தது.

அடுத்து விரைந்து செயலில் இறங்கினாள் அவள்!



மர்மம் தொடரும்...




# ஏது நரகம்

ஒருவன் இறந்த பின் நரகத்துக்கு செல்கிறான். அங்கு ஒவ்வொரு நாட்டுக்கென தனித்தனி நரகங்கள் இருந்தன. முதலில் அவன் ஜெர்மன் நரகத்துக்குப் போய் அங்கு என்ன நடக்கின்றது என்று பார்த்தான்.

"முதலில் உங்களை எலக்ட்ரிக் கதிரையில் இரண்டு மணி நேரம் உட்கார வைப்பார்கள். பிறகு ஆணியால் ஆன படுக்கையில் ஒருமணி நேரம் "அதன் பின் நாள் முழுவதும் கசையடி" என ஒருவர் விவரிக்க அவன் அமெரிக்க நரகத்துக்கு ஓட்டமெடுத்தான். அங்கும் இதே கதை தான். ஜப்பான், ரஷ்யா, சீனா என ஒவ்வொரு நரகத்திலுமே ரீட்மெண்ட் ஒரே மாதிரி இருந்தது. கடைசியாக அவன் நம் நாட்டு நரகத்துக்கு வந்தான்.

வாசலில் நீளமான கியூ நின்றது. எல்லோருக்குமே இங்கு வரத்தான் ஆசை போலும். ஆச்சரியப்பட்டு அவன் ஒருவரிடம் கேட்க அவரும் அதே எலக்ட்ரிக் கதிரை, ஆணி படுக்கை, கசையடி, என விவரித்தார். அப்படியும் ஏன் உலகெங்கும் இருந்தும் மக்கள் இங்கு வர விரும்புகிறார்கள் எனக் கேட்டான்.

இங்கு எலக்ட்ரிக் கதிரை இருக்குது. ஆனால் மெயின்டென்ஸே கிடையாது. எனவே வேர்க்கிங் கன்டிஷனில் இல்லை. யாரோ ஒருத்தன் வந்து படுக்கையில் இருந்த ஆணி எல்லாத்தையும் உருவிக் கொண்டு ஓடிட்டான். இங்கே கசையடி கொடுக்கிற தேவதையின் ஊழியன் வருவான், கையெழுத்திடுவான், பிறகு கன்டீன் போய்விடுவான். வரவே மாட்டான். நம்மபாடு ஜொலிதான் என்றார்.



முக் முக் கதை



# காதல் கணங்கள்

மேனகா கந்தசாமி

நீ எனக்குள் வந்து நானாகவே வாழ்வதாயே நான் உணர்கிறேன். உன் அத்தனை உணர்வுகளும் என் உணர்வுகளுடன் சங்கமித்துவிட்டன. நீ இல்லை என்றான காலத்தில் உன் இனிமையான நினைவுகள் வடுக்களாக அல்ல, ஒரு மென்மையான மயிலிறகைப் போலவே மனதில் இருந்தன. மயிலிறகு கூட சில சமயம் நெருடும் என்பதை உணர்ந்த நாட்கள் அவை. உன் தைரியமும் முடிவுகளும்தான் என்னை முழு மனிதனாக்கும் அளவிற்கு என் ஆளுமைப் பரப்பினை விருத்தி செய்திருக்கின்றன.

நீ என் தாய்போல் எடுத்துக் கொண்ட ஒவ்வொரு கரிசனைக்கும் நான் புல்லரித்த சந்தர்ப்பங்கள் ஏராளம். நீ கடிந்து கொள்ளும் அந்த ஆத்மார்த்தமான பார்வைகள் என் கண்ணில் புகுந்து நெஞ்சை உலுக்கும் அற்புதம் மிக்கவை. நீ என் காதலி என்றில்லாமல் ஆகி இன்றுடன் வருடம் ஒன்று முடிகிறது. என் ஆவி பிரிந்ததாய் உணர்ந்த அந்த நாளை இன்னும் மறக்க முடியவில்லை. காலச் சக்கரம் எத்தனை வேகமாகச் சுற்றுகிறது என்னவளே.





நீ சிறுமியாய் இருந்த அந்த நாட்கள் இன்னும் பசுமரத்தாணி போல மனதில் நிழலாடுகிறது. உன் அம்மாவின் சட்டையைப் பிடித்துக்கொள்ளும் உன் அழுக்கு முகமும் காற்றில் அலையும் உன் தலைமுடியும் கண்ணில் விரிகிறது. உன்னையொத்த வயதுதான் எனக்கும் என்றாலும் எனக்கு ஏனோ சிறுமிகளுடன் விளையாட மனம் ஏற்பதில்லை. என் விருப்பங்களுக்கு ஏற்ற வாழ்க்கை எனக்குச் சின்ன வயதிலிருந்தே வாய்க்கவில்லை. எனக்கு என்பதைவிட இந்த மண்ணின் சிறுசுகள் எல்லோருமே குழந்தைப் பருவத்தை தொலைத்தவர்களாகவே விதிக்கப்பட்டோம். நிர்ப்பந்தங்கள் எங்களை விளையாட வைத்த நாட்கள் இருக்கின்றன. சிறுபிள்ளை விளையாட்டில் இருந்து என் வாழ்வின் விளையாட்டுவரை நீதான் இருந்தாய்.

நான் அம்மா இல்லாத பிள்ளை. அம்மாவின் நினைவேக்கம் தரும் பல இரவுகளை நான் கடந்திருக்கிறேன். சொந்தங்கள் ஆயிரம் என்னருகில் இருந்தும் அவை என் அம்மாவின் இல்லாமையை போக்கியதில்லை. அவர்களின் அனுதாபங்களில் ஒருவகை அந்நியத்தை மட்டுமே என்னால் உணர முடிந்தது. என்னை நானே அன்னியனாய்ப் பார்க்கும் ஒரு குழந்தை நாளில் தான் உன்னையும் உன் பெற்றோர்களையும் சந்தித்தேன். எனக்கு நீங்களும் உறவினர்கள்தான் என்று என் அப்பா சொல்லிவைத்தார். உன் தாயின் அரவணைப்பு எனக்குப் பிடித்திருந்தது. உன் தாயை நம் தாயாக நாம் உரிமை கொண்டாடினோம். நீ உன் தாயை என் தாயாகவும் விட்டுக் கொடுத்தாய்.

நாம் வளர்ந்தோம். காலங்கள் பறந்தன. எனக்காகவே தன் வாழ்வுச் சுகங்களை மறந்த என் அப்பாவின் கனவுகள் என்னை எங்கோ கொண்டு சென்றன. பிள்ளைப் பராயம் தாண்டி இளமை கை கூடிய காலங்கள் வந்தன. பட்டும் படாத, ஒட்டியும் ஒட்டாத அந்த அழகான நட்பை எம் நாகரிகம் களங்கப்படாமல் நடத்திச்சென்றது. நீ ஆளானாய். உன் சிந்தனைகள் விரிவடைந்தன. நான் உன்னைவிடச் சற்று உயரமானேன். நாம் அவ்வப்போது சண்டை போடுவோம். எம் பேச்சு வார்த்தைகள் பருவங்கள் மாற மாறக் குறைந்து வந்தன. நீ பேசியதைவிட உன் கண்கள் பேசுவதே அதிகமாய் இருந்தது.



எம் உயர் வகுப்புக் கல்வி நாட்கள். நீ மிக நன்றாகப் படித்தாய். நானும் விட்டுத் தராமல் போட்டி போட்டேன். உன் கெட்டித்தனங்கள் சிலசமயம் என்னை மெய்சிலிர்க்க வைக்கும். சில பாடங்களில் நீ என்னை மிஞ்சுகிற போது என்னுள் ஏதோ ஒன்று உள்ளூர ரசிக்கும், ஆனால் வகுப்பில் என் சுய கௌரவம் அதை ஏற்பதில்லை. நான் உன்னை மிஞ்சுகிறபோது நீ ஏற்றுக் கொள்வதுபோல என்னால் என்றுமே முடிந்ததில்லை. உன் உடல் மொழி எனக்குப் பல கதைகள் சொல்லும், சிலது புரியும், புரியாத சிலதைப் புரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்வேன். எங்கள் கண்ணும் கண்ணும் அடிக்கடி சந்தித்துக் கொண்டன. வாய் வழி பரிமாறாத காதலை கண்கள் கேட்டன, கண்கள் சொல்லிக் கொண்டன, கண்களே தீர்மானித்தும் கொண்டன. மௌனமானோம். சிந்தித்தோம். உன் பேச்சும் சிரிப்பும் குறைந்தன. நீ முன்பிருந்ததைப் போலச் சண்டை போடவில்லை. உன் வீடு தான் என் சொர்க்கம். அடிக்கடி அங்கு நான் வருகிறபோது அதிகம் கதைப்பதை நீ தவிர்த்தாய். மௌனமே உன் பாசையான நாட்களாக அவை நீடித்தன. உன் ஓரப் பார்வைகள் சொல்லாத கதையெல்லாம் சொல்லிச் சென்றன. நான் மலையாய் இருந்தேன். அந்த மலை காதல் வெப்பத்தால் உருக ஆரம்பித்தது. நீ முன்னர் போல் இப்போது இல்லை. உன் சின்ன வயது அழுக்கு முகம் கால ஓட்டத்தில்



இத்தனை அழகு முகமாய் வசிகரிக்கும் என்று நான் எப்போதும் நம்பியதில்லை. அத்தனை அழகுமுகம் அது. உன் சிரிப்பைப் பார்க்க வேண்டும் என்று மனது நித்தமும் அடித்துக் கொண்டது. சிரிக்கும் போது உன் கன்னத்தில் விழும் குழிக்குள் நான் தடம் புரண்டு வீழ்ந்து கொண்டே இருந்தேன். நானே எனக்குள் கேள்விக் குறியானேன். ஓ இதுதான் காதலா!!

படிப்பு முடிந்தது. என் கல்விக்கும் அப்பாவின் பெருமுயற்சிக்கும் பரிசாக கை நிறைந்த சம்பளத்தோடு வேலை கிடைத்தது. உன் நினைவுகள் எப்போதும் என் வேலைத்தளத்தை ஆர்ப்பரிக்கும். உனக்காகவே ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஓடோடி வருவேன். ஒரு வாரத்தில் எனக்கான உயிர்ப்புள்ள நாளாக அந்த ஞாயிறு மட்டுமே அமைந்தது. என் வரவுக்காய் நீ காத்திருப்பாய். காத்திருக்காதது போலப் பாசாங்கு செய்வாய். யாருமறியாத உன் அனுசரிப்பும் உபசரிப்பும் என்னுள் என்னை நிமிர்த்தியது. நான் என்னையே விரும்பினேன். அவ்வப்போது உன் சேட்டைகள் என் முக மருகே வந்து செல்லும். செல்லமாக கடிந்து கொள்வாய். சில நேரம். வெறுப்பாக. எதையும் நான் வெறுத்ததில்லை ஆத்மார்த்தமான அந்த காலங்களும் மெது மெதுவாகக் கடந்தன.

திருமணப் பேச்சு வீட்டில் எழுந்தது. என் அப்பா பெண் தேடினார். கண் முன்னாலேயே ஒரு அழகு தேவதை இருக்க அவரால் எப்படி பெண் தேட முடிந்தது என்ற அதிர்ச்சியும் ஆச்சரியமும் எனக்குள் எழுந்தன. உனக்கு தெரியும், அப்பாவை தடுத்துக் கேட்கக்கூடியவன் நான் அல்ல என்பது. உன் தயவை நாடினேன். அது உங்கள் அப்பாவின் விருப்பம் என்றாய், கொஞ்ச நாள் போகட்டும் என்றாய் எனக்கு குழப்பமாகவே இருந்தது. ஏனோ நீ கலங்குவதை நான் உணர்ந்தேன். ஆனால் எதையும் நீ வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை. என்னால் முடியவில்லை அப்பாவிடம் எதையும் சொல்லும் தைரியம் இல்லாதபோதும் என் ஆற்றாமையை உன்னிடம் காட்டினேன். என்னைத் திருமணம் செய்ய, நீ எதும் செய், எதும் செய் என்று என் மனம் ஓலமிட்டழுதது.

கலியாண விசயத்தில் அப்பா கண்டிப்பாயிருந்தார். ஏனோ அவசரப்பட்டார். சிலசமயம் காரணகாரியமில்லாமல் கடுப்பானார். நான் வெந்தேன். சொல்ல முடியாத வேதனை என்னை அணு அணுவாய்க் கொன்றது. அப்பாவின் முன் எதையும் சொல்ல முடியாத மௌனியானேன். என்னை ஆளாக்கிய அப்பாவை மறுக்க முடியாத என்னால் வெறுமனே வாய்மூடி மௌனமாக அழ மட்டுமே முடிந்தது. அம்மாவின் இழப்பை மிக அதிகமாக உணர்ந்த காலமாக அது இருந்தது. கடைசி வரையிலும் என்னால் வெல்ல முடியவில்லை. அப்பா வென்றார்.



அப்பாவோடு எதையும் பேச முடியாத அந்த நாட்களில் அவர், தான் தீர்மானித்த பெண்ணை மற்றோர்க்குச் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டார். எனக்கேற்ற பெண்ணாம். அவளின் புகைப் படத்தை நீட்டினார். நான் அதை எடுத்தும் பார்க்கவில்லை. நான் உண்ணாமல் உறங்காமல் என்னையே மறந்தேன். உன்னைப் பார்க்கத் துடித்தேன். முடியவில்லை. திருமண நாளும் வந்தது. வெகு சீக்கிரத்தில் அது வந்துவிட்டது போல இருந்தது. என் வாழ்க்கையே அஸ்தமனமாகியது போல் உணர்ந்தேன். திருமண ஏற்பாடுகள் தடல் புடலாக நடந்தன. நான் எதிலும் கலந்துகொள்ளவில்லை. திருமணப் பெண்ணைப் பார்க்கவில்லை. அவளுடன் பேசவில்லை. நண்பர்களைச் சந்திக்கவேயில்லை. திருமணக் கதைகளைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. நீயும் என்னைக்காண வரவில்லை. ஆனால் உன் தாய் தந்தையர் வந்து சென்றனர். நான் அவர்களைக்கூட வரவேற்கவில்லை.



என் திருமணக் கோலம். எனக்கு அக் கோலத்திலேயே தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்றிருந்தது. நான் நீயில்லாத ஒருத்தியைத் திரு மணம் செய்து வாழ்வது தற் கொலை செய்வதும் ஒன்றாகவே இருந்தன. என்னை இறுதிவரை நீ உட்பட யாரும் புரிந்து கொள்ள வில்லையே என்ற வெறுப்பு கொன்றது. என் மாப்பிள்ளை முகம் பிணமுகமாய்க் கண்ணாடி யில் தெரிந்தது. பித்துப்பிடித்தவன் போலக் கண்ணாடி முன் என் பிம்பத் தையே பார்த்துக் கொண்டிருந்தேன். இறுதியாக ஒரு தரமாவது உன்னைப் பார்க்க ஆசைப்பட்டேன். முடிய வில்லை. மேளதாளங்கள் ஒலித்தன. அப்பாவின் குரல் என்னை மணவறைக்கு அழைத்தது. சுடுகாட்டுக்கு போவது போல நண்பர்களோடு அங்கு வந்தமர்ந்தேன். என் கண்களில் இருந்து தப்பிக்க முயன்ற கண்ணீர்த் துளிகளை அடக்கிக் கொண்டேன். மணவறை எனக்கு பிணவறையாகக் காட்சி தந்தது. சடங் குகள் நடந்தன. நான் மட்டும் நடைபிணமாக அதில் இருந்தேன். மணப்பெண் தனது தோழிகளுடன் மண வறை நோக்கி வந்தாள். நான் குனிந்து கொண்டிருந் தேன். கண்களில் கண்ணீர் முட்டியது.அது எனக்கான தல்ல. என்னோடு வாழத் தயாரான அவளுக்குமானதாய் இருந்தது.

என் கையில் தாலி வந்தேறியது. என் கைகள் நடுங் கின. என் மனம் பதறியது. கெட்டி மேளம் என் கைகளை மணப்பெண்ணின் கழுத்து நோக்கி அசைத்தன... என் உயிருக்குள் உயிரானவளே நீ! நீயேதான்! மயக்கக் கலக் கமா அல்லது உண்மைதானா, ஆனந்தம் கலந்த அதிர்ச்சி. எப்போது என்னருகில் வந்தாய். ஒரு மணமகளாக! நீ காதலியாக என்னைவிட்டுப் பிரிந்து சென்று மணம களாக இங்கு வந்தமர்வதற்கு இடையேயான அந்தச் சில நாட்கள் எப்படி மிக நீண்ட யுகங்களாய் விரிந்தன. அது தான் காதலா என்னவளே!





# கர்ப்பகாலத்தின் போது சாப்பிட வேண்டிய உணவுகள்



கர்ப்பிணிப் பெண்கள் கர்ப்பகாலத் தின்போது கொஞ்சம் அதிகமான உணவினை எடுத்துக்கொள்ளவேண் டும். ஒரு நாளைக்கு 300 கலோரிகள் அதிகமாக தேவைப்படும்.

**விட்டமின் A**

கண்பார்வைக்கும் எலும்புகளின் வளர்ச்சிக்கும் தேவைப்படுகிறது. கரட், உருளைக்கிழங்கு.

**விட்டமின் C**

தக்காளி வலுவான ஈறுகளுக்கும், பற்களுக்கும் தேவைப்படுகிறது.
போலிக் அமிலம்
பீன்ஸ், தோடம்பழம் இரத்த உற்பத்திக்கு தேவைப்படுகிறது.

**புரோட்டீன்.**

செல்களின் வளர்ச்சிக்கும் இரத்த உற்பத்திக்கும் தேவைப்படுகிறது. மீன், முட்டையின் வெள்ளைக்கரு போன்றவற்றில் புரோட்டீன் அதிகளவில் உள்ளது.

**காபோவைதரேட்**

உருளைக்கிழங்கு, அரிசி, பழங்கள், காய்கறிகள்

**கல்சியம்**

வலுவான எலும்புகள் மற்றும் பற்கள் உருவாக்கத்திற்கு தேவைப்படுகிறது.

**இரும்பு**

சிவப்பணுக்கள் உருவாக்கத்திற்கு தேவைப்படுகிறது.



மழைக்கும் எருமைக்கும் உள்ள தொடர்பு என்ன?

வே. கவிதா, வாழைச்சேனை

நம்பிக்கை மிக்க வாக்குகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் உரிய அதே தொடர்புதான்.

'இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?' என்று அடிக்கடி மனைவி கேட்பது எதைக் காட்டுகிறது?

யோ. தவராஜா,
புன்னாலைக்கட்டுவன்

உங்கள் கருத்தை அறிய மனைவி ஆசைப்படுவதாக எண்ணி புல்லரித்து விடாதீர்கள். தன் கருத்தை உங்கள் வாயால் பெற அவர் முயற்சிக்கிறார் என்பதை புரிந்து கொள்வீர்களாக.

எப்ரல் 8 இல் வரும் பொதுத் தேர்தல் குறித்து இருக்கிறம் எப்போது விபரமாக எழுதும்?

த. நர்மதா,
வெள்ளவத்தை

எப்ரல் முதலாம் திகதி.

'அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்' என்றால் என்ன?

என். சசிகரன் மஸ்கெலியா

அன்பை எல்லாம் பூசாவுக்குள் அடைக்க முடியாது என்று வள்ளுவன் அன்றே சொன்னது. அன்பு கட்டுக்குள் அடங்காது என்பதைவிட அதுவே மேதைகளை உருவாக்க வல்லதும் என்கிறார் இசை மேதை மொசார்ட் "மிகப்பெரிய புத்தி சாலித்தனமோ உயர்ந்த கற்பனை வளமோ மேதைகளை உருவாக்கு வதில்லை. மாறாத அன்பு, அன்பு, அன்பு மட்டுமே ஓர் உண்மையான மேதையின் ஆன்மாவாக இருக்கிறது" - மொஸார்ட்



# ஐயன் பதில்கள்







ஹெமிஸ்ட்ரி என்பது இரசாயனவியல் தானே?

ப. குமுதா, வவுனியா

நான் மானாட மயிலாட பார்ப்பதில்லை.

தலைச் சுற்று என்னென்ன காரணங்களால் வருகிறது?

முஹமட் ஸப்ரின், சாய்ந்த மருது

எப்ரல் 8 வரைக்கும் அப்படித்தான் இருக்கும் சமாளிக்கவும்.

உலகம் மாயையா?

க. பிரதீபன், மட்டக்களப்பு

ஏன் அவசரமாகக் கலியாணம் முடித்தீர்கள்?




அரிச்சந்திர புராணத்தை விரிவாக விளக்க முடியுமா?

க. யோகேஸ்வரன், கொக்குவில்

எதைக் கேட்பதானாலும் நேரடியாகக் கேட்கவும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளை விரிவாக இங்கு விளக்க முடியாது.

இன்று கற்பித்தலில் ஈடுபடும் எல்லோரையும் ஆசிரியர்கள் என்று சொல்லலாமா?

த.விக்னா, குருநகர்

"யோசிப்பது குரு இல்லாத வித்தை". நான் யாரிடம் கற்றுக் கொள்கிறேனோ அவனே என் ஆசான். கற்றுக் கொடுக்கிறவர்கள் எல்லாம் ஆசிரியர்கள் அல்லர். பாடசாலைகளுக்கு வெளியேயும், அலுவலகத்திலும், அயல் பயணியாகவும் ஆயிரம் ஆயிரம் பேர் கற்றுக் கொடுப்பதற்கென்றே திரிகிறார்கள். அவதானமாய் இருங்கள்!

கருணாநிதியின் சால்வை மஞ்சள், இங்குள்ளவரின் சால்வை சிவப்பு. இரண்டும் எதைக் குறிக்கிறது?

ப. மஞ்சுளாதேவி, பாண்டிருப்பு

ஒன்று குரங்கின் நிறம், மற்றையது குரக்கன் நிறம். வேறு வகையில் சொன்னால் ஒன்று பத்திரிகை மற்றையது ஒரு பகுதி.

பத்மினி பற்றி என்ன சொல்கிறீர்கள்?



ந.லோகநாதன் யாழ்ப்பாணம்

அவரை நினைத்தாலே 'தில்லானா மோகனாம்பாள்'தான் நினைவில் வருகிறது. ஊதுகிற நாதஸ்வரத்துக்கு என்ன அற்புதமாய் நளினம் பிடித்து ஆடத் தெரிகிறது அவரால்! அதுசரி அப்படத்தில் நடிகர் திலகம் ஏற்ற பாத்திரத்தின் பெயர்கூட 'க'னாவில் தானே தொடங்குகிறது.

உலகின் மிகப் பெரிய நகர் எது?

க.வே.வீரபுத்திரர், ஹட்டன்

மக்கள் தொகையின் அடிப்படையில் பார்த்தால் ஜப்பானின் ரோக்கியோ நகர்தான் பெரியது. பிந்திய புள்ளிவிபரத்தின்படி அங்கு 33,200,000 மக்கள் இருக்கிறார்கள். மக்கள் சீனத்தின் பீஜிங்கில் உள்ள மக்கள் தொகை 8,614,000 மட்டுமே. எட்டு மில்லியனை விட அதிகரித்த எண்ணிக்கையிலான மக்கள் வாழும் நகரங்களின் வரிசையில் பீஜிங் 23 ஆக இருக்கிறது. இரண்டாவது நகராக நியூயோர்க்கும், ஆறாம் இடத்தில் மும்பாயும் உள்ளன.

மதுவுக்கு ஏன் அந்தப் பெயர்?

அ. நவீன்,
யாழ்.பல்கலைக்கழகம்

பெயர் நீளமாக இருந்தால் போதையில் சொல்ல முடியாது என்பதற்காய் இருக்கலாம். அல்லது மகிழ்ச்சியிலும் துக்கத்திலும் அதுவே அதிகம் பயன்படுகிறது என்ற காரணத்திற்காயும் இருக்கலாம்.

கிராமப்புற மக்கள் பொதுவாக காலணி அணிவதில்லை. அதற்குக் காரணம் வறுமையா அறியாமையா?

வி. அபிராமி, பெரியகல்லாறு

இரண்டுமே இல்லை அது ஞானம். தன் சொந்த மண்ணிலிருந்து ஓரங்குலம்கூட விலகி நிற்க விரும்பாத ஞானம். அவர்கள் மட்டும்தான் மண்ணின் மைந்தர்கள்.

கடவுள் உயர் திணையா? அஃறிணையா?

சே. ஞானக்குமரன்,
கொட்டாஞ்சேனை

அஃறிணைதான். மனிதன் உயர் திணைகளை நம்புவதில்லை.

மெய்யனுக்குப் பிடித்த சினிமாப் பாடல்?

அ. யாழினி, மட்டக்குளி

காற்றுக்கு என்ன வேலி
கடலுக்கு என்ன மூடி






# வாசகர் கருத்து!

50 ஆவது இருக்கிறம் இதழை அண்மையில் வாசித்தேன். புதிய மெருகுடன் பல ஆக்கங்களை படைத்திருந்தது. அதிரடியாக ஆரம்பித்த பேய்க்கதை திகிலூட்டுகிறது. ஆசிரியர் தலையங்கம் தொடங்கி இருப்பு வரை எல்லா ஆக்கங்களுமே சூப்பர். வாழ்த்துக்கள்.
மகாலிங்கம் புவனேஸ்வரன்,
சுங்க வீதி, திருகோணமலை

இருக்கிறம் பார்த்தேன். பல போட்டிகள், எதிர்ப்புகள், தடைகள் என யாவற்றையும் தாண்டி 50 இதழ்களைக் கடப்பது என்பது சாதாரண விடயமல்ல. இருக்கிறம் குபவினருக்கு வாழ்த்துக்கள். பதிப்பகத்தார், ஆசிரியர் தலையங்கம், தோட்டியின் பதிவு, குட்டிக் கதைகள், மருத்துவம், ஸ்போர்ட்ஸ், கார்ட்டூன், திரை விமர்சனம், தொழில்நுட்ப தகவல்கள், இராசி பலன் என பக்கம் பக்கமாக தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளது. அட்டை வடிவமைப்பு, பக்க வடிவமைப்பு என எல்லாமே தரமாக இருக்கின்றன.
ராதிகா நகுலேஸ்வரன்,
பார்வீதி, மட்டக்களப்பு

ஐம்பது இதழ்களைத் தொட்டு சாதனை படைத்த இருக்கிறத்துக்கு வாழ்த்துக்கள். ஒருபக்க கதைகள் விரும்பிப் படிக்கத் தூண்டுகின்றன. நகைச்சுவையாக இருக்கிறது. கார்ட்டூன் பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது. முஸ்லிம்களுக்கென்று தனி ஒரு பகுதியை ஒதுக்கியது நல்லதோர் விடயம். எந்த சஞ்சிகையும் தராத ஒரு சந்தர்ப்பம். தொடர்ந்து பல புதுமைகளை எதிர்ப்பார்க்கிறேன்.
முஹமட் இசாம்,
புத்தளம்

இருக்கிறமுக்கு கடிதம் எழுதத் தோன்றியதே ஊடக மயக்கத்துக்காகத்தான். ஏன் அந்த தொடரை பிரசுரிப்பதில்லை? உண்மைகள் உறங்காது. தொடர்ந்து வந்துகொண்டிருந்த மெய்யன் பதில் போன்ற ஆக்கங்களை இப்படி இடையிடையே பிரசுரிக்காமல் ஏமாற்றும் செயலானது இருக்கிறம் மீதான வாசகர்களின் நன்நம்பிக்கையை இழக்கவே செய்யும். இதனை கவனத்தில் எடுப்பீர்கள் என நினைக்கின்றேன்.
தர்மலிங்கம் சசிதரன்,
கோப்பாய், யாழ்ப்பாணம்

கடந்த இதழ் என் கரம் கிட்டியது. அழகிய தோற்றத்துடன் காட்சியளித்தது. இராவணேசன் நாடக விமர்சனம் இலங்கை அரசியலுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டு இருந்தது வரவேற்கத்தக்கது. மருத்துவம் பயனுள்ளதாக இருக்கிறது. ஜோக்ஸ் நன்றாக இருந்தது. தொடர்ந்து முன்னேற வாழ்த்துக்கள்.
சியாமளா ஸ்ரீஸ்கந்தராஜா,
36வது லேன், வெள்ளவத்தை



# கரை சேருமா பாகிஸ்தான்!!

-சீ.கே.மயூரன்-

"20-20" சாம்பியனான பாகிஸ்தான் அணி இம்முறை பல குழப்பங்களோடு "20-20" உலகக் கிண்ணத் தொடருக்குத் தயாராகிறது. முன்னணி வீரர்கள் சிலர் தண்டனைக்குள்ளாகியதால் இம்முறை "20-20" உலகக் கிண்ணத் தொடரில் நடப்பு சாம்பியன் என்ற பட்டத்தைத் தக்க வைத்துக் கொள்ளுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. எனவே இம்முறை "20-20" உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் பாகிஸ்தான் அணிக்கு பெரும் சிக்கலுடனே ஆரம்பமாகிறது.

அவுஸ்திரேலிய அணிக்கெதிரான போட்டிகளில் பாகிஸ்தான், என்றுமில்லாத அளவு படுதோல்வியடைந்தது. இந்தத் தோல்விகளுக்கு பாகிஸ்தான் வீரர்களான கம்ரன் அக்மல், உமர் அக்மல் சகோதரர்கள், ஷொகைப் மாலிக், ஷாகித் அஃப்ரீடி, ரானா நவீத் உல் ஹசன் ஆகியோரே காரணமென்றும், அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என்ற கருத்துக்களும் வலுப் பெற்றன. இதனால் இவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்த பாகிஸ்தான் கிரிக்கெட், அதிரடியாக யாரும் எதிர்பாராத தண்டனைகளையும் விதித்துள்ளது.

சிட்னியில் அவுஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் பல ஆட்டமிழப்பு வாய்ப்புகளைத் தவற விட்டு அணியை தோல்விப் பாதைக்கு இட்டுச் சென்றவர் விக்கெட் காப்பாளர் கம்ரன் அக்மல். இவர் அடுத்த போட்டியில் விளையாட மாட்டாரென பாகிஸ்தான் அணி நிர்வாகம் அறிவித்தபோது, தான் அணியில் இடம்பெறுவேனெனக் கூறியதால் அப்போதே விமர்சிக்கப்பட்டவர். இதைவிட இவரது சகோதரரான உமர் அக்மல், தன் சகோதரை நீக்கினால் தானும் விளையாடுவது



சந்தேகமென பொய்க்காயத்தை காரணம் காட்டிக் கூறிய கருத்துக்களென இந்த சகோதரர்களின் வாய்ப் பேச்சுக்கள்(அவுஸ்திரேலியத் தொடரில் இவர்கள் துடுப்பால் சாதித்ததைவிட) அதிகம். அப்போது பேசிய இந்த வாய்ப்பேச்சுக்களுக்கு இப்போது தண்டனை அனுபவிக்கிறார்கள். பல லட்சம் ரூபாய்கள் (25,000 முதல் 30,000 டொலர்) அக்மல் சகோதரர்களுக்கு அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஷொகைப் மாலிக், ராணா நவீத் உல் ஹசன் இருவரும் அணிக்குள் பிளவுகளை ஏற்படுத்தும் வீரர்களாக இருந்துள்ளதால் இவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களிருவரும் 20 லட்சம் அபராதத்துடன் ஓராண்டு தடைக்கும் உள்ளாகியுள்ளனர். அதைப்போல் "20-20" அணித் தலைவரான அஃப்ரீடி பந்தைக் கடித்து சேதப்படுத்தியிருந்தார். இது பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கே அவப்பெயரை ஏற்படுத்தியது. பந்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் காரணமாக இவரும் தண்டனைக்குள்ளாகியுள்ளார். 30 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சர்வதேச கிரிக்கெட் பேரவையால் அஃப்ரீடிக்கு இரண்டு போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டமை நீங்கள் அறிந்ததே.

கம்ரன் அக்மல், உமர் அக்மல் சகோதரர்கள், அஃப்ரீடி ஆகியோரின் செயற்பாடுகள் எதிர்வரும் 6 மாதங்களுக்குக் கவனிக்கப்படும். அந்தக் காலப்பகுதியில் ஏதாவது சிக்கல்களில் மாட்டிக் கொண்டால் இவர்களின் கிரிக்கெட் எதிர்காலமும் கேள்விக்குறியாகிவிடும்.

இந்தத் தண்டனை அறிவிப்புகளால் "20-20" அணித் தலைமைப் பொறுப்பும் அஃப்ரீடியிடமிருந்து பறிபோகலாம். சகலதுறை வீரரான அப்துர் ரசாக் அணித் தலைவராகக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

இதைவிட முன்னாள் அணித் தலைவர் யூனிஸ்கான், அவுஸ்திரேலிய தொடரில் டெஸ்ட், ஒருநாள் அணித் தலைவராக செயற்பட்ட முகமது யூசுப் ஆகியோர் பாகிஸ்தான் அணிக்காக எந்தவொரு சர்வ







தேச போட்டிகளிலும் விளையாட முடியாத நிலைக்குள்ளாகியுள்ளனர். (இதை ஆயுட்காலம் என்றே எடுத்துக் கொள்ளலாம்) இவர்கள் அடிக்கடி அணி வீரர்களுடன் முரண்பட்டுக் கொள்வதால் இந்தத் தண்டனைக்குள்ளாகியுள்ளனர். பாகிஸ்தான் அணிக்கு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள், "20-20" போட்டிகள் பலவற்றில் வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்திருந்த இவர்களுக்கு இப்படியான தண்டனை விதிக்கப்படுமென யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. இனி இவர்களின் நிலை மிகப் பரிதாபமே.

கிரிக்கெட் வரலாற்றில் கிரிக்கெட் வீரர்கள் மீது ஒரே சமயத்தில் இவ்வளவு கடுமையான நடவடிக்கையை எந்தவொரு கிரிக்கெட் சபையும் இதுவரை எடுத்ததில்லை. இது கிரிக்கெட்டுலகில் முக்கிய திருப்புமுனை என்றே சொல்லலாம். பாகிஸ்தான் கிரிக்கெட் எடுத்திருக்கும் இந்த அதிரடி முடிவுகள் கிரிக்கெட் போட்டிகளில் நடத்தை விதிகளை மீறி நடக்கும் வீரர்களுக்கு நல்ல படிப்பினையே.

கடந்த இருக்கிறம் 49 ஆவது இதழில் பாகிஸ்தான் கிரிக்கெட்டின் குழப்பங்கள் பற்றி முழுமையாக குறிப்பிட்டிருந்தேன்.

இதேவேளை பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக ஓய்வுபெற்ற வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.


அண்மைக் காலமாக இன்திகாப் ஆலமின் பயிற்சியின் கீழ், பாகிஸ்தான் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. இதனால் புதிய பயிற்சியாளரை நியமிக்க வேண்டிய கட்டாயத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் இருந்தது. பலரின் பெயர்கள் பரிசிலனையில் இருந்தபோதும், பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனிஸ் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்படுவதாக அறிவித்தது பாகிஸ்தான் கிரிக்கெட். இதற்கும் பல எதிர்ப்புகள் வந்தபோதும் அவற்றைக் கணக்கெடுக்காமல், எதிர்

வரும் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் வரை வக்கார் பயிற்சியாளராக செயற்படுவாரென பாகிஸ்தான் கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது. பாகிஸ்தான் அணிக்கு பந்துவீச்சுப் பயிற்சியாளராக இருமுறை பணியாற்றிய அனுபவத்துடன் தனது இரண்டாம் இன்னிங்சை ஆரம்பிக்கவுள்ளார் வக்கார். இந்த இன்னிங்ஸ் வக்காருக்கு கடினமான இன்னிங்சாகவே இருக்கப் போகிறது. பாகிஸ்தான் வீரர்களை ஒரு கட்டுக்கோப்பான அணியாக உருவாக்கவே அதிகம் போராடவேண்டிய நிலை இப்போது இவருக்கு.

பாகிஸ்தான் கிரிக்கெட் எடுத்திருக்கும் இந்த அதிரடித் தண்டனை வக்காரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

87 டெஸ்ட் போட்டிகளில் 373 விக்கெட்டுகளையும் 262 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 416 விக்கெட்டுகளையும் கைப்பற்றி, பாகிஸ்தான் அணிக்காக தனது பந்துவீச்சின் வேகத்தால் பல வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்த வக்கார், இனி பயிற்சியாளர் உருவத்தில் அணிக்கு வெற்றிகளைப் பெற்றுக் கொடுப்பாரா....

வக்காரின் பயிற்சியில் பாகிஸ்தான் கிரிக்கெட் கரை சேருமா...?



சாரீரம் www.sareeram.com
இணைய வானொலி
சாரீரத்தோடு இணைந்து கொள்வதற்கு
Sareeram@Live.Com
Sareeramir
talk Sareeram@gmail.Com
Sareeram@yahoo.Com



# வெங்காயம்

ஒரு ஊரில் வெங்காயம், தக்காளி, ஐஸ்கிரீம் என மூன்று நண்பர்கள் இருந்தார்களாம்.

ஒரு நாள் மூவரும் கடற்கரைக்குப் போனார்களாம். அப்போது சொல்ல சொல்லக் கேட்காமல் ஐஸ்கிரீம் தண்ணீருக்குள் போய் கரைஞ்சிப் போய்ட்டுதாம். தக்காளியும் வெங்காயமும் அங்கேயே புரண்டு புரண்டு அழுதாங்களாம்.

வீட்டுக்கு வாற வழியில் லொறி மோதி தக்காளி நசுங்கி போய்ட்டாம். உடனே வெங்காயம் அழுதுகொண்டே கடவுள் கிட்ட வேண்டுச்சாம். "ஐஸ்கிரீம் செத்தப்போ நானும் தக்காளியும் அழுதோம். இப்போ தக்காளி செத்துட்டுது. நான் அழுதேன். ஆனா நான் நாளைக்கு செத்தேன்னா எனக்குன்னு அழ யார் இருக்காங்க?" எண்டு கேட்டுச்சாம்.

அதற்கு கடவுள் "சரி இனிமே நீ சாகும்போது பக்கத்துல இருக்குற எல்லோருமே அழுவாங்க" எண்டு சொன்னாறாம்.

இப்போ விளங்குதா ஏன் வெங்காயம் நறுக்கும்போது நாம அழுறோம் எண்டு?!





# தம்பிக்கு இந்த ஊரு

## பெயரே இல்லாத ஊர்

காதல், வெயில், எம்டன் மகன் போன்ற வெற்றிப்படங்களுக்குப் பின் பரத் நடித்த படங்கள் எல்லாம் ஒரே வகையைச் சார்ந்தவைதான். அந்த வரிசையில் பரத் நடித்து வெளிவந்துள்ள படம்தான் 'தம்பிக்கு இந்த ஊரு' சரவணன், பாஸ்கர் ஆகியோரின் தயாரிப்பில் பத்ரியின் இயக்கத்தில் வெளிவந்துள்ள இப்படத்திற்கு தரன் இசையமைத்துள்ளார்.

'சின்னத்தளபதி' என்று டைட்டிலில் பரத்தின் பெயர் வருவதாலோ என்னவோ விஜயைப் போல் பாடல்களில் உடையணிந்து வருவதோடு நடன இயக்குனருடனும் சேர்ந்து நடனமாடுகிறார். 'எடுத்த வேலைய முடிக்காம அடுத்த வேலைய தொடக்கூடாது' என அறிமுக காட்சியிலேயே பரத் விடும் பஞ்ச் டயலாக் படத்தையே பஞ்சராக்கி விடுவது போல் உள்ளது.



சிங்கப்பூரில் ரெஸ்ரோரண்ட் நடத்தும் அகிலுக்கு (பரத்) அவனது பெற்றோர்கள் அவனை வளர்த்தவர்கள் என்று தெரியவருகிறது. பெற்றவர்களைத் தேடி இந்தியா வரும் நாயகன் நாயகிக்கு ஏற்படும் பிரச்சினையில் மூக்கை நுழைத்து வம்பில் சிக்கிக் கொள்கிறார். அந்த வம்பில் இருந்து நாயகன் தப்பினாரா? தப்பி பெற்றோர்களை கண்டுபிடித்தாரா? நாயகியின் கரம் பற்றினாரா? என்பதே மீதிக்கதை.

திரையுலகில் கதாநாயகர்களாக வலம் வந்து பின்னர் காணாமல் போனவர்கள் பட்டியலில் இடம்பெற பரத் மிகுந்த ஆர்வம் காட்டி வருவதுபோல் தெரிகிறது. வருகிறார். படங்களில் நடிக்கா விட்டாலும்கூட 'காதல்', 'வெயில்' போன்ற படங்களில் நடித்தவர் என கொண்டாடலாம். ஆனால் பரத் இதே போன்று அரைத்த மாவையே அரைக்கும் புளித்துப் போன கதைகளைத் தேர்ந்தெடுத்து நடித்தால் அவரே கூட அவர் படத்தை திரையரங்கில் பார்க்க முடியாத அளவு நிலைமை மிக மோசமாகி விடும்.

பரத்தின் காதல், நிழல்கள் ரவி பரத்தின் உண்மையான அப்பா இல்லை. இப்படி ஒவ்வொன்றுக்கும் ஃப்ளாஷ்பேக் போடுகிறார்கள். பரத் ஆடுகிறார், பாடுகிறார், சண்டை போடுகிறார். ஆனால் நடிப்பு? சொன்ன வேலையைச் செய்திருக்கிறார். படத்தின் கதையைப் பற்றி பேசவேண்டியதில்லை. அப்படி ஒன்று இருந்தால்தானே பேசுவதற்கு. பலமுறை பார்த்துச் சலித்துப் போன 80களில் வந்த படங்களின் கலவையாக இந்தப் படத்தின் கதை அமைந்துள்ளது. ரஜினி படங்களில் பார்த்த பல காட்சிகள் மீள்கலவை செய்யப்பட்டவை போல் இருக்கின்றன.

கதாநாயகி சனா கானுக்கு படத்தில் பெரிய வேலை ஒன்றும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நாயகியாக அல்லது நாயகனுக்கு படத்தில் நேர்ந்து விடப்பட்ட பெண் கதாபாத்திரம். அவரை கொஞ்சநேரம் விளையாட வைப்பதன்மூலம் அவர் ஒரு ஸ்குவாஷ் வீராங்கனை என்று நம்ப வைக்கப் பார்க்கிறார்கள். காட்சிகளில் அழுத்தம் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். காதல் காட்சிகள் எல்லாம் காமெடி காட்சிகளாக இருக்கின்றன. இதனால்தானோ என்னவோ பல காட்சிகள் பட்டும் படாமலே நம்மை இம்ப்ரஸ் செய்யாமல் நகர்கின்றன.

படத்தில் நல்ல அம்சங்கள் என்று பார்த்தால்





இரண்டு, மூன்று விஷயங்களே தேறுகின்றன. பால்ராம் நாயுடு கெட்டப்பில் கலக்கும் விவேக்கும் தாதா நாடகம் போடும் எம்.எஸ். பாஸ்கரும் சிரிப்பு சாம்ராஜ்யம் நடத்தியுள்ளனர். தெலுங்கு ரவுடியாக பில்ட் அப் கொடுக்கும் எம்.எஸ்.பாஸ்கர் திரையில் வரும்போதெல்லாம் தியேட்டர் கலகலக்கிறது. பார்த்து ரசிக்கிற மாதிரியான காமெடிகள். கொஞ்சம் அதிகமாகவே சிரிக்கலாம்.

பிரபு குணசித்திர நடிகராக கலக்கியிருக்கிறார். ஊரே பயந்து நடுங்கும் நல்ல குணமுள்ள 'தாதா' தொழிலதிபர். தோன்றும் பொழுதெல்லாம் திரையை அடைத்துக் கொள்கிறார். 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம் பொன்' என்ற பழமொழி இவருக்கு பொருந்தும். சின்னச் சின்ன பாத்திரங்கள் தான் என்றாலும் திரைக்கதைக்கு முக்கியமானவர் என்ற முலாம் பூசி இரண்டாம் நாயகன் அளவுக்கு உகப்பி விடுகின்றனர். படத்தில் பிரபுவின் ரியாக்ஷன்களுக்குப் பாராட்டுச் சொல்லலாம். படத்தின் உண்மையான ஹீரோ பிரபு என்றே சொல்லலாம். பரத் சென்னை வந்ததில் இருந்து இவரது கரக்டரை சுற்றித்தான் கதை நகர்கிறது. இவர் சம்பந்தப்பட்ட காட்சிகளில்கூட இயக்குனர் மினக்கெடாவிட்டாலும் பிரபுவின் பேச்சும் பார்வையும் நடிப்பும்தான் ஒவ்வொரு காட்சியையும் தூக்கி நிறுத்துகிறது. அவர் நடை, உடை எல்லாவற்றிலும் வித்தியாசம். குமாரசாமியாய் வந்து மனிதர் தூள் பண்ணியிருக்கிறார்.

இருபது, முப்பது வருட பழைய கதை. தொழில்நுட்ப நேர்த்தியும் அந்த காலக்கட்டத்தினை தாண்டவில்லை. 'வீராப்பு', 'ஐந்தாம் படை' யைத் தொடர்ந்து பத்ரிக்கு இது மூன்றாவது படம். தேடிக் கண்டுபிடித்து ஆறுதல் அடைய வில்லன் 'ரஞ்சித்' தின், அதிகம் சத்தி உயிரெடுக்காத இரக்க குணத்தினை சொல்லலாம். வசனங்கள் முதல் கொண்டு, படத்தில் வரும் அனைத்தையும் நாம் முன்கூட்டியே யூகித்து விடலாம். பிரபுதான் பரத்தின் ஒரிஜினல் அப்பாவாக இருப்பார் என்ற சஸ்பென்சும் முன்பே யூகிக்கக் கூடியதாக இருப்பதால் திரைக்கதை சப்பென்றே நகர்கிறது.

திடீர் திடீரென பாட்டைப் போடுகிறார்கள். ஒரே இரைச்சலாக இருக்கிறது. சண்டைக்காட்சிகளின் நீளத்தைக் கொஞ்சம் குறைத்திருக்கலாம். படம் தொடங்கிய கொஞ்ச நேரத்திற்கு ஸ்லோவாகத்தான் நகர்கிறது. பரத் சென்னை வருவதில் இருந்து கதை வேகமாக பயணிக்க ஆரம்பிக்கிறது. அந்த பரபரப்பை அவ்வப்போது கொடுத்து கடைசிவரை கொண்டு போனதற்காக இயக்குனரை பாராட்டலாம்.

அதே சண்டை, அதே பாட்டு, அதே செண்டிமெண்ட் என பழைய பார்முலாவிலேயே சுற்றுவதால் 'தம்பிக்கு எந்த ஊரு' என்று புரியாமலேயே தியேட்டரை விட்டு வீட்டுக்கு திரும்புகிறோம். தம்பிக்கு இந்த ஊரு தானா? என்ற சந்தேகம் படம் பார்க்கும் அனைவருக்கும் கண்டிப்பாக எழும். இந்த ஊரில் பல தடவை சொல்லி அலுத்துப் போன ஓர் கதையை மீண்டும் தூசு தட்டி எடுத்ததோடு மட்டுமல்லாமல் சுவாரஸ்யமும் திருப்பமும் கதையோட்டமும் சேர்க்காமல் அப்படியே படைத்திருக்கும் அவர்களின் நெஞ்சுரத்தை வியக்காமல் இருக்க முடியாது.

'மொத்தத்தில் தம்பிக்கு இந்த ஊரு' புளித்துப்போன பால்.

**விக்ரமாதித்தன்**



கூலிங் கிளாசின் மிக முக்கியமான பகுதி அதன் கண்ணாடி அல்லது லென்ஸ். வாங்குவதற்கு முன் லென்ஸ் சரியாக உள்ளதா அல்லது பார்வையை கோணலாக்குகிறதா என்பதைப் பரிசோதிக்க வேண்டும். ஒரு கண்ணை மூடிக்கொண்டு கண்ணாடி வழியே கதவு முனை போன்ற நேரான பொருளைப் பார்க்கவும். நேராக இல்லாமல் கதவின் முனை கோணலாக தெரிந்தால் வேறு கண்ணாடியைத் தேர்ந்தெடுக்கவும். பொதுவாக கண்ணாடி பொலிகார்பனேட் பிளாஸ்டிக், அக்ரிலிக் ஆகியவற்றால் லென்ஸ் தயாரிக்கப்படுகிறது. இவற்றில் கண்ணாடியால் ஆன லென்ஸ் சிறந்தது என்றாலும் இதன் விலையும் எடையும் அதிகம். அத்தோடு எளிதில் உடைந்து விடும். அடுத்தபடியாக பொலிகார்பனேட் பிளாஸ்டிக் சிறந்தது. இதில் விரைவில் கோடுகள் விழாது கண்ணாடி லென்ஸை விட உறுதியானது. விலை மலிவான அக்ரிலிக்கால் ஆன லென்ஸில் வெகு சீக்கிரம் கீறல்கள் விழ வாய்ப்புண்டு. கிரே மற்றும் பச்சை நிறங்களில் உள்ள லென்ஸ் உலகத்தை உள்ளபடியே காட்டும்.

# அதற்குத் தக

அஷ்ரஃப் சிஹாப்தீன்




## ஊர் விசேஷம்

இலங்கையின் மிகப் பெரிய பௌத்த தாது கோபுரங்களில் ஒன்றான ருவன்வெலிசாய அனுராதபுரத்தில் அமைந்துள்ளது. அனுராதபுர ராஜ்ய வரலாற்றில் ருவன்வெலிசாய முக்கிய இடம் வகிக்கிறது. துட்டகைமுனு மன்னர் தனது வாழ்வின் அந்திம காலத்தில் ருவன்வெலிசாயவைக் கட்ட ஆரம்பித்தார். தனது வாழ்நாளில் அதை முழுமையாகக் கண்குளிரப் பார்க்க வேண்டும் என்று பேராசையுடனிருந்த துட்டகைமுனு பாதி வேலை நடந்து கொண்டிருக்கும்போது நோயுற்றார். அவரது சகோதரனான சத்தாதிஸ்ஸ பணியைத் தொடர்ந்த போதும் துட்டகைமுனுவின் மரணத் தறுவாயில் ருவான்வெலிசாய பூரணமாகாத நிலையில் இருந்தது. எனவே அது முழுமையாகக் கட்டப் பட்டு விட்டதாகக் காட்டுவதற்கு அதை வெள்ளைப் புடவை கொண்டு அழகாக மூடி அவரிடம் காட்டினார்கள். இன்று அனுராதபுரத்தின் முக்கிய வரலாற்று அடையாளமாகவும் வணக்க ஸ்தலமாகவும் அந்தத் தாது கோபுரம் திகழ்கிறது. உலகெங்கிலுமுள்ள பௌத்த மதத்தினரும் பௌத்தரல்லாதோரும் தினமும் ஆயிரக் கணக்கில் ருவான்வெலிசாயவைத் தரிசித்து வருகிறார்கள். இரவில் ஒளி வெள்ளத்தில் ஒரு நிலாத் துண்டு போல அது ஜொலிக்கிறது.

கொழும்பிலுள்ள அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாட்டில் நாலா திசைகளிலிருந்தும் பொது மக்கள் வருகை தருகிறார்கள். பெரும் நம்பிக்கையோடும் எதிர்பார்ப்புக்களோடும் வரும் அவர்களது நிலை அநேகமாக இறுதிக்கட்ட ஈழப்போரில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்குமிடையில் அகப்பட்ட அப்பாவி மக்களின் கதியைப் போலாகி விடுகிறது.

ஒரு காரியாலயத்துக்குள் நுழைந்து தனக்குத் தேவையான அதிகாரியைத் தேடினால் அவர் அக்காரியாலயத்தில் கடமை புரியும் ஒருவரின் பெரியம்மாவின் தம்பியின் மனைவியுடைய மாமனாரின் மரண வீட்டுக்குச் சென்றிருப்பார். அல்லது 'அவர் இங்கேதான் நின்றார் இப்ப வந்துருவாரு' என்று சொல்லுவார்கள். ஆனால் பிற்பகல் வேலை முடியும் நேரம் வரை வந்து சேரமாட்டார். சிலவேளை அவர் லீவில் நின்றால் அவர் இன்றைக்கு லீவில் நிற்கிறார் என்று சொல்லுவார்கள். அப்படிச் சொல்பவர்களில் ஒருவர் லீவில் நிற்பவருக்குப் பதிலாக அவரது வேலையைக் கவனிப்பதாக லீவு விண்ணப்பத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்திருப்பார். ஆனால் அந்தக் கோப்புக்களில் ஒன்றையாவது திறந்து பார்க்க மாட்டார். வேலையை முடிக்க வந்தவர் தனது





தேவை நிறைவேறாத ஆயாசத்தோடும் கவலையோடும் திரும்பிச் செல்வார். அடுத்தநாள் கொழும்பில் தங்கி மீண்டும் அடுத்த தினம் அக்காரியாலயத்துக்குச் செல்ல வேண்டும். அதற்கிடையில் தங்குமிடம், சாப்பாடு என்று பெருந்தொகை செலவாகிவிடும். காரியாலயத்துக்குள் நுழைந்தால் அதிகாரியின் மனோநிலைக்கேற்ப நமது காரியம் கவனிக்கப்படும். அவர் ஏதும் எதிர்பார்க்கும் அலுவலராக இருந்தால் தொடர்ந்து இழுத்தடித்துக் கொண்டே வருவார். விஷயத்தைப் புரிந்துகொள்பவர்கள் ஒரு தொகையை அழுதுவிட்டு காரியத்தை முடித்துக் கொண்டு போய் விடுவார்கள். விஷயம் புரியாதவர்களும் எதிலும் நேர்மையோடு நடந்து கொள்பவர்களும் எதுவும் கொடுக்கமாட்டார்கள். அவர்களது கதி அதோ கதிதான்.


ஒரு காரியாலயத்தில் கடமை புரியும் ஒருவனுக்கு மக்கள் சேவைக்காகவே சம்பளம் கொடுக்கப்படுகிறது. சட்டத்துக்குப் புறம்பான அல்லது ஒரு வாரத்தில் நடந்து முடிய வேண்டிய காரியத்தை ஒரே நாளில் செய்து கொடுப்பதற்காகப் பணம் பெறுபவர்களை விட்டு விட்டுப் பார்த்தால் கடமை செய்வதற்கு பணம் பெறக்கூடாது. ஆனால் பலர் தமது கடமையைச் செய்வதற்கு சம்பளமும் கிம்பளமுமாகப் பெறுவது தான் உறுத்துவது. 'கடமையைச் செய். பலனை எதிர்பாராதே' என்பது கீதை வாக்கு. இந்தக் கிம்பள விடயம் இருக்கிறதல்லவா? இதைச் சிலர் மிகவும் லாவகமாகக் கையாளுவார்கள். வார்த்தை ஜாலங்களுடாகவே வாளைப் போட்டு விடுவார்கள். ஆனால் வாள் வெட்டின் வலி புரிய நீண்ட நாட்கள் செல்லும். எனக்குத் தெரிந்த ஓர் அதிகாரி, தான் எதைச் செய்து கொடுத்தாலும் ஏதாவது ஒரு பொருளை அந்த நபரிடம் இருந்து கறந்து விடுவார். உதாரணமாக நீங்கள் புத்தளம் அல்லது கற்பிட்டிக்காரராக இருந்தால் உங்களது விடயத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டு உங்களுக்கு ஒரு திகதியைச் சொல்வார். உங்களது தொலைபேசி எண்ணையும் பெற்றுக் கொள்வார். அடுத்த தினமே உங்களது வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறேன் என்று தொலைபேசியில் சொல்லுவார். நீங்கள் மகிழ்ந்து, நெகிழ்ந்து, கனிந்து போவீர்கள். அதற்கடுத்த தினம் உங்கள் ஊரில் என்ன விசேடமாகக் கிடைக்கும் என்று கேட்பார். நீங்கள் சிரித்துக் கொண்டே... இங்கே மீன் பிடிக்கிறார்கள். கருவாடுதான் உள்ளது என்று சொல்வீர்கள். இரண்டு கிலோ உப்புக் கருவாடும் நான்கு கிலோ உப்பில்லாத கருவாடுமாக எடுத்துக் கொண்டு வருமாறு திகதி குறிப்பார். நீங்களோ வேலை முடியும் திருப்தியிலும் அதிகாரிக்கு ஏதாவது கொடுத்து வைத்தால் வேறு தேவைகளுக்கு உதவுவார் என்ற நம்பிக்கையிலும் அவர் சொன்னதை விட அதிகமாகவே அள்ளிக் கட்டிக் கொண்டு வந்து கொடுத்துவிடுவீர்கள். உங்களது வேலை முடிந்து விடும். அது உங்களைப் பொறுத்த வரை பெரிய விடயம். ஆனால் அவரைப் பொறுத்தவரை அவரது கடமைகளில் ஒன்றாக இருக்கும்.

இதே அதிகாரி ஒரு முறை அனுராதபுரத்திலிருந்து தனது தேவை நிமித்தம் வந்த ஒருவருக்குத் தொலைபேசியில் உங்கள் ஊரில் என்ன விசேஷம்? என்று கேட்டார். 'சேர் இங்கு ருவன்வெலிசாய, ஜேத்தவனாராமய எல்லாம் இருக்கிறது. நீங்களும் ஒருக்கா பார்க்க வருகிறீர்களா?' என்று திருப்பிக் கேட்டார் அவர்.




மென்பொருள் உலகின் சுல்தான் ஆன மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஒரு அரிய படைப்பை உருவாக்கியுள்ளது. அனைவரும் கம்ப்யூட்டர் கேம்ஸ் உருவாக்கும் வகையில் ஒரு மென்பொருளை கண்டுபிடித்துள்ளது. அதன் பெயர் கோடு (KODU). இதனை பயன்படுத்த எந்த ஒரு கம்ப்யூட்டர் மொழியும் தெரியவேண்டிய அவசியம் இல்லை. அனைத்தும் மிக எளிய வகையில் செய்து விடலாம். இதை பயன்படுத்தி ஒரு குழந்தை கூட ஓர் விளையாட்டை உருவாக்கிவிடும். கம்ப்யூட்டர் அனைவருக்கும் உரிய சாதனமாகும் மைக்ரோசொப்டின் முயற்சியில் இது ஒரு மைல்கல். இந்த சொப்ட்வேயாரை பயன்படுத்தி மைக்ரோசொப்டின் Engilsh எனப்படும் சாதனத்துக்கும் விளையாட்டுக்களை உருவாக்கலாம்.

# இருப்பு



காலமும் சிங்கமும்



# விநியோகஸ்தர்கள் தேவை

இலங்கையிலிருந்து மாதமிருமுறை வெளிவந்து கொண்டிருக்கும் ஜனரஞ்சக பொழுதுபோக்கு சஞ்சிகையான 'இருக்கிறம்' தற்பொழுது நாடுமுழுதும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கென வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளை உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து 'இருக்கிறம்' சஞ்சிகைக்கான விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடு முழுவதும் சஞ்சிகையை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்பனை செய்யமுடியும். விநியோகஸ்தர்கள் தங்களது சுயவிபரங்களை கீழுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். மின்னஞ்சல் மூலமாகவும் உங்களது சுயவிபரங்களை அனுப்பி வைக்கலாம்.

முகாமையாளர்,
விளம்பர சந்தைப்படுத்தல் பிரிவு,
இருக்கிறம்,
03, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு 7
தொலைபேசி - 011 - 3150836, 011 - 2555529
மின்னஞ்சல் - irukiram@gmail.com

Jeya Offset Printers, No. 29 St`Sebastian Street, Colombo 12. Tel: 0112 478444